FRIENDS MISSIONARY PRAYER BAND
YOUTH & TEENS WING
A monthly Prayer Bulletin for Youth & Teens
Vol 13 - Transmit 04 - April 2020




# வெற்றியின் காலம்

– குடியேற்றங்களின் காலம் –

நம்முடைய கர்த்தராகிய
**இயேசு கிறிஸ்துவினாலே**
நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்
1 கொரி 15:57

12 STAGES OF BIBLE
CONQUEST STAGE 4

*Private circulation only*




# வெற்றியின் காலம்
## (யோசுவா)

சுமார் 25 ஆண்டுகளை உள்ளடக்கியது.

இஸ்ரவேலர் தேவனால் தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட பாலும், தேனும் ஓடுகிற கானான் நாட்டை எப்படி கைப்பற்றினார்கள் என்பதை இந்த பகுதியில் காணப்போகிறோம். மோசேக்குப் பின் இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தியவர் யோசுவா. நாடோடிகளாக சுற்றித் திரிந்தவர்கள் தாங்கள் பயன்படுத்தாத வயல்களையும் தாங்கள் வேலியடைக்காத நிலங்களையும் தாங்கள் கட்டாத வீடுகளையும் நகரங்களையும் சுதந்தரமாக அடைந்தனர்.

**யோசுவாவின் புத்தகம் 24 அதிகாரம்:**
- யோசு 1:1-5:15- கானானுக்குள் நுழைதல்
- யோசு 6:1-12:24-போரிட்டு நாட்டை கைப்பற்றுதல்
- யோசு 13:1-22:9 - நாட்டைப்பகிர்ந்தளித்தல்
- யோசு 22:10-22:34 - உட்பூசல் தவிர்க்கப்படல்
- யோசு 23:1-24:33 - யோசுவாவின் பிரிவு உரையும், மரணமும் யோசுவாவின் புத்தகம் பதிவு செய்கிறது

1.இஸ்ரவேல் தேசத்தின் படையெப்பு, வெற்றி மற்றும் குடியேற்றத்தை இந்தப் புத்தகம் விவரிக்கிறது. கானானைக் கைப்பற்ற அவர்கள் பல போர்களை நடத்தினார்கள். (யோசு 6:1-12:24)
- ▲ எரிகோவின் அழிவு (யோசுவா 6)
- ▲ ஆயியின் வெற்றி மற்றும் தோல்வி (யோசுவா 7:1-8:29)
- ▲ ஏபால் மலையில் உடன்படிக்கையைப் புதுப்பித்தல் (யோசுவா 8:30-35)
- ▲ மத்திய கானானில் பிற பிரச்சாரங்கள், கிபியோன் மக்களால் வஞ்சிக்கப்படுதல் (யோசு 9:1-27)
- ▲ தெற்கு கானானில் பிரச்சாரங்கள் (யோசு 10:1-43) வடக்கு கானானில் பிரச்சாரங்கள் (யோசு 11:1-15)
- ▲ கைப்பற்றப்பட்ட நிலங்களின் சுருக்கம் (யோசு 11:16-23
- ▲ தோற்கடிக்கப்பட்ட மன்னர்களின் சுருக்கப்பட்டியல் (யோசு 12:1-24)




2.யோசுவாவின் புத்தகம் யாத்திராகமம் புத்தகத்தின் எதிரொலியாகும். கடவுள் எவ்வாறு தம் மக்களை அடிமைத்தனத்திலிருந்து வெளியேற்றினார் என்பதை யாத்திராகமம் பதிவு செய்கிறது.பாலும்,தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு அழைத்துச் சென்றார் என்று சொல்கிறார்.உபா 6:23ல் இந்த இரண்டு புத்தகங்களையும் மோசே சுருக்கமாகக் கூறுகிறார்.
3.யாத்திராகமம் புத்தகத்தில் கடவுள் தம் மக்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வர செங்கடலைப் பிரித்தார். இங்கே யோசுவாவில் அவர் தம் மக்களை கானானுக்கு அழைத்து வருவதற்காக யோர்தான் ஆற்றின் நீரைப் பிரித்தார்.கடவுள் தம்முடைய மக்கள் வெளியேறுவதையும் நுழைவதையும் உறுதிப்படுத்த தேவையான அனைத்தையும் செய்கிறார் (யாத் 14:21,22; யோசு 3:13-17).
4.யோசுவா பழைய ஏற்பாட்டின் எபேசியர் என்று அழைக்கப்படுகிறார்.யோசுவா என்ற பெயருக்கு யேகோவா நமது இரட்சிப்பு என்று பொருள்.இயேசு என்பதின் எபிரெயச் சொல் இதுவே.நமது இரட்சிப்பின் அதிபதியாகிய கிறிஸ்துவைப் போன்று யோசுவா இஸ்ரவேலின் அதிபதியாக திகழ்ந்தார்.
5.இந்தக் காலத்தில் எரிகோ நகரத்திலிருந்த ராகாப் என்னும் வேசி இரட்சிக்கப்படுகிறாள்.பாவத்திலிருந்து மனந்திரும்பி,கர்த்தரை முழுமனதோடு ஏற்றுக்கொண்டு,பரிசுத்த வாழ்க்கை மேற்கொண்டு,கர்த்தருடைய குடும்பத்தினராக வாழ்வோருக்கு ராகாப் முன்னடையாளமானவள் (மத் 1:5).விசுவாசத்தினால் கிரியை செய்வதற்கு ராகாப் நமக்கு முன்மாதிரியாக திகழ்கிறாள் (யாக் 2:25). ராகாபின் வீட்டு ஜன்னலில் கட்டி வைக்கப்பட்ட சிகப்புத்துணி இரட்சிப்பிற்கு வழிவகுக்கும் கிறிஸ்துவின் இரத்தத்தின் அடையாளம்.
6.இங்கே யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஆகான் சாபத்தீடானதிலே சிலவற்றை எடுத்துக் கொண்டான்.கர்த்தரின் கட்டளையை ஆகான் துணிகரமாக மீறியதால் இஸ்ரவேல் புத்திரர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது. இதன் விளைவாக ஆகானும், அவனுடைய குடும்பமும் அழிக்கப்படுகிறது (யோசு 7:24-26).




பங்கிட்டு கொடுத்த பூமி

7.இங்கே கர்த்தருடைய சேனையின் அதிபதி யோசுவாவை சந்திக்கிறார் (யோசு 5:13-15).கிபியோனியின் குடிகளோ தந்திரமான யோசனைப் பண்ணி யோசுவாவுடன் உடன்படிக்கை செய்கின்றனர் (யோசு9:3-15).
7.இங்கே யோசுவா மூலம் கர்த்தர் செய்த இரண்டு அற்புதங்களை பார்க்கிறோம்.கர்த்தரின் வார்த்தையின்படி, இஸ்ரவேல் புத்திரர் எரிகோ பட்டணத்தை 7 நாள் அமைதியாக சுற்றி வந்தனர்.ஏழாவது நாள் நகரத்தை சுற்றும் போது ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். அப்பொழுது எரிகோ பட்டணத்தின் அலங்கம் இடிந்து விழுந்தது (யோசு 6). இங்கே யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசிய பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக, சூரியனே, கிபியோன் மேலும், சந்திரனே நீ ஆயலோன் பள்ளத்தாக்கின் மேலும் தரித்து நில்லுங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் அஸ்தமிக்க தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல் முழுவதும் நடுவானத்தில் நின்றது. இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை அதற்கு பின்னுமில்லை. கர்த்தரே இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார் (யோசு 10:12-14).


எரிகோ


ஆயலோன்


ஆயியின் வெற்றி

12 STAGES OF BIBLE
CONQUEST STAGE 4

# வெற்றியின் நாயகர்

*Editorial*

வாலிபத்தலைவர்களுக்கு சிலுவையில் வெற்றிசிறந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இம்மாதம் குடியேற்றங்களின் காலம் அதாவது வெற்றியின் காலம் என்பதை குறித்து தியானிக்க இருக்கிறோம். இஸ்ரவேலின் அனைத்து கோத்திரங்களும் வாக்குத்தத்த நாடாகிய கானானை வெற்றிக்கொண்டு பங்கிட்ட நிகழ்ச்சியை யோசுவா நூல் விளக்குகிறது.மோசே மரித்த பின்னர் இஸ்ரவேலுக்குத் தலைவரான யோசுவாவின் பெயரிலேயே இந்த காலம் அமை ந்துள்ளது(யோசுவா 1:1-3). ஆனாலும் கர்த்தரே இந்த காலத்தில் கூறப்படும் நிகழ்ச்சிக்கு காரணகர்த்தா ஆவார்.அவரே கானானைச் சுதந்தரிக்க இஸ்ரவேலருக்கு முன் சென்று அவர்களின் முன்னோர்களோடு செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுகிறார். இந்த உடன்படிக்கை முதலாவது ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டது (ஆதி 12:1-3, 15:13-21, 17:18). பின்னர் மோசேக்கும் இவ்வாக்குறுதி கொடுக்கப்பட்டது (யாத் 3:7,8,17). அதே நேரத்தில் கானானிற்குள் செல்வதற்கு முன்பாகவும் (யோசு 1:6-9) கானானை வெற்றிக்கொண்ட பின்னரும் (24:15) தேவன் மீது வைக்க வேண்டிய நம்பிக்கையும், அவரது கட்டளைகளுக்குக் கீழ்படியவேண்டிய அவசியத்தையும் இந்த பகுதிகள் வலியுறுத்துகின்றன.

யோசுவா என்ற பெயருக்குக் “கர்த்தர் மீட்கிறவர்” என்பது பொருள். இதுவே இந்நூலின் மையக்கருத்தாகும். கர்த்தரை நம்புவோருக்கு அவர் உதவுகிறார். தனிப்பட்ட நபர்களையும் தமது திட்டம் நிறைவேற பயன்படுத்துகிறார் (யோசுவா,எலியாசார், ராகாப், காலேப்) மேலும் யோர்தானை கடந்து செல்லுதல், எரிகோவைத் தகர்த்தல்,கற்களை விழப்பண்ணுதல் ஆகியவற்றின் மூலம் இயற்கையின் மீது தமக்குள்ள வல்லமையையும், அவர் மெய்ப்பித்துக் காட்டுகிறார்.

வாக்குதத்த நாடாகிய கானானில் இஸ்ரவேல் மக்கள் வாழ்ந்த வரலாற்றை உபாகமம் முதல் இராஜாக்களின் இரண்டாம் அத்தியாயம் வரையிலும் காணலாம்.இச்சிறந்த வரலாற்றின் ஒரு பகுதியே யோசுவா நூலாகும். இப்பகுதி முழுவதிலும் நிலம் கர்த்தரின் கொடை என்பதும், அவரது கட்டளைகளைக் கைக்கொண்டால் மட்டுமே அந்த நிலம் (கானான்) அவர்களுடையதாக இருக்குமென்றும் வலியுறுத்தப்படுகிறது.ஏனெனில் கர்த்தரின் உதவியால் மட்டுமே இஸ்ரவேல் மக்கள் கானானைச் சுதந்தரித்தனர். இதே கருத்து இந்நூலின் இறுதியில் மீண்டும் வலியுறுத்தப்படுவதைக் காணலாம் (23:1-24, 28)

யோசுவா புத்தகம் இரண்டு முக்கியப்பகுதிகளை உள்ளடக்கியது முற்பகுதியில் (1-12) கானானிலுள்ள பட்டணங்களைக் கைப்பற்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது.பிற்பகுதியில் (13-22) கோத்திரங்களின் எல்லைகளும் அவற்றில் உள்ளடங்கிய பட்டணங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.23-24 ஆகிய இறுதி அதிகாரங்களில் யோசுவாவின் பிரிவுரையும் அவரது மரணமும் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக சீகேமிலே யோசுவாவின் தலைமையின் கீழ் இஸ்ரவேல் மக்கள் அனைவரும் கூடி ஆண்டவருக்கு எப்பொழுதும் கீழ்படிவோம் என்று உறுதி எடுத்துக்கொண்ட உடன்படிக்கை நிகழ்ச்சியும் இப்புத்தகத்தில் இடம் பெறுகிறது. நாமும் சென்றடைய வேண்டிய பரம கானானைப்பற்றி யோசுவாவின் புத்தகத்திலிருந்தும், குடியேற்றங்களின் காலத்திலிருந்தும் கற்று அதன்படி நடந்து தேவன் நமக்கு என்று உரித்தாக்கிய வெற்றியை நம் வாழ்விலும் கண்டுபிடிப்போம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம்


kerithmagazine@fmpb.org
9841973060 , 9445001563

இயேசு கிறிஸ்துவின் பணியில்
ப.செல்வின்



**கேரீத்**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும்
வாலிபர் மற்றும் இளம் வாலிபர்
ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்

**தரிசனம்**

இந்தியாவின் எதிர்கால தூண்களாகிய
இளைஞர்கள் உள்ளத்தில் பரம மன்னாவை
விதைத்திடவும், சிந்தனைக் கூர் கொண்டு
இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையில்
இளைஞர்களுக்கான ஓர் இறை படைப்பு.

**நோக்கம்**

வாலிபர் – இளம் வாலிபர்
ஜெபக்குழுக்களை வலுப்படுத்தும் மாத இதழ்

**தயாரிப்பு & வடிவமைப்பு**

வாலிபர் மற்றும் இளம் வாலிபர் பிரிவு

FMPB Youth wing
9, Rhenius Street
Palayamkottai
Tirunelveli - 627002
Cell : 9003251982

FMPB Youth wing,
90/86 Basanthi Devi Aparts,
Kothaval Chavadi St
Saidapet, Chennai -15
Cell : 9841032224

www.fmpbyouth.org
Kerithmagazine@gmail.com

தனிப்பிரதி ரூ.25/-
ஆண்டு சந்தா ரூ.250/-

Youth & Teens Wing
29,High School Road
Ambattur,Chennai-53
Ph :044-26570404 Extn.277

சந்தா மற்றும் முகவரி
மாற்றத்திற்குக் கூப்பிடுங்க
Cell : 9445001563
9445052797


**ஜெபக்குழுத் தலைவர்களுக்கு...**

ஜெபக்குழுவில் நீங்கள்
தியானிப்பதற்காகவும் ஜெபிப்பதற்காகவும்
கேரீத் இதழின் செய்திகளும்
ஜெபக்குறிப்புகளும் நான்கு வாரங்களாகப்
பிரித்து நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம்.
ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றைத்
தனியாக எடுத்து ஜெபநேரத்தில்
பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனைய
பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவிற்கு வரும்
வாலிபர்களுக்கு படிக்கக் கொடுக்கலாம்.
ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை
மாதம் ஒருமுறை சந்திப்போம்.
பயன்படுத்துங்கள், ஜெபக்குழுவை
வலுப்படுத்துங்கள்...


**தொடர் ஜெபத்திற்கு**

**அறைகூவல்**
மாத இதழ் பயன்படுத்தவும்




பாலஸ்தீனாஎன்றுஅழைக்கப்படும்இந்நாடு மத்திய தரைக்கடலை மேற்கு எல்லையாகவும், யோர்தான் நதியைக் கிழக்கு எல்லையாகவும், காசாவைத் தெற்கு எல்லையாகவும், லீபனோனை வடக்கு எல்லையாகவும் கொண்டிருந்தது. இது கானான் நாடென்றும் புனித நாடென்றும் அழைக்கப்படுகிறது. தற்காலத்தில் இஸ்ரவேல் என்ற பெயரே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

வேதாகமத்தில் இது பாலும் தேனும் ஓடும் நாடென்றும் (உபா 26:9,15), வாக்குதத்த நாடென்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில், கர்த்தர் ஆபிரகாமுக்கும் அவர் சந்ததிக்கும் இத்தேசத்தை கொடுப்பதாக வாக்களித்திருந்தார் (ஆதி 17:7,8, எண்34:1-12).நானூறுஆண்டுகாலவனாந்திரப்பயண த்திற்கு பின்னர், வாக்களிக்கப்பட்ட இந்த நாட்டை ஆபிரகாமின் சந்ததியார் புவியியல் அடிப்படையிலும், ஆன்மீக அடிப்படையிலும் தங்களுக்கு உரியதாக்கிக் கொண்டனர்.

இஸ்ரவேல் கோத்திரத்தார் இந்நாட்டில் குடியேறும் முன்னர் இப்பகுதி கானான் என்றும், இதில் வசித்த மக்கள் கானானியர் என்றும் அழைக்கப்பட்டனர். ஏறத்தாழ கி.மு. 1200-ல் இஸ்ரவேல் மக்கள் இந்நாட்டைக் கைப்பற்றிய பின்னர் இது கானான் என்று அழைக்கப்பட்டது.கி.மு. 333-ல் கிரேக்கர்கள் இதைக் கைப்பற்றிய பின்னர் இது பாலஸ்தீனா என்று அழைக்கப்பட்டது. மத்திய தரைக்கடலின் தென்கிழக்கு எல்லையில் அமைந்துள்ள ஒரு குறுகிய பகுதியில் வசித்த மக்கள் பெலிஸ்தர்கள் எனப்பட்டனர். இம்மக்களின் பெயரிலேயே இது பாலஸ்தீனா என்று அழைக்கப்பட்டது.

பாலஸ்தீனாவின் வடக்கு (தாண்) தெற்கு (பெயர்செபா) எல்லைகளுக்கிடையேயுள்ள தூரம் ஏறத்தாழ 240 கி.மீ ஆகும்.மேற்கு மற்றும் கிழக்கு எல் லைகளில் இரண்டு பள்ளத்தாக்குகள் உள்ளன. தெற்கு வடக்காக அமைந்துள்ள கிழக்கு எல்லையிலுள்ள பள்ளத்தாக்கில் யோர்தான் நதி ஓடுகிறது. இந்தச் செழிப்பான பகுதிகளுக்கிடையே ஆங்காங்கே சிறிய மலைத்தொடர்களும் உள்ளன. எனவே, இங்கு ஆடு மேய்க்கும் தொழில் நடைபெறுகிறது. வறண்ட பாலைவனப்பகுதி, யோர்தானுக்குக் கிழக்கு மற்றும் தெற்குப்பகுதிகளிலும், சவக்கடலுக்கு மேற்கேயும் அமைந்துள்ளது.

வணிகத்தொழில் செய்பவர்கள் மத்திய தரைக்கடலிலுள்ள துறைமுகத்திற்குச் செல்ல வேண்டுமென்றாலும் இந்த நாட்டின் நிலப்பகுதி வழியாகத் தான் செல்ல வேண்டும்.எனவே, இந்த பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் பலநாட்டினர் முயன்று போர்களில் ஈடுபட்டிருந்தனர். இதினிமித்தம் பல துன்பங்களை இஸ்ரவேல் மக்கள் சந்திக்க நேரிட்டாலும் இந்த நாடு தேவன் தங்களுக்குத் தந்த ஈவு என்பதை அவர்கள் மறக்கவும் இல்லை. தங்கள் நம்பிக்கையிலிருந்து ஒருபோதும் பின் வாங்கவும் இல்லை.

யோசுவா புத்தகத்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் கானானுக்கு செல்லும் முழு விவரமும் எழுதப்பட்டிருக்கிறது.ஒருசிலர் கானானை பரலோகத்திற்கு ஒப்பிட்டு துதித்து பாடுவதுமுண்டு அது தவறானது. ஏனென்றால் பரலோகத்தில் நாம் மேற்கொண்டு ஜெயக்க வேண்டிய ராட்சதர்களோ, தீய சக்திகளோ கிடையாது.கானான் என்பது இவ்வுலகில் நாம் வெற்றியுள்ள வாழ்க்கையை குறிக்கிறது.இவ்வுலகில் நாம் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ மேற்கொள்ளவேண்டிய காரியங்களையும் குறிக்கிறது.கானான் புதிய ஏற்பாட்டின்படி, இது ஆவிக்குரிய வாழ்வை குறிக்கிறது. நமது முழு சரீரத் தையே கானானாக மையப்படுத்தி, எழுதியிருக்கிறது, நம்முடைய சரீரத்திற்குள்ளாக இருக்கும் தீயசக்திகளையும், ராட்சதர்களாகிய பாவங்களையும் வீழ்த்தி, ஜெயமுள்ள வாழ்வை வாழ்ந்திட இது குறிக்கிறது. நமது சரீரமாகிய கானானுக்குள் அநேக ராட்சதன்மை நிறைந்த குணங்கள் உண்டு.அதை ஒன்றன்பின் ஒன்றாக மேற்கொண்டு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ இந்த யோசுவா புத்தகம் வழி வகுக்கிறது.

இஸ்ரவேல் மக்கள் கானானை சென்றடைய இரண்டு விதமான தண்ணீர்களை கடந்து போக வேண்டியதாக இருந்தது. அவைகளில் ஒன்று சிவந்த சமுத்திரம், மற்றொன்று யோர்தான் நதி இவ்விரண்டு தண்ணீர்களும், இரண்டு விதமான மரணத்தை குறிக்கிறது.செங்கடல் முதலாவது ஞானஸ்நானமாகிய பழைய மனிதனின் மரண த்தையும், பழைய பாவம்,பரிசுத்தத்திற்கு தூரமாக்கும் பழைய மனிதனின் செயல்களும் ஒரே நேரத்தில் சாகக்கடிக்கப்படுகிறதை குறிக்கிறது.கிறிஸ்து வோடு கூட சிலுவையில் அறைவதை குறிக்கிறது. இது நாமாக அல்ல கடவுளே நமக்காக செய்த காரியம்.இரண்டாவது மரணம் யோர்தான் நதியை கடப்பதும் கானானை சென்றடைவதும், நமது சரீரத்தையும், அதின் இச்சைகளையும் மேற்கொள்வதையும் குறிக்கும்.நமது பழைய மனிதன் மரிப்பது வேறு, நமது சரீர இச்சைகள் ஒன்றன்பின் ஒன்றாய் ஜெயிப்பது வேறு.

நாம் அவிசுவாசிகளாக இருக்கும் போது,
பாவத்தை செய்ய விரும்புவோம்.ஆனால் விசுவாசிகளாக
மாறிய பின்பு பாவத்தை விரும்பாமல் வெறுக்கும் அனுபவம்
அதுவே வெற்றியின் வாழ்வு.

பார்வோனையும், அவன் சேனையையும் ஒரே நேரத்தில் அழித்துப்போட்டார். அது செங்கடல் அனுபவம் அதை ஆண்டவரே செய்தார்.ஆனால் யோர்தான் அனுபவம் என்பது புதிய மனிதனாக கடந்து செல்லும் போது நமக்குள்ளாக இருக்கிற இராட்சதர்கள் அரக்கர்கள் போல, மாம்ச கிரியைகளை அழிப்பதை குறிக்கிறது.அதை ஒன்றன்பின் ஒன்றாக வீழ்த்தி வெற்றிபெற நமது ஆண்ட வர் வழிநடத்துகிறார். யோசுவா புத்தகத்தின் மையப்பொருள் நமது சரீர இச்சை களை தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை ஒன்றன்பின் ஒன்றாக ஜெயிப்பதையே குறிக்கிறது.போராடி ஜெயிப்பதில் நமக்கு ஒரு தலைவர் உண்டு.இஸ்ரவேல் மக்களுக்கு பழைய ஏற்பாட்டில் கானானை போராடி மேற் கொள்வதில் யோசுவா படைதளபதியாக முன்சென்றார்.

புதிய ஏற்பாட்டில் நமது இயேசு கிறிஸ்து இரட்சகராக, மீட்பராக நமக்கு முன் செல்கிறார்.இஸ்ரவேல் மக்களும் எப்படி சத்துருவை மேற்கொண்டு வெற்றியை சுதந்தரித்தார்களோ அதேபோல் நாமும் நமது வாழ்வில் சரீரபிரகார மாக மேற்கொள்ள வேண்டிய பாவங்களை ஒன்றன்பின் ஒன்றாக வீழ்த்தி முழு சரீரத்தையும் ஆண்டவருக்கென்று சுதந்தரித்து கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும். செங்கடலில் பழைய மனிதனை வீழ்த்துவது ஆண்டவரின் பங்கு, யோர்தானை கடந்து எதிரிகளை வீழ்த்தி,மேற்கொண்டு வெற்றியை சுதந்தரிப்பது நமது பங்கு.நாம்தான் ஒவ்வொன்றாக வீழ்த்த வேண்டும்.நமது வாழ்வில் முழுவதும் ஆக்கிரமித்துள்ள கானானியர் யார் என்று கண்டுபிடித்து அவர்களை மேற்கொண்டு சுதந்தரிப்போம்.நாம் இன்னும் மேற்கொள்ள முடியாதிருக்கும் பாவசிந்தைகளோ, தவறான உறவுகளோ, கண்ணின் இச்சைகளோ, கரங்களின் செயல்களோ, தீய எண்ணங்கள் இதுபோன்ற அனைத்து சரீரப்பிரகாரமான பாவங்களை மேற்கொண்டு வெற்றி சிறந்தவர்களாய் வாழ நமக்காக வெற்றி சிறந்த இயேசு கிறிஸ்து நம்மோடு கூட வருகிறார். சாத்தானின் சதிகளை மேற்கொண்டு சரித்திரம் படைப்பவர்களாய் வெற்றியுள்ள வாழ்வை தொடர்வோம்.

Bro.Selwyn

# காலேப்



அன்பு நண்பர்களே! இந்த மாதம் நாம் காலேப்பைக் குறித்துப் படிப்போம். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டு, பாரான் வனாந்தரத்தில் பாளயமிறங்கினளார்கள். அங்கு கர்த்தர் மோசேயை 12 கோத்திரங்களிலிருந்து ஒவ்வொரு நபரை தெரிந்தெடுத்து கானான் தேசத்தை வேவுப் பார்க்கச் செல்லும்படி அனுப்பச் சொன்னார்.

யார் அந்த 12 கோத்திரத்தில் நியமிக்கப்பட்ட நபர்கள்?(எண் 13:4-15)

1. சிமியோன்-சாப்பாத்
2. யூதா - காலேப்
3. ரூபன் - சம்மூவா
4. இசக்கார் - ஈகால்
5. எப்பிராயீம்- ஓசேயா
6. பென்யமீன் -பல்த்தி
7. செபுலோன்-காதியேல்
8. யோசேப்பு - காதி
9. தாண் - அம்மியேல்
10. ஆசேர் - சேத்தூர்
11. நப்தலி - நாகபி
12. காத் - ரன்கவேல்

மோசே அந்த தேசத்து மனிதர்கள், வாழ்விடம், நிலத்தின் செழிப்பு போன்றவற்றைக் குறித்து அறிந்து வரும்படி அவர்களுக்கு கட்டளையிட்டார். கூடவே கனிகளையும் பறித்து வரும்படி சொன்னார். நியமிக்கப்பட்டவர்கள் அத்தேசத்தை சுற்றிப்பார்த்து, 40 நாட்கள் சென்றபின்பு அதின் திராட்சை குலையை பறித்து ஒரு தடியில் சுமந்து கொண்டு வந்தார்கள்.

அவர்கள் மோசேயை நோக்கி, அந்த தேசம் நல்ல தேசம் என்றும், பாலும் தேனும் ஓடுகிற தேசமென்றும் சொன்னார்கள். ஆனால், அங்கு வாழ்பவர்கள் பலவான்கள், இராட்சத மனிதர்கள். அதனால் அவர்களை மேற்கொள்ள முடியாது. அவர்கள் நம்மை பட்சித்துப் போடுவார்கள் என்றும் துர்ச்செய்தியைப் பரப்பினார்கள். இவர்களில் காலேப் மட்டும், அந்த ஜனத்தை மேற்கொண்டு கானான் தேசத்தைப் பிடிக்க முடியும் என்று தைரியத்தோடு கூறினான்.

## ஆவிக்குரிய போராட்டம் என்றால் என்ன?

நம் வாழ்வில் நாம் செய்ய நினைக்கும் காரியங்களுக்கு எதிராக பலவிதமான எதிர்மறையான சிந்தனைகள் வருவதுண்டு. இவைகள் தேவனோடிருக்கும் நம் உறவை சீர்குலைக்கின்றன. இப்படிப்பட்ட சிந்தனைகளை பிசாசு கொண்டுவருகிறான். நம் தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைத் தராமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையேத் தந்திருக்கிறார். நம் வேதத்தில் 365 முறை பயப்படாதே என்று நம் தேவன் நம்மைப்பார்த்து கூறுகிறார். பரிசுத்த ஆவியானவர் என்ன செய்ய வேண்டும் என்பதை நமக்கு தெளிவாய் உணர்த்துவார். அதை உணர தேவனுடைய சத்தத்தை அறியும் அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு நாம் வேதம் வாசித்து, அதனை தியானிக்க வேண்டும். இதை நாம் இன்றே வாஞ்சித்து செய்வோமாக.

## பாவத்தின் ஆரம்பம் எது?

இஸ்ரவேலர் காலேப் வழியாய் வந்த கர்த்தருடைய சித்தத்தை உணராதிருந்தனர். இவ்வித மாம்சீக சிந்தனை நம்மை பாவத்தில் விழச்செய்யும். இங்கே இஸ்ரவேல் மக்கள் புலம்பத் தொடங்கினார்கள். தங்களுக்கு வேறு ஒரு தலைவரைத் தெரிந்தெடுத்து எகிப்திற்கே திரும்ப போவோம் என்றுக் கூறி, மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். இதை அறிந்த யோசுவாவும், காலேபும் தங்கள் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டார்கள்.

ஆம், நம் மாம்சீக சிந்தனை நம்மை முறுமுறுக்க செய்யும். மட்டுமல்லாமல் நம்மை தேவனைவிட்டு பிரித்து எதிர்திசையில் பயணிக்க செய்யும். ஜாக்கிரதையாய் நடப்போம்!!

## கர்த்தரின் மனஉருக்கம் எப்போது வரும்?

காலேப் இஸ்ரவேல் மக்களிடம் கானான் தேசத்தைப் பற்றி தெளிவாக கூறியதோடு, கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்று உறுதியாக கூறியதையும் அவர்கள் ஏற்கவில்லை. உடனே கர்த்தருடைய மகிமை ஆசரிப்பு கூடாரத்தின் மேல் காணப்பட்டது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் அவிசுவாசத்தைக் குறித்து கோபம் கொண்டார். மோசேயோ தன் ஜனத்தின் பாவத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டார். கர்த்தர் அவன் வார்த்தையின்படி மன்னித்தார் (எண் 14:20). நம் இந்திய தேசமும் இருளில் இருந்து வெளிச்சத்தை அறியாமலிருக்கிறது. இவர்களுக்காக ஜெபிப்பது நம் தலைமேல் விழுந்த கடமையாய் இருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேலரை மன்னிக்க மோசேயின் ஜெபம் காரணமாக இருந்தது. அதே போல், ஆண்டவர் இந்தியர்களை மன்னிப்பது நம் முழங்காலில் இருக்கிறது.

## எப்போது வாக்குத்தத்தம் நிறைவேறும்?

விசுவாசியாத அந்த 10 பேரும், இஸ்ரேவேல் மக்களும் கானான் தேசத்தைக் காண்பதில்லை என்று கர்த்தர் கூறினார். ஆனால் காலேபைக் குறித்தோ, என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாய் இருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனை சேரப்பண்ணுவேன் (எண் 14:24) என்று ஆணையிட்டார். இறுதியில் காலேப் எபிரோனை தேவன் வாக்குரைத்தப்படி சுதந்தரித்துக் கொண்டான். கர்த்தருக்கு பிரியமாயும், கர்த்தரை பின்பற்றுகிறவர்களாயும், கர்த்தருடைய ஆவியை உடையவர்களாயும் நடக்க வேண்டும். அப்பொழுது நம் கர்த்தர் நமக்கு செய்ய நினைக்கும் காரியங்கள் நமக்கு கைக்கூடும். அவர் கொடுத்த வாக்குத்தத்தம் நம் வாழ்வில் நிறைவேறும்.

## பாவ மன்னிப்பு போதுமா?

இஸ்ரவேலர் தாங்கள் செய்தது தவறு என்று உணர்ந்தார்கள். ஆகிலும் கர்த்தர் சித்தம் அறியாமல் கானான் தேசத்திற்கு போர் செய்ய சென்றார்கள். போரில் முறியடிக்கப்பட்டு துரத்திவிடப்பட்டார்கள். நம் பாவத்தை அறிக்கை செய்வது முக்கியமாய் இருந்தாலும், பொறுமையாய் அவர் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, அவர் சத்தத்தைக் கேட்டு நடக்கக் கடவோம்!! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!!

Bro.Tyson

சாதாரண மனிதனின் விசுவாச சொல்லுக்கு செவிசாய்த்த சர்வ வல்லமையுள்ள தேவன். பிரியமானவர்களே, யார் இந்த சாதாரண மனிதன் அவர் செய்த காரியம் என்ன? அவர் நூனின் குமாரன், யுத்த வீரன் கானானை வேவு பார்க்க போன 12 பேரில் நற்செய்தி கொண்டுவந்த இரண்டு பேரில் ஒருவர். மோசேயை போல ராஜ குடும்பத்தில் வளர்க்கப்பட்ட பின்னணி இல்லாத சாதாரண இஸ்ரவேலர் தான் யோசுவா. He was born in Egypt and named Hoshea, which means salvation (Num 13:18,16). Later Moses changed his name to Joshua which means Jehovah is salvation which is Hebrew equivalent to the name of Jesus."

இந்த யோசுவா தன்னுடைய தலைவர் மோசேயிடம் பல நல்லப்பண்புகளை கற்றவர். அவரைப் போல ஜெபிக்கவும் சூழ்நிலைகள் எப்படிப்பட்டதாயினும் தேவனையே சார்ந்து கொள்ளவும், வெற்றியின் வேளையிலும், தோல்வியின் வேளையிலும் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்று அறிந்திருந்தார். தேவனுடைய வல்லமையை குறைத்து மதிப்பிடாதவர். மோசேக்கு அடுத்து இஸ்ரவேலை வழிநடத்தும் தலைவராக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டார். தேவனால் வாக்குப்பண்ணப்பட்ட கானானை சுதந்தரிப்பதைத் தடுக்கும் தடைகளை மேற்கொண்டு அதை சுதந்தரித்து, அதை இஸ்ரவேலுக்கு பங்கிடும் பொறுப்பு இந்த யோசுவாவிற்கு கொடுக்கப்பட்டது. யோசுவாவின் காலத்தில் தேவன் பல அற்புதங்களை செய்தார். அதில் பிராதானமான சூரியனும் சந்திரனும் தரித்து நிற்க மூன்று காரணங்கள் உண்டு:

1. இரவில் போர் செய்ய கூடாது.
2. இருட்டில் எதிரிகள் தப்பிவிடலாம்.
3. எதிரிகளை மேற்கொள்ள இன்னும் நேரம் தேவை.



# சொன்னால் போதும்

முடிவில் எதிரிகளை யோசுவாவின் கையில் ஒப்புக்கொடுத்து பெரிய வெற்றியை தேவன் தந்தார். யோசுவாவின் வெற்றிக்கு மூன்று காரணங்கள்:

**Promise**

**1. வாக்குதத்தம்:** தேவன் யோசுவாவிற்கு வாக்கு கொடுக்கிறார். யோசு 10:8 'கர்த்தர் யோசுவாவை நோக்கி, அவர்களுக்கு பயப்படாயாக உன் கைகளில் அவர்களை ஒப்புக்கொடுத்தேன். அவர்களில் ஒருவரும் உனக்கு முன்பாக நிற்பதில்லை' என்கிறார்.

**Plan**

**2. திட்டமிடுவது:** தேவன் வெற்றியை தருவார் என்பது நிச்சயமானாலும் அதை அடைவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுக்கிறார் யோசுவா. யோசு 10:9ல் யோசுவா கில்காலிலிருந்து இராமுழுவதும் நடந்து, திடீரென்று அவர்கள் மேல் வந்துவிட்டான். கில்காலிலிருந்து கிபியோனிற்கு போகும் பாதை மிகவும் கடினமான மலைப்பாதை. யோசுவா தன் வீரர்களுடன் அந்த கடினமான பாதையை தாண்டி, யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் எதிரிகளை தாக்குவதை பார்க்கலாம். தேவன் அவர்களுக்கு அங்கே உதவி செய்கிறார். ஐந்து இராஜாக்கள், கடினமான யுத்தம் என்றும் அவர்களை மேற்கொள்ள வேண்டியது அநேகம் இந்த இக்கட்டான சூழ்நிலை.

**Prayer**

**3. ஜெபம்:** யோசுவா 10:12ல் கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிற அந்நாளிலே யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக 'சூரியனே நீ கிபியோன் மேலும், சந்திரனே நீ ஆயலோன் பள்ளத்தாக்கின் மேலும் தரித்து நில்லுங்கள்' என்றான். கடினமான சூழ்நிலையில் தேவனை நோக்கி ஜெபிக்கிறான். கானானியரின் பயபக்திக்குரிய சூரியனும், சந்திரனும் தன்னை படைத்தவரின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு ஒரு பகல் முழுவதும் நிற்கின்றது. சங் 74:16ல் பகலும் உம்முடையது, இரவும் உம்முடையது; தேவரீர் ஒளியையும் சூரியனையும் படைத்தீர் என்று பார்க்கிறோம்.

யோசுவா வெற்றிபெற்றார். யோசுவா 10:14ல் இப்படி கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல் கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை, அதற்கு பின்னுமில்லை. கர்ததர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார். தேவன் மோசேயின் சொல் கேட்டார்(யாத் 8:13), எலியாவின் சொல் கேட்டார் (1 இராஜா 17:1), நமது சொல்லும் கேட்பார் (ஏசா 45:11). வாக்குதத்தம் பண்ணப்பட்ட பரம கானானை சுதந்தரிக்கும் படி இன்று நம்மையும் தெரிந்து கொண்டிருக்கிறார். இருளின் அதிகாரியாகிய பிசாசானவனால் நீதியின் சூரியனாம் இயேசுவின் முன்பாக நிற்கவே முடியாது. நாம் செய்ய வேண்டியது நீதியின் சூரியனாம் இயேசுவிற்கு நம் உள்ளத்தில் இடம் கொடுக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே பாவ இருள் நம்மைவிட்டு போய்விடும். தேவனுடைய வார்த்தை நாம் அனுதினமும் கேட்டு அதன்படி செய்வோரின் சொல்லை அவர்கேட்டு இயற்கையையே மாற்றிவிடுகிறார். நாம் இன்னும் அவரை அறிய யோசுவாவைப்போல் ஜெபிப்போம். உழைப்போம். வெற்றி பெறுவோம்.



- *Mrs Stella Anand*

1st week Message

## வாக்குத்தத்தை பெறுவதில் சவால்கள்

இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து மீட்க, தேவன் மோசே மூலம் அநேக அற்புத அடையாளங்களை செய்தார். 40 ஆண்டுகள் வனாந்திர பயணத்தில் அனுதின உணவு, உடை,உறைவிடம், அந்நியரிடமிருந்து பாதுகாப்பு வழங்கி, கானான் எல்லைவரை பொறுமையோடு பரிசுத்தத்தில் சமரசம் செய்யாது தேவன் வழி நடத்தினார். இப்பொழுது மோசே மரித்தப்பின், தேவன் நுனின் குமாரனாகிய யோசுவாவை அடுத்த தலைவனாக தேர்ந்தெடுத்தார். யோசுவா எப்பிராயீம் கோத்திரத்திலிருந்து வளர்ந்தவன். மோசேவோடு இருந்து அவருக்கு பணிவிடை செய்து வந்தான். மோசே அனுப்பிய 12 வேவுக்காரர்களில் ஒருவரானவன் (எண் 13:1-16). இஸ்ரவேலர்களுக்கு தேவன் வாக்குப்பண்ணின தேசத்திற்கு அழைத்துச் செல்ல மோசேவிற்கு அடுத்து யோசுவாவை தெரிந்தெடுத்திருந்தாலும் அவனுக்கு முன்பு நான்கு பெரிய சவால்கள் காத்திருந்தன. அவைகளை தைரியமாக தேவனுடைய வாக்குத்தத்தை கொண்டு எப்படி மேற்கொண்டான் என்பதை இந்த செய்தியில் வாசிப்போம்.

### சவால் 1: தலைமைத்தும்:

மோசேவிற்கு பின் தலைமைத்துவ பொறுப்பேற்கும் யோசுவாவின் முதல் சவாலே தலைமைத்துவ மாற்றத்தின் அங்கீகாரம் இதை இரு கோர்வையாக அணுகலாம். தேவனின் அங்கீகாரம்: (யோசுவா 1:1-9) யோசுவாவிற்குள் தன்னம்பிக்கையூட்டி திடப்படுத்தி, தலைமைத்துவத்தைத் தொடர தேவன் நேரடியாக பேசி தமது பிரசன்னத்தையும், வாக்கையும் உறுதிப்படுத்துகிறார். (1:3-5) அதற்கு யோசுவா செய்ய வேண்டியதை தேவன் தொடர்ந்து (வசனம்1:7-8) வலியுறுத்துகிறார். கவனமாயிரு, திடமனதாயிரு, புத்திமனாயிரு, விலகாதே, பிரியாதே, தியானி போன்றவற்றை கடைபிடிக்க கூறுகிறார். தேவ மக்களின் அங்கீகாரம்: (1:10-18) தலைமைத்துவ மாற்றத்தில் யோசுவா மக்களின் மனப்பூர்வமான ஜனங்களின் அங்கீகாரத்தை பெறுகிறார் என்பதை இந்த வசனம் மூலம் உறுதிப்படுத்த முடிகிறது.

### சவால் 2: தடுப்பு சுவர்

எரிகோ கோட்டையில் உள்ள மக்களின் மனநிலை அறிய யோசுவா இரண்டு வேவுக்காரரை அனுப்புகிறார். அதன் விளைவாக எரிகோ கோட்டையில் உள்ள இருந்த ராகாப், தேவன், இஸ்ரவேல் மக்களுக்கு செய்த அற்புதங்களை விவரிக்கிறாள், தேவனை துதிக்கிறாள், விசுவாச வார்த்தைகள் மூலம் இஸ்ரவேலருக்கு வெற்றி நிச்சயம் என்பதை கூறி, தனது குடும்பத்திற்கு பாதுகாப்பு கிடைக்க ஒரு அடையாளத்தையும் பெற்றுக்கொண்டாள்(யோசுவா 2:1,8-11). எரிகோவை வேவு பார்க்க சென்ற இரண்டு வேவுக்காரர்கள் யோசுவாவிடம் திரும்பி வந்து, தங்கள் அனுபவத்தை பகிர்ந்தது மட்டுமல்லாது தேசத்து குடிகளின் சோர்வையும், தேசத்தை தேவன் ஒப்புக் கொடுத்ததற்கான விசுவாச அறிக்கையையும் அளித்தனர்

### சவால் 3: தண்ணீர் பெருக்கான யோர்தான்:

மக்களை கானான் தேசத்திற்கு கொண்டு சேர்க்க தடையாய் நின்ற மூன்றாவது சவால் கரைபுரண்டு ஓடிய யோர்தான் நதியாகும். சுதந்தர பூமியின் பிரதானபகுதி யோர்தானின் மறுப்பக்கம் இருந்தது. அதை கடக்க தேவன், யோசுவாவிற்கு ஒரு அழகிய திட்டத்தை கொடுத்தார். யோசுவா அதை மக்களிடம் எடுத்துகூறி அவர்கள் அனைவரும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து தேவ திட்டத்தை நிறைவேற்றியதின் விளைவாக யோர்தான் என்னும் மூன்றாவது சவாலையும் நேர்த்தியாக யோசுவாவும், இஸ்ரவேலரும் மேற்கொண்டனர். அரிதான அற்புத அடையாளம் சரித்திரத்தில் தெய்வீக வல்லமையை நினைவுகூற நினைவு கற்கள் நாட்டப்படுகின்றன.

### சவால் –4: தெய்வ பக்தி.

அமைதி முயற்சி தெய்வப்பக்தியை பராமரிப்பது ஒரு பிரதான சவால். யோர்தானின் ஒருபுறம் உள்ள ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதி கோத்திரத்தார் யோர்தானின் ஓரத்திலே பார்வைக்குப் பெரிதான பலிபீடத்தைக் கட்டினார்கள். இதைக் கேள்விப்பட்ட யோர்தானின் மறுபக்கமுன் மற்ற கோத்திரத்தாருக்கு விரோதமாக யுத்தம் பண்ண ஆயத்தமனார்கள். பின்பு ஆசாரியனும், கோத்திர பத்து பிரபுகளும் ரூபன், காத், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரிடம் வந்து, விளக்கம் கேட்டு யுத்த முயற்சியை தவிர்த்தார்கள்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அருமை வாலிபப்பிள்ளையே, தேவன் நமக்கும் என்றோ ஒரு நாள் ஏதோ வாக்குத்தத்தம் பண்ணியிருப்பார். அந்த வாக்கு உன் வாழ்வில் நிறைவேறாது இருக்க அநேக சவால்களையும் நீசந்திக்க நேரிடலாம். ஆனால் இவைகளின் மத்தியில் யோசுவாவிற்கு தேவன் கொடுத்த கட்டளைகளை கைக்கொண்டு, அதை தியானிக்கும் போது, அவர் கொடுத்த வாக்கை நிறைவேற்ற அவர் உண்மையுள்ளவராயிருந்தார். உன்னுடைய தலைமைத்துவத்தை கேள்வி கேட்கும் சூழ்நிலை, யோர்தான் போன்று புரண்டுவரும் பிரச்சனைகள், வழிஇல்லாமல் எரிகோமதிலைப் போன்ற சூழ்நிலைகள் மற்றும் உனக்கு தேவனோடு உள்ள உறவை கேலி செய்யும் நண்பர்கள் போன்ற சவால்களை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைகளுக்குள் தள்ளப்படலாம். பயப்படாதே, திடன்கொள், அன்று யோசுவாவோடு இருந்த அதே வாக்குமாறாதேவன் இன்று உன்னோடும் உண்டு. அவரின் வல்லமை உன்மூலமாய் வெளிப்படவே இந்த சவால்களை தேவன் உன் வாழ்வில் அனுமதிக்கிறார். வெற்றியின் இரகசியத்தை தேவனிடம் கேட்டறிந்து வெற்றியுள்ள வாழ்வு வாழ்வது உனக்கு மிக அவசியம். வாக்குத்தத்த பூமியை நோக்கி செல்லும் நாமும் அதை அடைய முடியாதபடி, பல சவால்களை சந்திக்கும் போது கீழே கொடுக்கப்பட்ட கேள்விகளை சற்றே சிந்தித்து நம்மை நாமே ஆராய்ந்து அறிந்து கொள்வோமாக.

### சிந்தனைக்கு:

1. தேவனின் அங்கீகாரம்,அறிவுரையை அனுதின வாழ்வில் அனுபவிக்கின்றோமா?
2. தேவ ஜனத்தின் பொது ஜனத்தின் அங்கீகாரம் எனக்கு உண்டா?
3. தேவனுடைய வாக்குதத்தங்களை சுதந்தரிப்பதில் தடைகள் ஏதுமுண்டா?
4. தடைகளை மேற்கொள்ள தெய்வீக அணுகுமுறையை அறிந்து கொள்ள நம்மை அர்பணிப்போமா?



Rev.Asirvatham




# வெற்றி உனதே – நீ விரும்பினால்

## வாக்குமாறா தேவன்

யோசுவா புத்தகத்தில் அதிக நாட்களாக காத்திருந்த ஒரு நோக்கம் உண்மையில் நிகழ இருக்கின்றது.தேவன் ஆபிரகாமை அழைத்தபொழுது, கானான் தேசத்தை அவனது சந்ததிக்கு சுதந்திரமாக தருவதாக வாக்குபண்ணியிருந்தார். (ஆதி 12:7, 15:16) சரியான கால சந்தர்பத்தையும் தேவன் தெளிவாக சொல்லியிருந்தார். நான்கு தலைமுறைக்கு முன்னரே, மோசேயின்மூலம், இஸ்ரவேல்மக்களைவாக்குதத்தம் பண்ணின தேசத்திற்கு அழைத்து செல்லுமாறு கூறினார். வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகத்திலும் இது மறுபடியும் மறுபடியுமாக உறுதிச்செய்யப்பட்டுள்ளது. சுதந்தரிக்க போகும் தேசத்திற்கு சேரும் மட்டும். இது இஸ்ரவேல் மக்களின் காதுகளில் எக்காள தொனி போன்று ஒலித்துக் கொண்டிருந்தது. சாதாரண மாக மனிதராகிய நாம், ஒரு காரியத்தை குறித்து, திறம்பட வாக்கு கொடுக்க இயலாதவர்களாக இருக்கிறோம். ஏனெனில் அதை நிறைவேற்றும் ஆற்றல் நம்மிடம் இல்லை. ஆனால் தேவனோ, ஆபிரகாமுக்கு சந்ததி உண்டாகுமுன்னரே நான்காம் தலைமுறையை குறித்து வாக்கு அருளியிருந்தார்.

## விசுவாசியாத மக்கள்

கவனிக்க வேண்டிய வியம் என்னவென்றால், சர்வ வல்லவரிடமிருந்துவாக்குதத்தம்பெற்றிருந்தும், இரண்டுநபர்கள் மட்டுமே கானான் தேசத்திற்குள் நுழைய முடிந்தது. தேவனது திட்டத்தின்படி, அனைத்து இஸ்ரவேலரும் இந்த ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க வேண்டும் என இருந்தும், மற்றவர்கள் அதில் உட்பிரவேசிக்க முடியாது காரணம், அவர்களது விசுவாச குறைவு உங்களுக்கு தெரியுமா? தேவனது ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரிக்க தடையாக இருப்பது நமது விசுவாச குறைவே. இஸ்ரவேலர் வாழ்க்கையில் நடந்தது இதுவே. தேவன் அவர்களுக்கு ஏற்கனவே கொடுத்து விட்டேன் என வாக்கு பண்ணி, நீங்கள் சென்று சுதந்தரித்து கொள்ளுங்கள் என்று சொல்லியிருந்தும், இஸ்ரவேலரால் முடியவில்லை. தேவன் நாம் அனைவரும் சோம்பேறியாக இருக்க விரும்பவில்லை. கனாவூரில் நடந்த திருமண வைபவத்தில், திராட்சரசம் குறைவு பட்டபொழுது, ஜாடிகளில் தண்ணீர் நிரப்ப சொல்லியிருந்தார். சிறிது நேரத்தில் அது திராட்சை ரசமாக மாறியது. இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம். நாம் நமது பங்கை செய்வோமாகில் அவர் அவரது பங்கை செய்வார். எப்பொழுதும் மிகவும் இலகுவான வேலையையே தேவன் நம்மிடம் எதி ர்பார்க்கிறார். குவளையில் தண்ணீர் எடுத்து ஜாடிகளை நிரப்பும் செயலானது, தண்ணீரை திராட்சைரசமாக மாற்றுவதை விட எளிதானது.

## விசுவாசித்த மக்கள்

யோசுவா 1:3ல் தேவன் யோசுவாவிடம், நீ கால் மிதிக்கிற ஒவ்வொரு இடத்தையும் உனக்கு தந்தேன் என கூறியிருக்கிறார். யோசுவா செல்வதற்கு மனமற்றிருந்தால் அவன் சுதந்தரிக்க இயலாது. கால் மிதிக்காவிட்டால் அவன் சுதந்தரிக்க இயலாது என்பதே எதிர்மறையாக இங்கு கூறப்பட்டுள்ளது. தற்போது இது யோசுவா தேவனின் நாமத்தில் சுதந்தரிக்க வேண்டியது. ரோமர் 6:14ல் கூறப்பட்டுள்ள வசனம், நீங்கள் கிருபைக்கு கீழ்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. கானான் தேசத்தை முற்காலத்தில் அநேக இராட்சதர்கள் ஆண்டு வந்தனர். ஆனால் அவர்கள் யாவரும் தோற்கடிக்கப்பட்டு போவார்கள்.அதேபோல் தேவன் நமது வாழ்க்கையிலும் ஏதோ புதியது செய்ய சித்தம் கொண்டிருக்கிறார்.இதை நாம் விசுவாசித்து, இயேசுவின் நாமத்தில் சுதந்தரிக்க இயலாவிடில், தேவன் அதை நிறைவேற்ற இயலாது.நமக்கு சொந்த மாக அவ்வாக்குதத்தங்களை ஏற்றுக்கொள்ளாவிடில், நமது வாழ்விலும் அது நிறைவேறாது, 6,00,00 இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வெளியே வந்தும், யோசுவா காலேப் இருவர் மட்டுமே கானானை சுதந்தரித்தனர் என கேள்வி எழும்புகிறதல்லவா? ஏனெனில் அவர்கள் கானானுக்குள் இருந்த இராட்சதர்களில் கவனம் செலுத்த தவறினார்கள். வாக்குதத்தத்தை மட்டுமே நோக்கியிருந்தனர்.தேவன் நம்மை சுதந்தரிக்க சொல்லியிருந்தால், நிச்சயமாக அது நம்மால் முடியும். அது தான் "விசுவாசம்"என்பது இன்னும் உன்னை சுற்றியிருக்கும் அநேகர் இது உன்னால் இயலாது என்று கூறினாலும், நீ அதற்கு செவிகொடுக்க அவசியமில்லை ஏனெனில் ரோமர் 8:31ல், தேவன் நமது பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாக இருப்பவன் யார்? என்று பார்க்கிறோம்.

சகோதரனே, சகோதரியே, தேவன் எப்பொழுதும் உன் பட்சத்தில் இருக்கிறார்.அவர் உனது அன்பின் தகப்பன் மட்டுமல்ல உன்னை வெற்றியின் பாதையில் வழிநடத்துவதற்கும் ஆவலுள்ளவராக இருக்கிறார் என்பதை மறந்துவிடாதே. தேவன் தமது அரிய செயல்களை உன் வாழ்வில் செய்வதற்கு "விசுவாசம்" என்பது தேவன் தரும் நேரடி அழைப்பு. நாம் இரண்டு கால்களையும் பயன்படுத்தி நோக்கத்தை அடைய எவ்வாறு முற்படுகின்றோமோ அவ்வாறே விசுவாசம், தேவனது வார்த்தை இரண்டையும் எடுத்து வைத்து நாம் முன்னோக்க வேண்டும். விசுவாசம் தேவ வசனத்தை கேட்பதினால் வரும். வெற்றி வாழ்வின் இரகசியம் என்பது விசுவாசத்தோடு ஒவ்வொரு நாளையும் எதிர்நோக்கி கொள்வது. என்னை விசுவாசிக்கிறவன் ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை (ஏசா 28:16). விசுவாசித்த மக்கள்வெற்றிபெற விசுவாசத்தை நம் வார்த்தையால் அறிக்கை செய்வது மிக அவசியம். ஏனென்றால் தேவன் வார்த்தையை கனம் பண்ணுகிறார். நாம் சிறுவயதில் அடிக்கடி பாடிய ஒரு பாடல்

"Jesus is the winner man,
winner man all the time,
are you on the winning
side...I am on the winning
side...Satan is the Looser
beast"

> **You are not fighting**
> **for a Victory,**
> **But you are fighting**
> **from that Victory**
> **Victory is already**
> **Yours**

சாத்தான் தோற்கடிக்கப்பட்டவன் என்பதை அனுதினமும் அறிக்கை செய்யவேண்டும். அதேபோல் நான் என் தேவனால் வெற்றிப்பெறுவேன் என்பதையும் ஒவ்வொரு நாளும் அறிக்கை செய்ய வேண்டும். உனக்கு வெற்றி வேண்டும் என்றால் நீ யார் பக்கம் இருக்கிறாய் என்பதை பொறுத்தே அமையும். இயேசு கிறிஸ்து நமக்கு சிலுவையில் ஏற்கனேவே வெற்றி சிறந்தார். உலகம்,மாம்சம் மற்றும் சாத்தான் மீது வெற்றிச்சிறக்க அவர் இரத்தத்தால் வெற்றியை அறிக்கை செய்து நமதாக்கிக் கொள்வோம்.

- Bro.Subhani



# என் அடைக்கலமே

மோசேயின் மூலமாக இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு கானானை பிரித்துக் கொடுத்த பின்பு, அறியாமல் கைப்பிசகாய் கொலை செய்தவன் தகுந்த நியாய விசாரணை நடைபெறும் வரை கொலையுண்டு போகாதபடிக்கு, தேவன் அவர்களுக்கு அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்திக் கொள்ள கட்டளையிட்டார். எண் 35:9-32, யோசுவா 20 ஆகிய வேதப்பகுதிகளில் இவற்றின் நோக்கம், அமைப்பு, செயல்முறைகள் ஆகியவற்றைக் கற்றுக்கொள்ளலாம். மேலும் இந்த அடைக்கலப்பட்டணங்கள் எப்படி கிறிஸ்து இயேசுவை பிரதிபலிக்கின்றன என்பதை இந்த செய்தியின் மூலம் அறிந்துகொள்ளலாம். அடைக்கலப்பட்டணங்கள் ஆறு: 1. சீகேம், 2. கோலா, 3. கேதேஸ், 4.ராமோத், 5.பேபேசர், 6.எபிரோன்

## அடைக்கலப்பட்டண அமைப்பு முறை:

முதலாவது, இது கடவுளால் கருணையாக கொடுக்கப்பட்டது. மேலும் இது பாதுகாப்பான இடமாகவும் (power to save), பரிவாக நடத்தப்படும் இடமாகவும் (power to secure), போதுமான வசதிகள் மற்றும் அதிகாரம் (power was sufficient) கொண்டதாகவும் இருந்தது. உபாகமம் 19:3ன்படி, இதன் ஆயத்தநிலை (availability) மற்றும் எளிதாக அணுகும் பாதை (accessibility) உறுதி செய்யப்பட வேண்டும். மேலும் இதன் பாதைகளில் தடுப்பு இருக்க கூடாது. அடைப்பு இருக்கக் கூடாது. குறிப்பாக குழப்பமின்றி செல்லும் இடமாக இருக்க வேண்டும். ஒட்டுமொத்த கருத்தாக சொல்ல வேண்டுமெனில் இது தரமுள்ளதாகவும், எப்போதும் தயாராகவும் இருக்க வேண்டும் (promiment / Prepared).

இந்த அடைக்கலப்பட்டணத்தின் இன்றியமையாத முக்கியத்துவத்தையும் (necessity), இயற்கையமைப்பு (nature) மற்றும் இதன் பெயர்களை (names) சற்று ஆழமாக கற்றுக்கொள்ளலாம். கடவுள் கிறிஸ்து இயேசுவின் மூலமாக சுவிசேஷ வழியை எப்படி நமக்கு அடைக்கலப் பட்டணமாக மாற்றியுள்ளார் என்பதை கீழ்காணும் குறிப்புகள் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

**சீகேம்:** இது எப்பிராயீம் மலைப்பகுதியிலுள்ள அழகிய பட்டணம். இதன் அர்த்தம் தோள் (Shoulder). இயேசு மெய்யாகவே நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார் (ஏசாயா 153:4). மேலும், இயேசு நமக்கு நல்ல மேய்ப்பன். 'கண்டுபிடித்தப்பின்பு அவன் சந்தோஷத்தோடே அதைத் தன் தோள்களின் மேல் போட்டுக் கொண்டு' என லூக்கா 15:5ல் கிறிஸ்துவின் பிரதிபலிப்பாக சீகேமைக் காணலாம்.

**கோலா:** இது மனாசே கோத்திரத்தின் கெனசரேத் வடக்கே உள்ள மேய்ச்சல் நிலம் கொண்ட ஓர் மலைப்பகுதியாகும். இதன் அர்த்தம் மகிழ்ச்சி (joy). 1 பேதுரு 4:12,13ன்படி கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது, நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். மேலும் மத்தேயு 25:21ன்படி, - உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி - என்பதன் மூலம் அது கிறிஸ்து என்பதை அறிந்து கொள்ளலாம்.

**காதேஸ்:** காதேஸ் இதன் அர்த்தம் 'பரிசுத்தம்' Holy என்பதாகும். எபிரேயர் 7:26ன் படி, பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். இது கிறிஸ்து இயேசுவின் பரிசுத்தத்தையே நமக்கு நினைப்பூட்டுகிறது. 5ச

**ராமோத்:** இது காத் (gud) கோத்திரத்திற்கு உட்பட்ட நிலம். இதுதான் யாக்கோபு போராடி ஜெயித்த இடம். இதன் அர்த்தம் Exaltation. உண்மையில் இயேசு நமக்கு ராமேத். பிலி 2:9-11 வசனங்களை வாசித்தால் பூமிக்கும் வானத்துக்கும் மேலான நாமம் என்பதை உணரலாம்.

**பேசேர்:** இது ரூபன் கோத்திரத்திற்கு உட்பட்ட யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள நிலப்பகுதி. இதன் பொருள் அரணான கோட்டை (strong hold). இயேசு நம் எல்லோருக்குமே 'பேசேர்' தான். சங்கீதம் 18:2/ நாகூம் 1:7ன் அரணான கோட்டை உயர்ந்த அடைக்கலமானவர்.

**எபிரோன்:** இது ஆபிரகாம் தூதனை சந்தித்த இடமும், தாவீது இஸ்ரவேலுக்கு இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட இடமும் யோவான் ஸ்நானகன் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த இடமுமாகும். இதன் அர்த்தம் சகோதரத்துவம் "Friendship". கொலோ 1:10 இயேசு தமது இரத்தத்தினால் நம்மை ஒப்புரவாக்கிக் கொண்டார். மேலும், தேவனோடு நம்மை ஐக்கியப்படுத்த அவர் சிந்தின இரத்தத்தின் மூலம் ஒப்புவாக்கிக் கொண்டார் என்று வாசிக்கிறோம்.

இளைஞனே! யுவதியே! இந்த செய்தியை நிறைவு செய்யும் முன் ஓர் பழைய ஏற்பாட்டு சம்பவத்தை நினைப்பூட்டி நிறைவு செய்கிறேன். 2 சாமு 2ம் மற்றும் 3ம் அதிகாரத்தை வாசித்தால், இந்த சரித்திரத்தை நீ நன்றாக அறிந்து கொள்ளலாம். அப்னேர் எப்பிரோனுக்குத் திரும்பி வரும் போது, யோவாப் அவனை அடைக்கலப்பட்டண வாசலிலே தன் தம்பி ஆசகேலுடைய இரத்தப்பழிக்காக அவனை கொன்றுபோட்டான். ஓர் அடி எடுத்து வைத்து அடைக்கலப்பட்டணத்திற்குள் ஓடினால் அப்னேர் அன்று பிழைத்திருப்பான். ஆனால் நடந்தது என்ன? அடைக்கலப்பட்டண வாசலில் அப்னேர் "மதிகெட்டவன் சாகிறது போல, செத்துப் போனான்" என்று 2 சாமு 3:33,34ல் வாசிக்கிறோம்.

இன்று நம்மில் பலர் ஆலயத்தையே சுற்றி வருகிறோம். ஊழிய காரியங்களில் நம்மை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ளுகிறோம். ஆனால் ஓர் அடி 'இரட்சிப்பைப்' பெற்றுக்கொள்ளாமல், ஓர் மதிகெட்டவன் செத்தது போல, செத்து கொண்டிருக்கிறோம். சற்று சிந்திப்போம். இயேசுவின் சிலுவை வழி இரட்சிப்பின் மூலம் கிறிஸ்துவின் அடைக்கலப்பட்டணத்திற்குள் ஓடி சுகமாய் வாழ்வோம்.

- Bro. Isacc Kamalesh

# ஆவிக்குரிய உணவு 7 (Bikkurim)

இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்து வானாந்திரத்தில் மன்னாவினால் போஷித்த தேவன் அவர்களுக்கு கானானில் உண்ணக்கொடுக்கும் உணவு வகைகளை உபாகமம் 8.8ல் பார்க்கலாம். இந்த சிறப்பு உணவை தானியங்கள் மற்றும் பழங்கள் என இருபெரும் பிரிவாக எடுத்து கொள்ளலாம். இந்த ஏழு வகை உணவும், நமது சரீரத்திற்கு மட்டுமல்ல, நம் ஆன்மாவிற்கும் பிரயோஜனமுள்ள வகையில் சிறப்பு அர்த்தங்களை கொண்டதாக உள்ளது. இந்த 7 ஆவிக்குரிய உணவு வகைகளை எபிரேய மொழியில் Shiva at Ha minim என்று அழைப்பர். இப்போது இதனை நாம் ஒவ்வொன்றாக சுவைத்து மகிழலாம்.




இதன் ஆவிக்குரிய அர்த்தம் கருணை (Kindness). சங் 81:16, 147:14ல் உச்சிதமான கோதுமையினால் போஷிப்பேன், திருப்தியாக்குவேன் என வாசிக்கிறோம். வேதத்தில் இனவிருத்திக்கடையாளமாகவும், தேவனிடமிருந்து கிடைக்கும் பெரும்பரிசாகவும் (Supreme gift) சித்தரிக்கப்பட்டுள்ளது. கோதுமை ராஜ்யத்தின் புத்திரர்களாக (மத் 13:24-30) சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும் இயேசு ஜீவ அப்பம் நானே (யோவா 6:35) என்னிடத்தில் வருகிறவன் ஒருகாலும் பசியடையான் என்று சொன்னார். தான் ஒரு கோதுமை மணியாக மரணத்திற்கு ஒப்புக்கொடுப்பதாகவும் (யோவா 12:24) சொன்னதாக காணலாம். மேலும் கோதுமை வாழும் தியாக வாழ்க்கைக்கு (living sacrifice) ஒப்பிடப்பட்டுள்ளது லூக் 22:31. உணவு வகைகளில் நாம் பார்க்கும் பொழுது கோதுமை உலகின் பெரும்பான்மை மக்கள் உண்ணும் உணவாகவும், பிரதான சிறந்த உணவாகவும் காணப்படுகிறது.




இதன் ஆவிக்குரிய அர்த்தம் கட்டுப்பாடு (Restraint) . வேதத்தில் ஏழைகளின் அப்பமாக (Poorman Bread) 2 இராஜா 4:42ல் சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும் இதை கூலிக்காக (2 நாளா 2:10) பயன்படுத்தப்பட்டதாகவும், காணிக்கையின் அடையாளமாகவும் (எண் 5:15) குறிப்பிடப்பட்டதாக காணலாம். ரூத் புத்தகத்தில் வாற்கோதுமை அறுப்பின் காலம் என்று அந்த சரித்திரம் ஆரம்பிப்பதை நாம் காணலாம். மேலும் யோவான் 6 14,15ல் 5 வாற்கோதுமை அப்பத்தை ஆசீர்வதித்து 5000 பேருக்கு போஷித்ததாக வாசிக்கிறோம். இதன் மூலம் தேவனின் ஆசீர்வாதத்தை உணரலாம்.




இதன் ஆவிக்குரிய அர்த்தம் மகழ்ச்சி (Joy) சங் 104:15. வேதத்தில் நமக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள உறவை குறிக்க யோவான் 15ல் நானே மெய்யான திராட்சைச்செடி, என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் என்ற வசனத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். குறிப்பாக லூக் 22:20ல் திராட்சை ரசத்தை என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை என்று சொல்லி (யோவா 6:53,54) இதில் பங்கு பெறாதவனுக்கு ஜீவன் இல்லை, என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனை கடைசிநாளில் எழுப்புவேன் என்றார்.




இதன் ஆவிக்குரிய அர்த்தம் சகிப்பு தன்மை (Endurance). நீண்ட ஆயுளை (Longevity) குறிக்கும். நீதி 27:18ல் அத்திமரத்தை காக்கிறவன் அதின் கனியை புசிப்பான் என்றும் 1 இராஜா 4:25ன் படி சுகமான வாழ்க்கையையும் குறிக்கிறது. மேலும், மத் 24:32,33, வெளி 6:13 கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளமாக அத்திமரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கிறிஸ்தவ நற்செயல்களுக்கு அடையாளமாக லூக் 13:6-9ல் வாசிக்கிறோம்.




இதன் ஆவிக்குரிய அர்த்தம் நித்தியம் மற்றும் நம்பிக்கையாகும் (Hope and Enternity) ஒரு மாதுளை மரம் சுமார் 200 ஆண்டுகள் கனிதரும். வேதத்தில் மாதுளை ஆசாரிய உடையிலும் (யாத் 28), தேவாலயத்து தூண்களிலும் தொங்கவிடப்பட்டுள்ளதாக வாசிக்கிறோம். இஸ்ரவேல் புத்திரர்கள் கானானை நோக்கிய பயணத்தில் ரிமோன் பாரேஸ் என்ற இடத்தில் பாளையமிறங்கியதாக எண்ணா 33ல் வாசிக்கிறோம். ரிமோன் பாரேஸ் என்பது மாதுளை பட்டணம் என பொருள். மாதுளையில் 613 விதைக்கனிகள் உண்டு. இது மனிதனுக்கு கொடுத்த கட்டளைகளை நினைப்பூட்டுகிறது.




இதன் ஆவிக்குரிய அர்த்தம் பலம் மற்றும் ஞானம் (Strength of wisdom). தேவன் நம்மை அழைக்க பயன்படுத்திய பெயர்களில் ஒன்றாக எரேமியா 11:16ல் வாசிக்கிறோம். ஆசரிப்பு கூடாரத்திலும் ஆலயத்திலும் விளக்கு தண்டிற்கு (Menorah) இடித்து பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயைப் பயன்டுத்தியதாக லேவி 24:2ல் வாசிக்கிறோம். மேலும் ஒலிவ எண்ணெ ஆசாரியனை அபிஷேகம் செய்ய (லேவி 8:30), ராஜாக்களை அபிசேஷகம் செய்யவும் 1 சாமு 16:13 பயன்படுத்தியதாக வேதத்தில் வாசிக்கிறோம்.




இதன் ஆவிக்குரிய அர்த்தம் நீதியுள்ளவர்கள் மற்றும் கடவுளின் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் (Righteous & obligate Gods law). வேதத்தில் தேன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் மூல மொழிபெயர்ப்பில் பேரிட்சை என்றுதான் உள்ளது. மேலும் கடவுளின் அபரித ஆசீர்வாதத்திற்கு (Overflowing blessing of God) அடையாளமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதை யூதா கோத்திரத்தின் அடையாளம் நீதிமான்களுக்கு அடையாளமாகவும், நீதிமான்களுக்கு ஒப்பனையாகவும் சங் 92:12ல் வெற்றிக்கு அடையாளமாகவும் வெளி 7:9, யோவா 12:12ல் காணலாம்.

இந்த ஏழு உணவுவகைகளை இரு பெரும் பிரிவாக பிரிக்கலாம் 1. தானிய வகை (Grain), 2. பழவகை (Fruit) இதில் தானிய வகை மூலம் தேவன் நமது தேவையை (Necessary) பூர்த்தி செய்கிறார் என்றும், பழவகை மூலம் நமக்கு மகிழ்ச்சி மற்றும் ஆரோக்கியத்தை தேவன் நமக்கு கொடுக்கிறார் என்றும் (Pleasure of Life) கொள்ளலாம். மேலும் இந்த ஏழு ஆவிக்குரிய உணவும் ஆவிக்குரிய குணாதிசயங்களை பெற்று, உணர்வுப்பூர்வமாகவும், முழு பெலத்தோடும், முழு ஆத்துமாவோடும், தேவனை ஆராதிக்க கொடுக்கப்பட்டது. புசித்து திருப்தியடைந்திருக்கையில் என்னை ஸ்தோத்தரியுங்கள் என்று வசனம் கூறுகிறது. மேலும் ஜனங்கள் விசுவாச குணாதிசயங்களை பிரதிபலிக்க உணர்வின் சிந்தையை மேன்மைப்படுத்தவும், கடவுளுடனான நம் உறவை பெலப்படுத்தவும் பயன்படுகிறது.

இஸ்ரவேலர் இன்றும் இந்த ஏழு பயிர்வகைளை தேவன் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின நிலத்திற்கான சான்றாகவும், இறைவனின் அளவிடமுடியாத அன்பின் கருணையாகவும், தேவன் தங்களோடு பண்ணின உடன்படிக்கையாகவும் பார்க்கின்றனர்.

நாம் இந்த உணவு வகைகளை உற்று நோக்கும் பொழுது கடவுளை பார்க்க வேண்டும். மேலும், தேவனின் நிறைவான ஆசீர்வாதத்தை உணர வேண்டும். மேலும் இந்த ஏழு வகையான உணவுகளை உண்ணும் போது, நமது நல்வாழ்வை மேம்படுத்த முடியும். மற்றும் கடவுளுடனான நம் உறவை ஆழப்படுத்தமுடியும் என்பதில் சந்தேகமில்லை. இந்த உணவு வகைகளில் நம்முடைய சரீரத்திற்கு தேவையான ஆற்றல், நோய் எதிர்ப்பு சக்தி, இனப்பெருக்க ஆற்றல், தோல், எலும்பு மற்றும் இரத்த ஓட்டத்திற்கான ஆரோக்கியம் முதலானவைகளும் இன்று பொதுவாக காணப்படும் நோய்களான புற்றுநோய், சர்க்கரை நோய், இதய நோய்களிலிருந்தும் நம்மை பாதுகாக்கும் உணவாகவும் இருக்கிறது.

இந்த 7 வகை உணவு வகைளை வேதம் முதற்கனி என்றும் அழைக்கின்றது(எண் 18:23). ஜனங்கள் எருசலேம் தேவாலயத்திற்கு தசமபாக காணிக்கையாக ஆறில் ஒருபங்கை எடுத்து வந்தனர். இதன் எபிரேய வார்த்தை Bikkurim, இன்று நமது வாழ்வில் நன்றி செலுத்தும் அடையாளமாக எடுத்துக் கொள்ளலாம். சகோதரனே, சகோதரியே நம் உணவு பழக்கத்தில் இந்த ஏழு உணவுவகைகளை முழுமையாக சேர்த்துக் கொள்ளுவோம். தேவனை முழு பெலத்தோடும், முழு ஆவியோடும் ஆராதிப்போம்.

- Bro. Isacc Kamalesh



2nd week Message

வாக்குத்தத்தை பெறுவதில்

# கர்த்தரின் பங்கு

நெடுங்காலமாய் காத்திருத்தல் இருதயத்தை இளைக்கப்பண்ணும் விரும்பினது வரும்போதோ ஜீவ விருட்சம் போலிருக்கும். நீதி 13:12 சாலமோன் இராஜாவின் இந்த நீதி மொழி நம்முடைய காத்திருத்தலுக்குப் பொருந்துவதை விட, வனாந்திரபிரயாணத்தில் இருந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிகச் சரியாகப் பொருந்தும். சேனைகளின் கர்த்தர் அவர்களை எகிப்திலிருந்து புறப்படச்செய்தபோது, இருந்த மனிதர்களில் யோசுவாவும், காலேப்பும் தவிர மற்ற அனைவரும் வனாந்திரத்தில் மரித்து அடக்கம் செய்யப்பட்டார்கள்.கானானுக்குள் சென்ற சந்ததி தங்கள் பெற்றோரையும், உறவினர்களையும், அடக்கம் செய்தவர்கள். வாக்குதத்தம் செய்யப்பட்ட கானானையும் அதில் கர்த்தர் தங்களுக்கு தரவிருக்கும் ஆசீர்வாதத்தை தங்கள் பெற்றோர் கூறிய போது, அதை விசுவாசத்தோடு நம்பியவர்கள் இவ்வாறு தங்களுக்கு கற்றுக்கொடுத்த பெற்றோரே அதில் நுழைய மாட்டார்கள் என்ற உண்மையும் அறிந்தவர்கள்.

**கர்த்தரே வழிநடத்தினார்**

சர்வ வல்லவரால் இவர்கள் வனாந்திரத்தில் போஷித்து வழிநடத்தப்பட்டவர்கள். இந்த பிரயாணத்தில் அவர்கள் வஸ்திரம், பாதரட்சைகள் பழையதாய் போகவுமில்லை (உபா 29:5). இதை எவ்வாறு புரிந்து கொள்ளவது, நீங்கள் 5 வயதில் பயன்படுத்திய சட்டையையும், Shoe-வும் இப்பொழுது உங்களால் அணிய இயலுமா? பயணத்தில் அந்த ஜனங்களோடு கூட அவர்கள் உடைகளும், பாதரட்சைகளும், சேர்ந்தேதான் வளர்ந்திருக்க வேண்டும். “இதை வாசிக்கும் போது, ஒரு சந்தேகம் கலந்த சிரிப்பு மனதில் வருகிறதா?”

**கர்த்தரே ஒப்புக்கொடுத்தார்**

சர்வ வல்லவர் அவர்களை வனாந்திரத்தில் நடத்தி வந்ததைகுறித்து,கேள்விப்பட்டகானானியரின்உள்ளம்கரைந்தது. இதை ராகாப் கூறுவதை கவனியுங்கள்.“கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தார் என்றும், உங்களைப்பற்றி எங்களுக்கு திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களை குறித்து தேசத்து குடிகள் எல்லாரும் சோர்ந்து போனார்கள் என்றும் அறிவேன்”(யோசு 2:9).தேசத்தை ஒப்புக்கொடுப்பார் என்று சொல்லாமல் தேசத்தை ஒப்புக்கொடுத்தார் என்று சொன்னாள். ஏன், ராகாப் இப்படி சொல்ல வேண்டும்? கர்த்தரே ஜீவதண்ணீர் ஊற்றாக அவர்களுக்கு, இருக்கிறார் என்றும், அவரே அவர்களின் அன்றாட தேவைகளை சந்திக்கிறவர் என்றும் நன்றாக தெரிந்திருந்தாள்.

**கர்த்தரே சுதந்தரமானார்.**

சர்வ வல்லவரால் கானானுக்குள் சென்ற இஸ்ரவேல் ஜனங்களையும், அவர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்ட நிலப்பரப்புகளையும் அதில் கர்த்தரின் திட்டத்தையும் பார்ப்பதற்கு முன் சில முக்கியக்குறிப்புகளையும் பார்ப்போம்

“இஸ்ரவேல் கோத்திரத்தாரின் தேசப்படத்தை பாருங்கள்”. இந்த வரைபடத்தில் கோத்திரங்கள் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் யாக்கோபுக்கு மூன்றாவதாக பிறந்த லேவியின் பெயரும், 11வது பிறந்த யோசேப்பின் பெயரும் இடம் பெறவில்லை.லேவி கோத்திரத்திற்கு எந்த ஒரு நிலசுதந்திரத்தையும் கொடுக்கவில்லை. கர்த்தரே அவர்களுக்கு சுதந்தரம்.யோசேப்பிற்கு எகிப்தில் பிறந்த எப்பிராயீமையும், மனாசேயையும் யாக்கோபு ஆசீர்வதித்து தன்னுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டான். ஆகமொத்தம் 12 கோத்திரங்கள்.

**கர்த்தரே தேசத்தின் அடையாளமாக மாறினார்.**

கோத்திரங்களின் பெயர்கள் எல்லாமே லேயாளும், ராகேலும், தங்கள் பிள்ளைகளுக்கு இட்ட பெயர்களே, ஒரு மனிதனின் அடையாளமே ஒரு கோத்திரத்தின் அடையாளம். அதேபோல் தான் இஸ்ரவேல் என்று பெயர் மாற்றப்பட்ட யாக்கோபைத்தான் கர்த்தர் அந்த தேசத்தின் அடையாளமாக மாற்றினார். எப்பிராயீம், மனாசே ஆகிய இருவருக்கும் யோசேப்பே பெயரிட்டான். 12 கோத்திரங்களுக்கும் யோசுவா நிலங்களை பங்கீடவில்லை. இரண்டரை கோத்திரத்திற்கு மோசே யோர்தானின் கிழக்குபகுதியில் பங்கிட்டு கொடுத்தான். ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதிக்கோத்திரத்திற்கு மோசேயாலும் மற்ற ஒன்பதரை கோத்திரத்திற்கு யோசுவா மேற்கில் பங்கிட்டுக் கொடுத்தான் (யோசுவா 13: 15-29, 15-19).

யோசுவா, எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சனைகளை மனதில் கொண்டு தெய்வீக ஞானத்தினால் சில பொதுவான, நியமான வரையரை (தூரம்) வகுத்து வம்சவாரிபங்கீடு செய்கிறார். அதில் பிரதானமாக எக்கால சந்ததிக்கும் பொருந்தும் பிரதானமான வரையரையை கீழே காணலாம். அவையாவன

-பட்சபாதமில்லா சீட்டுமுறை 13:6, 14:1,2 , 16:1
(பிறப்பு வரிசை, பலம்படைத்தவர், திரள் ஜனபட்சபாதம் களைதல்)
- பரிசுத்த தேவசந்நிதியில் சீட்டு போடுதல் 18:6
(சீட்டுமுடிவை தேவ சித்தமாக கருதுதல்)
- பின் சந்ததி பிரச்சனையை தவிர்க்கும் தெளிவான எல்லை வரையறையுடன் பங்கீடு 15:1-12
-பரிசு ஊக்கத்துடன் பங்கீடு 15:16-19
(பாய்ச்சலான நிலம்)
- பெண்களுக்கு சுதந்தரம் குறித்த வரையறையுடன் பங்கீடு 17:3,4
- பட்டணம் கிரமமாக பங்கீடு 15:21
- பெரிய வம்சத்துக்கு ஏற்ப நிலப்பகுதியை சுதந்திரமாகப் பங்கீடு 17:14-18

12 கோத்திரங்களும் கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த சுதந்தரமும் மூன்று காரியங்களை நமக்கு கற்றுக்கொடுக்கிறது.

இளைஞனே, யுவதியே யோசுவா புத்தகத்தில், ஒவ்வொரு பகுதியையும் வாசிக்கும் பெ ாழுது தேவன் தமது ஜனத்தின் மேல் எவ்வளவு அக்கரை உள்ளவராக இருந்தார் என்பதை ஒவ்வொரு வசனத்தின் மூலமாகவும் நீ அறிந்து கொள்ள முடியும். இந்த சுதந்தர காலத்தை பற்றி தியானிக்கும் பொழுது தேவனின் அநாதி திட்டத்தை நீ தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

**சிந்தனைக்கு:**

1. சமுதாயமாகவும், குடும்பங்களாகவும், தனிமனிதனாகவும்,நாம் எவ்வாறு கர்த்தருடைய சித்தத்தை புரிந்து கொள்கிறவர்களாகவும் அதின்படி நடக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.
2. மனித வாழ்வும், அதின் இயலாமை தன்மையும், அதில் கர்த்தரின் கிருபை எவ்வளவு அவசியம் என்பதையும் தெளிவுப்படுத்துகிறது.
3. கர்த்தருடைய ராஜ்யத்தில் நமது பங்கும் அவருடைய வழிநடத்துதலின் மகத்துவத்தையும், உணர்ந்து கொள்ளவும், பயன்படுகிறது.

Rev.Asirvatham

FLASH PRAYER

# விண்ணப்பங்கள்

1. கொரோனா வைரஸ் உலக அளவில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் பீதி அடைந்துள்ள நிலை மற்றும் கோடிக்கணக்கான மக்கள் தனிமைப்படுத்தப்டுள்ள நிலை காணப்படுகிறது. தேவன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல சுகத்தை கொடுக்கவும் நோய் பரவாமல் தடுக்கவும் ஜெபிப்போம்.

2. ஏப்ரல் 2ம் நாள் ஆட்டிஸம் விழிப்புணர்வு தினமாக அநுசரிக்கப்படுகிறது. இந்தியாவில் ஏறத்தாழ 10 மில்லியனுக்கு மேலான குழந்தைகள் இந்நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் நல்ல முறையில் பெற்றோராலும், சமூகத்தாலும் பாராமரிக்கப்படவும். அவர்களை நோயிலிருந்து விடுபடுவதற்கு தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

3. தேவனுடைய வார்த்தையை முதன் முதலாக கேட்கும் மக்கள் அவருடைய அன்பை புரிந்து கொள்ளவும், பாவ மன்னிப்பின் நிச்சயத்தையும் பெற்றுக்கொண்டு அவர்கள் புதுவாழ்வு பெற்று வாழ ஜெபிப்போம்.

4. ஸ்மார்ட் போன் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அதில் தவறான காரியத்திற்கு பயன்படுத்துகிற அநேக மக்கள் காணப்படுகின்றனர். அவர்களின் இரட்சிப்பிற்காகவும், வாலிப பிள்ளைகளும் அதை கவனத்தோடு கையாளவும் ஜெபிப்போம்.

5. ஏப்ரல் 5ம் நாள் தேசிய கடற்படை தினம். இந்திய தேசத்தின் பாதுகாப்புக்காக கடல்பரப்பில் பணிபுரியும் கடற்படை வீரர்களுக் காகவும், அவர்களின் குடும்பங்களுக்காகவும் ஜெபிப்போம்.

6. விவசாயம் மற்றும் கால்நடை தொழிலில் ஈடுபடுவோர் நீர் மற்றும் நில வளத்தை காக்க இயற்கை சார்ந்த முறைகளை கையாள ஜெபிப்போம்.

7. ஏப்ரல் 7ம் நாள் மன அழுத்தம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்படி அனுசரிக்கப்படுகிறது. வேலைபளு, குடும்ப பிரச்சனைகள், சமூக பயம் போன்ற காரணத்தால் மக்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவோர் இயேசு கிறிஸ்துவே வழி என்பதை உணர்ந்து, அவரிடம் தங்கள் பாரங்களை வைத்து அதிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

8. சபைகளிலும், பணித்தளங்களில் செயல்படும் ஒவ்வொரு ஜெபக்குழுக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். அவர்களின் ஜெபங்களை கேட்டு தேவன் பெரிய காரியம் செய்ய ஜெபிப்போம்.

9. மருத்துவ ஊழியங்கள் பணித்தளங்களில் சிறப்பாக செயல்படவும் அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் அங்கு செல்லவும், தேவையான மருத்துவ உபகாரணங்கள் மருத்துவமனைகளில் அமைக்கப்படவும் ஜெபிப்போம்.

10. இந்த வருடத்திற்கு தேவையான பருவமழையை தேவன் தரவும், குடிநீர் விவசாயம் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு தேவையான தண்ணீர் சேமிக்கப்பட ஜெபிப்போம்.

11. தேசம் முழுவதும் கட்டப்பட்டுவரும் ஆலயங்கள் எந்தவித தடையுமின்றி கட்டப்படவும், பணத்தேவை மற்றும் பணியாளர் பற்றாக்குறை, எதிர்ப்புகள் மாற ஜெபிப்போம்.

12. ஏப்ரல்12ம் நாள் இயேசு கிறிஸ்து உயிர்தெழுந்த தினத்தை கொண்டாடும் நாம் மற்றவர்களுக்கும் இந்த நற்செய்தியை சொல்ல தேவன் நம்மை வழிநடத்த ஜெபிப்போம்.

13. நீரழிவு நோயால் நமது தேசத்தில 70% மக்கள் பாதிக்கபட்டுள்ளதாக அறிக்கை கூறுகிறது. மக்கள் முன்னெச்சரிக்கையோடு வாழவும் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவன் நல்ல சுகத்தை கொடுக்கவும் ஜெபிப்போம்.

14. தேசம் முழுவதும் இந்த விடுமுறை காலங்களில் நடைபெறும் வேதாகம பள்ளிக்காக ஜெபிப்போம். அநேக சிறுப்பிள்ளைகள் கலந்து கொள்ளவும், தேவனுடைய அன்பை கண்டு கொள்ளவும் ஜெபிப்போம்.

15. சிறு குழந்தைகள் சோட்டா பீம், பவர் ரேஞ்சர் போன்றவற்றை பார்ப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். சாத்தான் அவர்களை வஞ்சித்து போடாதபடிக்கு பெற்றோர்களின் கவனத்தோடு செயல்பட ஜெபிப்போம்.

16. தேசத்தில் மக்களிடமிருந்து பெற்று கொள்ளப்படும் வருமான வரி மற்றும் சேவை வரிகள் தேசத்தின் வளர்ச்சிக்காகவும், அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கப்படுவதற்காகவும், மக்கள் சுகாதாரமான சூழ்நிலையில் வாழ, செலவு செய்யப்பட ஆளுபவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தேவன் ஞானத்தை கொடுக்க ஜெபிப்போம்.

17. குழந்தைகளை கையாளும் பணியில் இருக்கும் நிரந்தர ஒப்பந்த ஊழியர்கள் அனைவருக்கும் குழந்தைகள் பாதுகாப்பு பற்றி பயிற்சி அளிக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகள் வெற்றிபெற, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

18. தேசத்தில் சாதியை காரணமாக கொண்டு கிராமங்களை விட்டு ஒதுக்கிவைப்பது, ஓட்டல்களில் தனி பொருட்கள் பயன்படுத்துவது, கோவில்களில் நுழைய அனுமதி மறுப்பது போன்ற காரியங்கள் இன்றும் அரங்கேறி வருகிறது. இந்நிலை மாற ஜெபிப்போம்.

19. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் கொரோனா வைரஸ் பாதிப்பால், தாயகம் திரும்ப காணப்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படவும், இவர்களின் நலனுக்காக ஜெபிப்போம்.

20. வங்கி துறையில் காணப்படும் பொருளாதார வீழ்ச்சி சரியாக, தேசத்தின் பொருளாதார வளர்ச்சி சீராக ஜெபிப்போம்.

21. உயர்கல்விக்காக ஆயத்தப்படும் மாணவர்கள் எழுதும் நுழைவு தேர்வுகளுக்காக ஜெபிப்போம். தேவன் ஞானத்தையும், ஞாபகசக்தியையும் கொடுக்க ஜெபிப்போம்.

22. கோடைக்காலத்தில் அதிகவெயிலினால் மக்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும், காலரா, அம்மை, மஞ்சள்காமாலை போன்ற நோய்கள் தாக்காது பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

23. கோடைகாலத்தில் மலை பகுதிகளில் காட்டுத்தீ ஏற்படாமல் இருக்கவும், விலங்குகள், பறவைகள், மரங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

24. ஏப்ரல் 25ம் நாள் உலக மலேரியா தினம். கிராமங்கள் மற்றும் நகர்புறங்களில் சேரி பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் கொசுக்களால் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். மக்கள் இது போன்ற நோய்களிலிருந்து காக்கப்பட ஜெபிப்போம்.

25. டெல்லியில் நடந்த வன்முறையில் 52பேர் பலியாகியுள்ளனர். இதில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவன் சமாதானத்தை கொடுக்கவும், குற்ற செயல்புரிந்தோர் சட்டத்தின் முன்கொண்டுவரப்பட ஜெபிப்போம்.

26. சரியான பாதுகாப்பு மற்றும் அரசு அனுமதி இல்லாமல் வெடிபொருட்களை மக்கள் கையாளுவதால் விபத்துகள் ஏற்படுகின்றன. இந்நிலை மாற ஜெபிப்போம்.

27. கொரோனா பாதிக்கப்பட்டோருக்கு, சரியான சிகிச்சை வழங்கப்படவும், சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

28. புகை பழக்கம், குடிப்பழக்கம் மற்றும் போதை வஸ்துகளுக்கு அடிமைப்பட்டு மீள முடியாமல் தவிக்கும் இளையோர், வாலிபர்கள், பெரியோர்கள் இரட்சகர் இயேசு கிறிஸ்துவை கண்டு கொள்ளவும், இப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும் ஜெபிப்போம்.

29. கோடை விடுமுறையை பெற்றோரோடு செலவழிக்க வடமாநிலம் செல்லும் ஒவ்வொரு மிஷனெரிகளுடைய பிள்ளைகளுக்காகவும் அவர்களின் சரீர சுகம், ஆரோக்கியத்திற்காக, அவர்கள் குடும்பத்துடன் செலவு செய்யும் நேரம் அவர்கள் வாழ்வில் நன்மையாக அமைய ஜெபிப்போம்.

30. ஏப்ரல் 30-ம் நாள் குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம், தேசத்தில் அநேக குழந்தைகள் குறைந்த சம்பளத்திற்கு கடினமாக வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். உலக அளவில் இந்தியா தான் இதில் முதலிடம் வகிக்கிறது. குழந்தைகளுக்கு தேவையான கல்வியறிவு கிடைக்க அவர்களின் பெற்றோர், சமூகம் மற்றும் அரசு நடவடிக்கைகள் எடுக்க நாம் ஜெபிப்போம்.

31. தேசம் தேவனின் அன்பை அறிந்து கொள்ளவும், அவரின் வருகைக்கு தங்களை ஆயத்தப்படுத்த ஜெபிப்போம்.

- சகோதரி. வின்சி மெர்லின்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# வட இந்திய விரிவாக்கபிரிவு

ஊழியங்களுக்காக...

FMPB

1st week Prayer

# NORTH INDIA MOBILIZATION

வட இந்திய விரிவாக்கபிரிவு செயலர் – மறைதிரு. பிரசாந் குமார் & திருமதி. ஜோஸ்டினா பிரசன்தா
விரிவாக்கப்பணி அலுவலகம் –புது டெல்லி

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவழியாக 20 மாநிலங்களில் வட இந்திய விரிவாக்கப்பணி ஊழியம் நடைபெற்று வருகிறது. வட இந்தியாவிலும், வடக்கிழக்கு இந்தியாவிலும் நமது செயலாளர்கள் நண்பர் சுவிசேஷ ஊழியத்தின் தரிசனங்களை பகிர்ந்து கொண்டு கடினமாக உழைக்கின்றார்கள். அங்குள்ள ஆலயங்களை இவ்வூழியத்தில் செயல்பட வைக்கிறார்கள்.வட இந்தியாவில் மாத்திரம் 24 முன்னேற்ற பணிசெயலாளர்களும்,17 தன்னார்வ ஊழியர்களும் இவ்வூழியத்தில் இணைந்து செயலாற்றுகிறார்கள்.குறைந்த சதவீகிதம் கிறிஸ்தவர்களும், சபைகளும் கொண்ட வட இந்தியாவில் ஊழியம் செய்வது மிகவும் சவாலாக உள்ளது.தென்னிந்தியாவுடன் ஒப்பிடும் போது வடஇந்தியாவில் இவ்வூழியத்தை ஏற்றுக்கொள்பவர்கள் குறைவாகவே உள்ளார்கள்.சில இடங்களை தவிர மற்ற இடங்களில் பல தடைகளும், சோர்வுகள் இருந்த போதிலும் நமது தலைவர்கள் சிறப்பாக ஊழியம் செய்கின்றனர். சில சபைகளில் மாத்திரம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்திற்கு திறந்த வாசல் உள்ளது.மும்பை, டெல்லி போன்ற இடங்களிலும் வடகிழக்கு பகுதியிலும் அநேக வாலிபர்களை இவ்வூழியத்திற்காக பயிற்றுவிக்கிறார்கள்.இப்பணியின் விரிவாக்கத்திற்காக பாரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## வட இந்திய விரிவாக்கப்பணி திட்ட இலக்கு 2020

00 புதிய ஜெபக்குழுக்க
000 புதிய அங்கத்தினர்கள்
50 புதிய தலைவர்கள்
15 குழுக்கள் பணித்தளத்தை பார்வையிடுதல்
25 வாலிபர்கள் முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்தல்
1 தேசிய அளவிலான இளைஞர் முகாம்

## ஜெபக்குறிப்புகள்:

1.அனைத்து செயலாளர்களுக்காகவும், அவர்களின் உடல் நலத்திற்காகவும், திட்டங்கள் மற்றும் இலக்குகளுக்காகவும்
2. வட இந்திய சபைகளில் இவ்வூழியத்தின் மூலம் எழுப்புதல் உருவாக ஜெபியுங்கள்.
3. வாலிபர்கள் மத்தியில் அநேக ஊழியர்கள் எழும்ப ஜெபியுங்கள்.
4.வட இந்தியாவில் உள்ள நமது மிஷனெரிகளின் சுகத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.
5. அங்கத்தினர்களை சந்தித்து ஜெபக்குழுக்களை நடத்த அநேக தலைவர்களை தேவன் எழுப்பித்தர ஜெபியுங்கள்.

## மிஷனரிகளின் பெயர்களை சொல்லி ஜெபிப்போம்

**புது டெல்லி விரிவாக்கப்பணி ஊழியம் :**
திரு. பால் டேனியேல், திருமதி. ஜோன்ஸ் ஸ்வீட்லின்
**பழைய டெல்லி :**
மறைதிரு. யக்டோகோப்பி
**கல்கத்தா :**
திரு. ஜான்சன், திருமதி. சாந்தா & மறைதிரு. ஹிலின்சிங்சிட்
**ஜார்கண்ட் :**
மறைதிரு. சாபுன்யா, திருமதி. நகோமி
**பீகார்:**
மறைதிரு. வீரேந்திர குமார், திருமதி. சுனிதா
**மஹாராஷ்டிரா:**
**மேற்கு மும்பை:** (பிராந்திய செயலர்)
மறைதிரு. ஆசீர் செல்வராஜ் & திருமதி.மார்கிரேட்
**புனே:** (பிராந்திய செயலர்)
மறைதிரு. அருள்மணி & திருமதி. லாட்சி
நாக்பூர்: திரு. மித்திரன் & திருமதி. நிர்மலா
**நேவி மும்பை:**
திரு. ஜான் அருள்ராஜ் & திருமதி. தங்கபுஷ்பம்
**மும்பை மராத்தி ஊழியம்:**
திரு. சுரேஷ் தேகம் & திருமதி.ருகுமா
**மத்திய மும்பை:**
திரு. மனாசே, திருமதி. மெரினா
உத்திரப்பிரதேசம்: மறைதிரு.பினாய் குமார் குரு
**குஜராத் :**
அஹகமதாபாத்: (பிராந்திய செயலர்)
மறைதிரு.டேவிட்ராஜாசிங், திருமதி. ஜெனி ஜீவபிரபா
திரு மற்றும் திருமதி. அஜீபாய் வசாவா
வதோரா: மறைதிரு. ராஜதுரை & திருமதி. பத்சேபா
**ஒரிசா:**
மறைதிரு.ஹேமந்த குமார்
**அசோம்:**
குவாத்தி: செல்வி.டான்சா சின்
**மணிப்பூர்:**
மறைதிரு.தவாங்கான் காப் & திருமதி. நியாங்சங்காய் காப்
**நாகாலாந்து:**
மறைதிரு. ஹூட்டோய் அச்சுமி, திருமதி. அஹோனி அச்சுமி
**மேகாலாயா:**
மறைதிரு.டால்சகாம்சுவண்டக், திருமதி. ஹட்னுசுவண்டக்
**அருணாச்சலப்பிரதேசம்:**
திரு. லுன்மின் தாங் பைட்டே & திருமதி.பெபன்
**மிசோரம்:** திரு.லால் துகா

Rev. Prasanth Kumar




போதை மருந்து பயன்படுத்தும் பழக்கம் சமீபகாலமாக அதிகரித்துவருகிறது. இந்தியாவில் தற்போது 30% போதைமருந்துகளை உபயோகிப்பது அதிகரித்திருப்பது மிகவும் வருந்தத்தக்க காரியமாகும். ஆண்கள், பெண்கள், இளம் வாலிபர்கள் சிறுவர்கள் என அனைத்து வயதினரும் இந்த போதை பழக்கத்திற்கு அடிமையாக காணப்படுகின்றனர். கோவா – 78%, பஞ்சாப் – 77.5%, மிசோரம் – 91%, மேகலாயா – 90.7% என ஒவ்வொரு மாநிலத்திலும் போதை பழக்கமானது சமீபகாலங்களில் அதிகரித்து போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களில் 72% போதை மருந்து உபயோகிப்பதில் இறந்து போகின்றார்கள். 2017வரை 5,85,000 பேர் போதை பழக்கத்தினால் மரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. போதை மருந்துகளை உபயோகிப்பவர்கள் பெரும்பாலும் 12 முதல் 35க்குள் காணப்படுகின்றனர்.

நண்பர்கள், உறவினர்கள் மூலமாக தான் பெரும்பாலும் போதை பழக்கத்திற்கு அடிமையாகின்றனர் என்பது ஆய்வின் மூலம் விளங்குகிறது. குடும்பசூழ்நிலை, தாழ்வு மனப்பான்மை, நண்பர்களால் புறக்கணிக்கப்படுதல் போன்ற பல்வேறு காரணங்கள் இதற்கு காரணமாகிறது. போதைக்கு அடிமையானவர்கள் தற்கொலைக்கு தூண்டப்படுவது என்பது இயல்பான காரியமாகும். 2014 வரை 3,647 பேர் தற்கொலை செய்துள்ளனர். இதே போல் 1,375 பேர் மகாராஷ்டிராவிலும், 552பேர் தமிழ்நாட்டிலும், 475பேர் கேரளா மாநிலத்திலும் தற்கொலை செய்தது வருந்தத்தக்கது.

போதை பழக்கம் என்பது ஒரு கொடிய பழக்கமாகும். ஒருமுறை உபயோகித்தால் மீண்டும், மீண்டும் பலமுறை உபயோகிக்க தூண்டி அதில் இருந்து வெளியே வரவே முடியாத அளவுக்கு மனதளவில் பாதிப்பை ஏற்படுத்தியது. இக்கொடிய பாவ பழக்கத்தில் மாட்டி சிக்கி தவிக்கும் நம்முடைய நண்பர்களுக்காக தேவனிடம் மன்றாடி ஜெபிப்போம்.தேவனுடைய ஆலயமாகிய தங்கள் சரீரத்தை பரிசுத்தமாய் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்குள்ளும் எழும்ப வேண்டும். தேவன் நம்மை அசுத்தத்திற்கு, அசுத்தமான காரியங்களுக்காக அழைக்கவில்லை. நம்மை பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். கர்த்தருடைய ஆவியானவர் இம்மக்களுக்குள் வாசம் செய்து விடுதலையோடு வெற்றி சிறக்கப்பண்ணுவாராக ஆமென்.

**ஜெபக்குறிப்புகள்:**

1. அதிகரித்துவரும் போதைப்பழக்கம் முற்றிலுமாக மாற, போதைக்கு அடிமைப்பட்டிருக்கும் சிறுவர்களுக்காக ஜெபிப்போம்.
2. விடுதலை பெறமுடியாமல் தவிக்கின்றவர்களுக்கு தேவன் விடுதலை தர ஜெபிப்போம்.
3. அடிமைத்தனத்தின் போது அவர்கள் செய்த பாவங்களை தேவன் மன்னிக்க ஜெபிப்போம்.
4. போதை மருந்துகளினால் ஏற்பட்ட உடல் பெலவீனங்களிலிருந்து பரிபூரண சுகத்தை பெற ஜெபிப்போம்.
5. விடுதலை பெற்ற பிள்ளைகளுக்கு வரும் சோதனைகளை மேற்கொள்ள தேவன் பெலன் தர ஜெபிப்போம்.
6. போதை மருந்துக்கு அடிமையானவர்களுக்கு தேவன் பரத்திலிருந்து சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தந்து விடுபட
7. குற்றமனப்பான்மை நீங்கி, தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள ஜெபிப்போம்.
8. போதை மருந்துகள் விற்கும் ஜனங்கள் மனம்மாறவும், அரசாங்கம் இதற்கு முழு முயற்சி எடுத்து நம் தேசத்திலிருந்து முற்றிலுமாக இதனை தடுத்து நிறுத்த ஜெபிப்போம்.

- Mrs.Emi Bhakya






ஆடை ஒவ்வொருவருக்கும் தனி அடையாளமாக இருக்க வேண்டும் என இருந்தது. ஒரு காலத்தில் அரசனுக்கு ஒரு ஆடை, பணக்காரனுக்கு ஒரு ஆடை, ஏழைக்கு ஒரு ஆடை என இருந்த சமூக வேறுபாடுகள் களையப்பட்டு யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் அணிய உரிமைப் பெற்றுள்ளோம் இன்று! ஆனால் காலசூழற்சியில் இன்று விதவிதமான ஆடைகள் அணிவகுத்து நிற்கின்றன. ஆடை என்பது மானத்தை மறைக்க என்ற நிலைமாறி இன்று பலரது பார்வையையும் நம்பக்கம் திருப்ப என்ற நிலைக்கு வந்திருக்கிறது.நாம் உடுத்தும் உடையில் புதுமை இருந்தால் பலரும் நம்மை உற்றுநோக்குவார்கள் என்ற மனநிலை பலரது மனதையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது.ஆடை ஒருவரை அழகுபடுத்த தவறுவதில்லை. அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அணியும் ஆடை ஆபாசத்தை வெளிப்படுத்தும் வகையில் இருக்கக்கூடாது.

சமீப காலங்களில் Discovery போன்ற channal களில் சில Documentary flow உலா வருகிறது.சில ஆண்களும் பெண்களும், தங்களை மற்றவர்களில் இருந்து தனித்துவமாய் காட்ட காதுகளில் பெரிய ஓட்டைகள், உதட்டில் சாயம், முகமெல்லாம் ஆணிகள், நாக்கில் ஆணி, உடல் முழுக்க டாட்டுக்கள் என பார்ப்பதற்கு கோரமான பிசாசுபோல தோற்றத்துடன் காணப்படுகிறார்கள். ஆனால் அவர்களின் பெயர்கள் கிறிஸ்தவ பெயர்கள்.அது கிறிஸ்துவுக்கு தானே அவமானம். அன்பான வாலிபரே! வேதம் ஒருபோதும் அழகான ஆடை அணியக்கூடாது என கூறவில்லை. நானும் அப்படி கூறவில்லை.I am alone, touch me here,do you want to see, my heart is open போன்ற இன்னும் பல கொச்சையான வாசகங்களை ஆடையில் பிரிண்ட் செய்து அணிவது அவர்களின் மனநிலையை பிரதிபலிக்கிறது.உடல், முடி, நகங்கள் இவையெல்லாம் சுத்தமாக இருக்க வேண்டும்.அத்தோடு நம் தோற்றம் நேர்த்தியாகவும் இருக்க வேண்டும்.ஏனோதானோவென்று தோற்றமளிப்பவர்களை பார்ப்பது இன்று சகஜம், ஒரு சினிமா நடிகனாகவோ, விளையாட்டு வீரனாகவோ பார்பதற்கு அலங்கோலமாக இருக்கிறான் என்பதற்காக ஒரு கிறிஸ்தவனும் அதே மாதிரி இருக்க வேண்டுமென்பதில்லை. உடைகள் நேர்த்தியாகவும், சுத்தமாகவும், அடக்க ஒடுக்கமாகவும் இருக்க வேண்டும். பார்ப்பவர் கண் கூச செய்கிற உணர்ச்சிகளை தூண்டுகிற ஆடையை அணியாமல் நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். சிநேகமான ஒரு புன்சிரிப்பு எப்படி நம் முகத்திற்கு களை சேர்க்கிறதோ அதேபோல தகுதியான உடையும் அலங்காரமும். நாம் யார் என்பதை பிரதிநிதித்துவம் செய்து கௌரவிக்கும். So friends, be smart with smart look!.

**ஜெபிப்போம்.**

1. உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவ வாலிபர்கள் தங்கள் உடை அலங்காரத்தில் முன்னுதாரணமாக இருக்க ஜெபிப்போம்.
2. தாங்கள் பார்க்க அழகாக தெரிவதற்காக தேவன் படைத்த சரீரத்தை சீரழித்து கொள்ளும் வாலிபர்களின் மனநிலை சரியாக ஜெபிப்போம்.
3. திருச்சபைகள் தங்கள் வாலிபர்களில் உடை விஷயங்களில் கண்டிப்புடன் செயல்பட ஜெபிப்போம்.
4. முற்போக்கு சிந்தனை வாதிகளான சில கிறிஸ்தவ பெற்றோர்கள் விழிப்புணர்வு பெற ஜெபிப்போம்.
5. ஊழியர்களும், வாலிப தலைவர்களும் இதுபோன்ற வியங்களில் இளம் வாலிபர்களுக்கு முன்னுதாரணமாக, சாட்சியாக நடந்து கொள்ள ஜெபிப்போம்.

- Mrs.Angel

## மொழி அறிமுகம்:

ஜுவாங் மொழி ஆஸ்ட்ரோ ஆசியாடிக் மொழிக் குடும்பத்தை சேர்ந்த முண்டா மொழியின் உட்பிரிவாக அறியப்படுகிறது. மிகக் குறைவான மக்கள் இம்மொழியை பேசி வருவதால் இது அழியும் நிலையில் உள்ளது.

## மொழி பேசும் மக்கள்:

ஆதிவாசி பிரிவைச் சேர்ந்த இந்த ஜுவாங் மக்கள் பெரும்பாலும் விவசாயத்தையே செய்து வருகிறார்கள். 20 முதல் 40 குடும்பங்கள் சேர்ந்து ஒரு கிராமமாக வாழும் இவர்களில் சிலர் மூங்கில் கூடைகளை முனைந்து சந்தையில் விற்று வருகின்றனர். ஆவி வணக்கம் உடைய இவர்கள் சூரியனை வழிபடுகின்றனர். கிராமங்களில் வாலிபர்களுக்கு தனி வீடுகளும், விருந்தினர்களுக்கு தனி வீடுகளும் வைத்துள்ளனர். ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள குருக்கள் இவர்களை மத வழிபாடுகளில் நடத்துகின்றனர்.

## இம்மொழி பேசும் மக்கள் மத்தியில் சுவிசேஷப்பணி:

2010ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இவர்கள் மத்தியில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலமாக ஊழியங்கள் துவங்கப்பட்டன. தற்போது வரை சுமார் 550க்கும் மேலான ஜுவாங் இனமக்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிட்டு அவரை ஆராதித்து வருகின்றனர்.



# ஜுவாங்

மொழி – ஜுவாங்

இம்மொழி பேசும் மக்கள்: 51,000

இம்மொழி பேசப்படும் மாநிலங்கள் :
ஒடிசா, ஜார்கண்ட், மேற்கு வங்காளம்

மொழிக்குடும்பம் : ஆஸ்ட்ரோ ஆசியாடிக்

எழுத்து வடிவம் : உண்டு

வேதாகமம்: புதிய ஏற்பாடு வெளியிடப்பட்டுள்ளது.

## ஜெபிக்க:

- முதல் தலைமுறை ஜுவாங் இன விசுவாசிகள் கிறிஸ்வை பற்றுகிற அறிவிலே வளர, விசுவாசத்தில் உறுதிப்பட, கிறிஸ்துவுக்கு சாட்சியாய் தங்கள் கிராமங்களில் வாழ்ந்து அவரை மகிமைப்படுத்த...
- ஜுவாங் கிராமங்களில் உள்ள குருக்கள் மற்றும் கிராமத்தலைவர்கள் அனைவரும் சத்தியத்தை அறிய, இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள...
- ஜுவாங் மக்கள் மத்தியில் நடத்தப்படும் சிறுவர் பராமரிப்பு மையங்களில் கல்வி பயிலும் சிறு பிள்ளைகளுடைய நல்வாழ்விற்காக, எதிர்காலத்திற்காக...
- ஜுவாங் மக்கள் மத்தியில் காணப்படும் வறுமை ஒழியவும், அவர்கள் மத்தியில் கல்வி அறிவு பெருகவும், மருத்துவ உதவிகள் கிராமங்களில் கிடைக்கப்பெற..
- ஜுவாங் மக்கள் மத்தியிலிருந்து ஊழியர்கள் எழும்பவும், பரிசுத்த ஆவியானவர் அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் தமது வார்த்தையை உறுதிப்படுத்தி அநேகரை இரட்சிக்கவும் ஜெபிப்போம்.

# மாதம் ஒரு மொழி

3rd week Prayer

ஒடிசா மாநிலத்தில் வனப்பகுதிகளில் அதிகமாய் காணப்படும் ஜுவாங் மொழி பேசும் மக்கள் ஜுவாங் இனமக்கள் என அழைக்கப்படுகிறார்கள். இவர்களுடைய ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பூஜாரி இருப்பார். இவர்களது கிராம சபையில் அனைத்து சமுதாய பிரச்சனைகளுக்கும் தீர்வுகள் காணப்படுகின்றன. இவர்களது கிராமத்தில் இயேசு கிறிஸ்துவை ஒருவர் ஏற்றுக்கொண்டால் கிராம மாக சேர்ந்து அவர்களை சமுதாயத்திலிருந்து புறக்கணிக்கும் பழக்கமும் அதிகமாக காணப்படுகிறது.

பெரும்பாலான மக்கள் காடுகளில் கிடைக்கும் தேன், விறகு, இலைகள் ஆகியவற்றை விற்று தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இவர்கள் மழைகாலங்களில் விவசாயமும், மற்ற காலங்களில் மூங்கில் சமபந்தப்பட்ட கைவினை பொருட்களும் உற்பத்தி செய்து வருகின்றனர். இவர்கள் வன ஆவிகளையும், முன்னோர்களின் ஆவிகளையும் வணங்கும் பழக்கமுடையவர்கள். இதுபோன்று தர்ம தேவதை, பசுமாதா ஆகிய தெய்வங்களை வல்லமையான தெய்வங்களாக வணங்கி வருகின்றனர், இவர்கள் கிராமங்களை பாதுகாப்பதற்கு கிராமஸ்ரீ எனும் ஆவியை வணங்கி வருகின்றனர்.

நமது ஊழியம்: 1980-ம் ஆண்டு இந்த இனமக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு கனிகள் இல்லாத காரணத்தால் நிறுத்தப்பட்டது. ஆனால் மீண்டும் 1990-ம் ஆண்டு ஓர் பணித்தளம் திறக்கப்பட்டு ஓராண்டுக்குள் உபத்திரவத்தின் நிமித்தம் மூடப்பட்டது. மீண்டும் 2010-ம் ஆண்டு மிகுந்த ஜெபத்தோடு ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 550 விசுவாசிகள், 16 ஆராதனைக் குழுக்களில் இயேசுவை ஆராதிக்கின்றனர்.



# ஜுவாங் மக்களினம்

## ஜெபிக்க:

- இந்த இனத்திலுள்ள 50,000 மக்களும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள, அனைத்து கிராமங்களிலும் ஆலயங்கள் எழுப்பப்பட
- நமது ஊழியத்தை எதிர்க்கும் பூஜாரிகள் இரட்சிக்கப்பட, கிராம சபைகள் விசுவாசிகள் சாட்சியாக வாழ...
- இந்த இனமக்கள் மத்தியில் காணப்படும் மூடப்பழக்கவழக்கங்கள் மாற,
- தற்போது மதவாத இயக்கங்கள் இந்து பண்டிகைகளை அறிமுகப்படுத்தி, சுவிசேத்தை தடை செய்ய உருவாக்கும் அனைத்து திட்டங்களும் தோற்கடிக்கப்பட...
- இந்த இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் நமது ஊழியர்களை தேவன் பாதுகாக்க, வல்லமையாய் பயன்படுத்த...

# மாதம் ஒரு மக்களினம்

-Mrs.Sheela Mary

PEOPLE GROUP & LANGUAGE CONCERN

FMPB YOUTH & TEENS WING

# கொரோனா

4th week Prayer



சமீபத்திய நாட்களில் சீனாவில் தோன்றி உலகத்தின் 60 நாடுகளுக்கு பரவியுள்ள கோவிட் -19 என பெயரிடப்பட்டுள்ள கொரோனா வைரஸ் நோய்க் கிருமியினால் அதிக மானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். Covid-19 கோவிட்-19 இது சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ், மனிதர்களிடம் ஏற்படுத்தும் தொற்றுநோயாகும். 31 டிசம்பர் 2019 அன்று உலக சுகாதார அமைப்பால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட 2019-ncovஎன்ற கொரோனா வைரஸின் ஒரு புதிய திரிபு சீனாவின் ஊகான் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.இந்த தீநுண்மிகள் பாம்புகளிலிருந்து தோன்றியதாக சந்தேகிக்கப்பட்டது ஆனால் கொரோனா வைரஸ் காற்று வழியாக பரவுவதைவிட, சுவாசத்துளிகளுடன் தொடர்பு கொள்வதன் மூலமே பெரும்பாலும் பரவுவதாகவும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இதை உறுதிப்படுத்தி உள்ளது. எனவே கொரோனா வைரஸ் பாதித்தவரிடமிருந்துதான் மற்றவர்களுக்கு பரவுவதாக உலக சுகாதார மையம் அதிகாரப்பூர்வ அறிக்கை வெளியிட்டுள்ளது. இதுவரை அநேகர் உயிரிழந்துள்ளனர். அநேகர் மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.சீனாவுக்கு அடுத்தபடியாக தென் கொரியா, இத்தாலி, ஈரான், ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவிலும் அநேகர் இந்நோய்க் கிருமியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.கொரோனா வைரஸ் நோய்க் கிருமியினால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு கர்த்தர் சுகம் தர வேண்டியும், இந்நோய் கிருமி மேலும் பரவாமல் தடுக்கப்படவும், இந்நோயினால் தங்களுக்கு அருமையானவர்களை இழந்துள்ள குடும்பங்களின் ஆறுதலுக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும்.

### 1. உங்களுக்காக, உங்கள் குடும்பத்திற்காக:

1. நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கப்பட...
2. நிலை கால்களில் இயேசுவின் இரத்தம் தெளிக்கப்பட...
3. நமது பாவங்களையும், குடும்பத்தார் பாவங்களையும், எல்லா குறைகளையும் நீக்க, நமது அனுதின தேவைகள் சந்திக்கப்பட...
4. நாம் வீட்டிலேயே அனுதினமும் துதித்து, ஆராதித்து, ஜெபித்து, வேதம் தியானித்து, ஆவியில் வளர எழுப்புதலுக்கு ஆயத்த மாக ....

### 2. விசுவாசிகளின் குடும்பங்களுக்காக:

1. நம் சபை மக்கள் எல்லோரின் பாவங்களும் மன்னிக்கப்பட, குறைகள் நீக்கப்பட...
2. எல்லோரின் அனுதின தேவைகள் சந்திக்கப்பட.யாரையும் கொரோனா தாக்காதிருக்க....
3. ஒவ்வொருவரின் குடும்ப பலிபீடம் செப்பனிடப்பட, ஒவ்வொரு வீடும் ஜெப வீடாக...
4. ஒருவரும் பின்வாங்காதிருக்க, ஜெபம், துதி, ஆராதனை, வேத தியானத்தில் வளர.எழுப்புதலுக்கு ஆயத்தமாக...
5. இந்த நாட்கள் முடிந்து சபைக்கு வரும்போது அக்கினியாய் மாறி வரவேண்டும். சுபாவமாற்றம் ஏற்பட்டு வரவேண்டும்.
6. தினந்தோறும் குடும்பத்தில் ஜெபம் நடப்பதால் இரட்சிக்கப்படாத குடும்ப நபர்களும், அண்டை வீட்டாரும் இரட்சிக்கப்பட,மீண்டும் சபைக்கு வரும்போது, ஒரு பெருங்கூட்டம் சபையில் சேர்க்கப்பட...

### 3. நமது பட்டணம் & எல்லை பாதுகாக்கப்பட:

1. எல்லை முழுவதும் இயேசுவின் இரத்தம் தெளிக்கப்பட.நோய் பரவ கூடாது, உயிர்ப்பலி ஏற்படக் கூடாது.
2. நமது எல்லை பகுதியில் இயேசுவின் நாமம் மகிமைப்பட வேண்டும்.
3. மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட, யாரும்பசி, பட்டினியால் வாடக்கூடாது.
4. எல்லோரும் தங்களது பாவங்களை உணர்ந்து திருந்த வேண்டும்.மனந்திரும்பி ஆண்டவரை ஏற்றுக்கொள்ள...
5. எல்லோரும் அரசாங்க சட்டத்திற்கு கீழ்படிந்து அடங்கியிருக்க...

### 4. நமது மாவட்டம் & மாநிலத்திற்காக:

1. நமது மாவட்டத்தில் நோய் பரவா திருக்க, உயரிழப்பு ஏற்படாதிருக்க...
2. மருத்துவ கண்காணிப்பில் இருப்பவர்கள் குணமாக.நமது மாவட்டத்தில் பாவங்கள் ஒழிய...
3. மக்கள் மனந்திரும்பி தேவனை தேட.மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட....
4. நமது மாநிலத்தில் உயர்பலி ஏற்படா மலும் இருக்க.அரசாங்கம் திட்டமிட்டு துடிப்புடன் செயல்பட....
5. சுகாதார பணியாளர்கள்,மருத்துவ பணியாளர்கள், காவல்பணியாளர்கள் பாதுகாக்கப்பட, ஆசீர்வதிக்கப்பட...
6. நோய்கட்டுப்படுத்தப்பட,மருந்துகள் கண்டுபிடிக்கப்பட....
7. பாதிக்கப்பட்டோர்கள் சுக மாக.மக்களின் தேவையை அரசாங்கம் சந்திக்க...
8. மாநிலத்தில் மிகப்பெரிய எழுப்புதல் உண்டாக.எல்லா திருச்சபைகளும் பாதுகாக்கப்பட, விசுவாசிகள் ஊழியர்கள் பாதுகாக்கப்பட....
9. எல்லா வீடுகளும் ஜெபவீடாக, பலத்த எழுப்புதல் பற்றிப்பிடிக்க...

### 5. இந்திய தேசத்திற்காக:

1. இந்தியாவில் நோய் தொற்று கட்டுக்குள்வர அதிகமாய் பாதிக்கப்பட்ட கேரளா, மகாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களுக்காக...
2. உயிர் சேதங்கள் ஏற்படாதிருக்க, மக்கள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட...
3. பெரியஅளவில்பொருளாதாரம்விழாதிருக்க.தேசத்தின் பாவங்களை தேவன் மன்னிக்க.அந்தகார இருள் விலக, வெளிச்சம் வர...
4. பெரிய எழுப்புதல் உண்டாக, சபைகள் வளர.சபைகள், ஊழியர்கள், விசுவாசிகள் பாதுகாக்கப்பட....
5. இதன் பிறகு எல்லா துறைகளிலும் எழுச்சி உண்டாக,தேசத்தில் தேவநாமம் மகிமைப்பட....
6. கொரோனா ஒழிப்பு பணியில் உள்ள யாவரையும் தேவன் பாதுகாக்க

### 6. உலக நாடுகளுக்காக:

1. உலக நாடுகளை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் அழிந்து போக...
2. வைரஸ் உருவான சீனாவில் தொற்று மாற, இரட்சிப்பு உண்டாக, மீண்டும் பரவாதிருக்க...
3. அதிகமாய் பாதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய நாடுகளில் ஆரோக்கியம் உண்டாக...
4. நோய் தொற்று தடுக்கப்பட, உயிர்பலி தடுக்கப்பட..
5. சீக்கிரம் மருந்து கண்டுபிடிக்கப்பட...
6. பாவ உணர்வடைய, மனந்திரும்ப, எழுப்புதல் அடைய.உலக மக்கள் ஆண்டவருக்கு மகிமை செலுத்த...
7. மூடப்பட்ட தேவாலயங்கள் திறக்கப்பட.இதன் மூலம் பெயர் கிறிஸ்தவம், துர்உபதேசங்கள் அடியோடு அற்றுப்போக...
8. எங்கும் தேவ பயம் உண்டாக, தேவனை தேட,வரவிருக்கும் எழுப்புதலுக்கும்,இயேசுவின் இரண்டாம் வருகைக்கும் உலகம் ஆயத்தப்பட...
9. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்க...
10. உலக யுத்தம் வராதிருக்க, மக்களின் வாழ்க்கை மீண்டும் கட்டப்பட...

கொரோனா வைரஸ் என்பது பாலூட்டிகளிலும் பறவைகளிலும் நோய்களை ஏற்படும் ஒரு தீநுண்மி(Virus) ஆகும். இத்தீநுண்மிகள் மனிதர்களுக்கு சுவாச நோய்த் தொற்றுகளை ஏற்படுத்துகின்றன. இத்தொற்றுகள் பெரும்பாலும் மிதமானவையாக இருந்தாலும்அரிதான சந்தர்ப்பங்களில் ஆபத்தானவையாக உள்ளன. இந்நோய்க்கான தடுப்பு அல்லது சிகிச்சைக்காக அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள் அல்லது தீநுண்மி தடுப்பு மருந்துகள் எதுவுமில்லை.சீக்கிரம் மருந்து கண்டுபிடிக்கப்பட...

பல நாடுகளில் மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெற்று வரும் சுமார் 39,390க்கும் அதிகமானோருக்கு கர்த்தர் மனதிரங்கி பூரண சுகம் தர ஜெபிப்போம்.மெய்யாகவே இக்கரிசனைக்காக விசுவாசத்தோடு நாம் ஜெபிக்கும் போது கர்த்தர் அதைக் கேட்டு இக்கொடிய வைரஸ் நோய்க் கிருமி தாக்குதலிலிருந்து அனைவருக்கும் விடுதலையைக் கட்டளையிடுவார்.

- KTM

# சத்தீஸ்கர் மாநிலம்



இந்துக்கள்: 93.25%
முஸ்லீம்கள் : 2.02%
கிறிஸ்தவர்கள்: 1.92%
மற்றவர்கள் : 2.13%

தலைநகரம் : ராய்பூர்
மக்கள் தொகை : 2,55,40,196
மாவட்டங்கள்: 27
கிராமங்கள்: 10,121

கல்வியறிவு : 70%
பேசப்படும் மொழிகள் : சத்தீஸ்கரி, ஹிந்தி, ஒடிசி, மராத்தி, தெலுகு

சத்தீஸ்கர் இந்திய மாநிலங்களில் ஒன்றாகும். 1 நவம்பர் 2000 அன்று மத்தியப்பிரதேச மாநிலத்திலிருந்து 16 தென்கிழக்கு மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, சத்தீஸ்கர் மாநிலம் உருவாக்கப்பட்டது. மத்தியப்பிரதேசம், மஹாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம், ஒரிசா, ஜார்கண்ட், உத்திரப்பிரதேசம் ஆகியவை சத்தீஸ்கர் மாநிலத்தை சுற்றியுள்ள மாநிலங்களாகும். இம்மாநிலத்தில் 80 மக்கள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த சிறுதொழிலையே நம்பியுள்ளனர். இம்மக்கள் தொகையில் 50% ஆதிவாசிகள், தாழ்த்தப்பட்டோர் உள்ளனர். சுமார் 47.9 % மக்கள் வறுமையில் வாடுகின்றனர். வறுமையில் வாடும் மாநிலங்கள் வரிசையில் இது இந்தியாவில் முதலிடத்தில் உள்ளது.

இம்மாநிலத்தின் விளைநிலம் 4,828 ஹெக்டர் பரப்பளவு கொண்டது. நெல், நவதானியங்கள், எண்ணெய், வித்துக்கள் ஆகியவை முக்கிய வேளாண் பயிர்களாகும். இம்மாநிலத்தின் மொத்தப்பரப்பில் 41.33 சதவீகித பகுதிகளில் வளமிக்க காடுகள் உள்ளன. இங்கு பல இரும்பு ஆலைகள், மின்சார உற்பத்தி தொழிற்சாலைகள், உருக்கு ஆலைகள் உள்ளன. இது அலுமினியம், இரும்பு, சுண்ணாம்பு, டோலமைட், பாக்சைட், படிக்கற்கள், பளிங்கு கற்கள் போன்ற கனிம வளங்கள் நிறைந்த மாநிலமாகும். இங்கு அச்சனக்மர் வனவிலங்கு சரணாலயம், இந்திராவதி தேசிய பூங்காவும் உள்ளன.

## சத்தீஷ்கர் மாநிலத்திலுள்ள நமது ஊழியர்களுக்காக ஜெபிப்போம்

| | |
|---|---|
| திரு. முத்து குமார் | திரு. அருண் குமார் |
| திருமதி. நேத்ரவதி | திருமதி. சாரதி |
| மறைதிரு. ரமேஷ்வர் தயால் நிர்மல் | திரு. டேவிட் மஸி |
| திருமதி. மதுகலா | திருமதி. நிஷா |
| திரு. பத்வி சோமாலியா மன்சுபாய் | திரு. பாலா முருகன் |
| திருமதி. மகலா ஷிலாபேன் | திருமதி. அன்பு மலர் |
| திரு. கிங்ஸ்லி ஐசக் ஜான்சன் | திரு. வால்வி தீனாதானா |
| திருமதி. மீனா | திரு. தினேஷ் குமார் |
| மறைதிரு. ராபின்சன் ஹன்ஸ்தக் | திருமதி. நீத்து |
| திருமதி. ஜான்சி ராபின்சன் | திரு. லால் கிஷோர் முர்மு |
| மறைதிரு. லெளலின் புன்யா | திரு. பூபதி |
| திருமதி. கிரண் பேன்கிரா | திருமதி. பாலின் மேரி |
| செல்வி. லியான்பியாக் நேமி | திரு. பென்ஹர் |
| திருமதி. ஹன்னா கான்சல்வ்ஸ் | திருமதி. ஜோசிலா சுந்தரிபாய் |
| திரு. டிட்டுங்போவ் | திரு. ஆர். தாமஸ் |
| திருமதி. மாமாலன்கேமி சானாலுங் | திருமதி. ரெஜினி |

## ஜெபக்குறிப்புகள்:

★ 27 மாவட்டங்களிலும் ஏராளமான ஊழியங்கள் நடைபெற்று அனைவருக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட...
★ இம்மாநில மக்கள் அனைவரும் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள...
★ கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் பெருக...
★ சுவிசேஷ எதிர்ப்பு இயக்கங்களின் திட்டங்கள் அபத்தமாக்கப்பட...
★ அனைத்து இன மக்களும் இரட்சிக்கப்பட...
★ சமுதாய கட்டுகள் உடைக்கப்படவும், மூடநம்பிக்கை மற்றும் அறியாமை ஒழிந்து இம்மாநிலத்தில் சுபிட்சம் நிலவ...
★ இம்மாநிலத்தில் பணி செய்யும் மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக, ஊழியர்களுக்காக, ஊழியங்களுக்காக ....
★ விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் மானியம் மற்றும் உதவித்தொகைகள் துரிதமாகவும், சரியான முறையிலும் கிடைக்க...
★ இம்மக்கள் வாழும் பகுதிகளில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலும் மனித ஒத்தாசைகளும் கிடைக்க...
★ இங்குள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட...
★ வேளாண்மை சார்ந்த சிறுதொழில் செய்பவர்களுக்காக...
★ வறுமையில் வாடும் மக்களுக்காக, பாவ கட்டுகளிலிருந்து ஜனங்கள் விடுதலை பெற...
★ இம்மாநிலங்களில் கிராமங்கள் தோறும் சபைகள் எழும்ப ஜனங்கள் திரளாய் மனந்திரும்ப...
★ இம்மாநிலத்தில் உள்ள மதமாற்ற தடைச்சட்டம் நீக்கப்படவும், ஊழிய எல்லைகள் விரிவாக்கப்பட...
★ பெரும்பாலான கிராமங்களில் சாலைகள், கல்வி, குடிநீர், சுகாதாரம் இல்லாத நிலை மாற்றப்பட ...

- *Prayer Wing*

# எரிகோ



எரிகோ மதில் இடிந்து விழுந்ததையும், அதன் வழியாக நாம் கற்றுக் கொள்வதை குறித்தும் நாம் காணலாம். இன்று நாம் இடிக்க வேண்டிய எரிகோ பாவமாகிய மதிலாக இருக்கலாம். உலக சிநேகம் என்ற மதிலாக இருக்கலாம். அஞ்ஞான மார்க்கமாகிய மதிலாக இருக்கலாம். உண்மையற்ற கிறிஸ்தவம் என்ற மதிலாக இருக்கலாம். கிறிஸ்தவ சபைகளுக்குள் ஆக்கிரமித்துள்ள பாரம்பரியம் என்ற மதிலாக இருக்கலாம். ஊழியத்தை தடைசெய்கிற எதிர் சக்திகள் என்ற மதிலாக இருக்கலாம். நாம் இந்த மதில்களை இடிக்கப் போகிறோம்.

இந்த 6ஆம் அதிகாரம் முழுவதிலும் கானான் தேசத்தின் முதல் பட்டணமாகிய எரிகோவை தேவனுடைய பிள்ளைகள் எப்படி சுதந்தரித்துக் கொண்டார்கள்? என்ற ஒரு சரித்திர சம்பவத்தை தியானிக்கிறோம். அன்று இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் முதல் பட்டணமாகிய எரிகோவை எவ்விதம் சுதந்திரத்தார்களோ அவ்விதமாகத்தான் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம் நமக்காய் கர்த்தர் வைத்திருக்கின்ற தான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், பூமிக்குரிய ஆசீர்வாதங்களையும் சுதந்தரிக்க வேண்டும். அன்று இருந்த எரிகோ யோசுவாவுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் முன்பாக திறந்த வாசலாக இல்லை. பூட்டப்பட்டவாசலாக இருந்தது. எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது யோசுவா 6:1 இன்றைக்கும் கூட தேவனுடைய ஆசீர்வாதங்கள் பூட்டப்பட்ட கதவுகளுக்குள் தான் இருக்கிறது.

கர்த்தர் நமக்கு வைத்திருக்கிற ஆத்மீக சரீர ஆசீர்வாதம், விண்ணுக்குரிய மண்ணுக்குரிய ஆசீர்வாதம் பூட்டப்பட்ட அறைகளுக்குள், பூட்டப்பட்ட பட்டணங்களுக்குள் தான் இருக்கிறது. அப்படியானால் நாம் அதை சுதந்தரித்துக் கொள்வது எப்படி? வேதத்தில் இந்த எரிகோவைப்பற்றி 7வித குறிப்புகள் உள்ளன. அதிலே 4 எதிர்மறையான காரியங்களும் 3 ஆசீர்வாதமான காரியங்களும் உண்டு.

### 1. எரிகோ - பூட்டப்பட்ட பட்டணம்:

தேவனுடைய ஆசீர்வாதம் எதுவும் தெருவில் கிடைக்கவில்லை. அந்தகாரத்திலும், இரகசியமான இடத்திலும் சாத்தான் காவலுக்குள்ளும் இருக்கிறது. ஆதாமிடமிருந்த ஆசீர்வாதம் அவனின் பாவத்தினால் சாத்தானிடம் அடகுபோய் விட்டது என்று புரிகிறோம்.

### 2. எரிகோ- திருடர்களின் பட்டணம்:

ஒருவன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். இந்த எரிகோவுக்கும், எருசலேமுக்கும் இடையில் சுமார் 25 மைல் தூரம் உண்டு. ஒரு பெரிய சாலை ஒன்று உள்ளது. சாலையின் இருபக்கங்களிலும் திருடர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள். யாராவது அவ்வழியாய் போனால் அவர்களை பிடித்து, அடித்து அவர்களிடத்தில் இருக்கிற பொருட்களை அபகரித்து எடுத்துக் கொள்கிற திருடர்கள் அதிகம் இருக்கிறார்கள். எருசலேமாகிய சபையை விட்டு எரிகோவாகிய உலகிற்குள் போகக் கூடாது என்று எச்சரிக்கப்படுகிறோம்.

### 3. எரிகோ - வேசிகளின் பட்டணம்:

எரிகோவின் அலங்கத்தின் உட்புறம் முழுவதும் அநேக பெண்கள் அங்கே வருபவர்களிடம் வேசித்தனம் பண்ணினார்கள். எரிகோவை வேவு பார்க்கச் சென்ற இரண்டு பேர் அன்று இரவு ராகாப் என்ற வேசியின் வீட்டில் தான் தங்கினார்கள். ஆனால் அவள் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த வாட்டியானாள்.

### 4. எரிகோ - சபிக்கப்பட்ட பட்டணம்:

இப்பட்டணம் கர்த்தருடைய தாசனாகிய யோசுவாவால் சபிக்கப்பட்டது. இதன் அஸ்திபாரத்தைப் போடுகிறவன் அதை போடுகிற போது தன் மூத்தக் குமாரனையும் அதன் நிலைக்கால்களை வைக்கிற போது தன் இளைய குமாரனையும் சாகக் கொடுப்பான் என்று எரிகோவைக் கட்டக் கூடாதபடி கர்த்தர் இதை சபித்தார். ஆகவே இது சபிக்கப்பட்ட பட்டணம்.

இதுவரை நான்கு குறிப்புகள் எதிர்மறையானவைகளைப் பார்த்தோம். இனி ஆசீர்வாதமான மூன்று குறிப்புகளை தியானிப்போம்.

### 5. சூரியோதயப் பட்டணம்:

சூரியன் உதித்த உடனே முதலில் இப்பட்டணத்தில் தான் வெளிச்சம் உண்டாகும். கானான் தேசத்தில் இருக்கிற நூற்றுக்கணக்கான பட்டணங்களில் சூரியன் உதிக்கிறதை இந்த பட்டணத்திலிருந்து பார்க்கலாம். சூரிய வெளிச்சம் முதலில் இங்குதான் படும். இந்த சூரியோதயப்பட்டணம் என்பது தேவ பிரசனத்தை பெற்றுக்கொள்ளும் பட்டணம் என்று அர்த்தமாம்.

### 6. ஆசாரியர்களின் பட்டணம்:

எரிகோவில் 12000 ஆசாரியர்கள் வாழ்ந்ததாக சரித்திரச் சான்று கூறுகிறது. அவர்கள் தினந்தோறும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட சீட்டின் படி ஊழியம் செய்ய எருசலேமுக்கு வந்து போவார்கள். இங்கு எலியாவின் நாட்களில் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு பயிற்சி கொடுக்கும் பள்ளிக் கூடம் இருந்தது. (2 இராஜா 2:5, லூக் 10:31)

### 7. பேரிச்ச மரங்களின் பட்டணம்:

கானான் தேசத்திலே பேரீச்சை மரங்கள் மிக அருமையான ஆசீர்வாதமான இரும்புச்சத்து நிறைந்த ஒரு நல்ல சாப்பிடுகிற உணவுப் பொருளாகக் காணப்படுகிறது. இந்த பேரிச்சை மரங்கள் எரிகோவில் அதிகம் இருந்ததாக காண்கிறோம். (உபா 34:2, நியா 1:16) அதாவது கனிகள் உள்ளப் பட்டணம் (கலா 5:22).

எரிகோவை பிடிக்க சுய முயற்சியினால் நடக்காது. எரிகோவைச் சுற்றிலும் பெரிய அலங்கம் உள்ளது மனுஷ பெலத்தாலோ, கடப்பாறையை கொண்டோ, சுத்தியல் சம்மட்டி கொண்டோ இடிக்க முடியாது. மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும். தேவன் எப்போது செயல்படுவார்? யாருக்காக செயல்படுவார்? விசுவாசிப்பவர்களுக்காகவே தேவன் செயல்படுவார்.

விசுவாசம் என்பது தேவனின் சர்வ வல்லமையை இவ்வுலகத்திற்கு பாய்ந்தோடச் செய்யும் வாய்க்காலாயிருக்கிறது. யோசுவாவின் விசுவாசமே எரிகோவின் மதிலை உடைக்கிற தேவ வல்லமையை இறக்கியது.

கர்த்தர் யோசுவாவையும் 40,000 யுத்த வீரர்களையும் எரிகோவைச் சுற்றிலும் தினமும் அதிகாலையில் ஒருமுறை சுற்றச் சொன்னார். ஆறு நாள் அப்படிச் செய்ய வேண்டும். ஏழாம் நாள் ஏழுமுறை சுற்ற வேண்டும் என்றார். அப்படியே ஏழாம்நாள் ஏழு முறை சுற்றினார்கள். மொத்தம் 13 முறை சுற்றினார்கள். சுற்றி வந்தால் அலங்கம் இடிந்து விழுமா? அவர்கள் விசுவாசித்தார்கள். விசுவாசத்தை செயலில் காட்ட சுற்றி வந்தார்கள். நாமும் கர்த்தர் சொன்னபடியே செய்ய வேண்டும். அதுவே விசுவாசத்தின் பிரதிபலிப்பாகும். விசுவாசம் வேத வசனத்தோடு இணைந்து செல்லும். கர்த்தருக்கு கீழ்படியும். எங்கே விசுவாம் உண்டோ அங்கே கீழ்படிதலும் இருக்கும். விசுவாசத்தை செயல்படுத்தும் போது உலக மக்களுக்கும் ஆவியைப் பெறாதவர்களுக்கும் பைத்தியக்காரத்தனமாகத் தெரியும். ஆனால் கர்த்தர் விசுவாசிப்பவர்கள் பட்சத்திலிருந்து செயலாற்றுவார். எரிகோவின் மதில் விசுவாசத்தால் விழுந்தது.

அன்பானவர்களே! யுத்தத்தின் வெற்றியைக் கொண்டாட நாம் அமைதியாய் இருக்க வேண்டும் அது நிறைய பேருக்கு முடியாது. ஆனால் இஸ்ரவேலர் எப்படி அமைதியாயிருந்தார்கள்? விசுவாசத்தின் பிரதிபலிப்பினால் தான் அவர்களால் அமைதியாக இருக்க முடிந்தது. ஆண்டவர் அவர்களை அமைதியாய் இருக்க சொல்ல காரணம் என்னவென்றால் சிலர் ஒரு வேளை பேசும் போது இப்படியாக ஆரம்பிப்பார். வில்லை எடுத்து அம்பை தொடுத்து விட்டால் வெற்றிக்கிடைக்கும் என்றும், கடப்பாறை கம்பியை எடுத்து கோட்டை சுவரை இடித்தால் வெற்றிக்கிடைக்கும் என்றும் பேசி தன்னுடைய அவ்விசுவாச வார்த்தைகளையே சொல்ல ஆரம்பிப்பார்கள். அதனால் தான் கர்த்தர் சொன்னார்! விசுவாசம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அமைதியாக சுற்றி வாருங்கள் என்றார். இந்த யோசுவாவோடு கர்த்தர் தான் பேசினாரா? அல்லது கதை கட்டி விடுகிறாரா? நாம் போகிற பாதை சரிதானா? அவர் சொல்கிற வார்த்தை சரிதானா? எரிகோவை பிடிக்க முடியுமா? என்றெல்லாம் சிந்திக்க ஆரம்பித்துவிடுவார்கள். அது பெரிய குழப்பங்களையும் விளைவுகளையும் உண்டாக்கிவிடும். அது யுத்தத்திலே சீக்கிரமாய் ஜெயம் பெறுவதற்கு தடையாய் போய்விடும். புரியவில்லை என்று சொன்னால் அமைதியாய் இருங்கள். கர்த்தர் உங்களுக்கு புரிய வைப்பார். பின்பு உங்களுக்கு ஜெயம் கிடைக்கும்.

இவ்விதமாக ஏழு முறை சுற்றவேண்டும் என்று சொல்கிறார். ஏழு என்றால் பூரணம் என்று அர்த்தம். வேதத்தில் ஏழு என்று அநேக முறை சொல்லப்பட்டுள்ளது.

-Mrs.Sheela Mary




குடியேற்ற காலங்களின் கடைசி செய்தியாக இந்த வாரம் நாம் கற்றுக்கொள்விருப்பது, பலத்த ஏழு ஜாதிகள் என்பதாகும்.இதை யோசுவா 3:9-11 ல் தெளிவாக அறிந்து கொள்ள லாம் “யோசுவா இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் இங்கே சேர்ந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய வார்த்தையை கேளுங்கள் என்றான். பின்பு யோசுவா,ஜீவனுள்ள தேவன் உங்கள் நடுவே இருக்கிறார் என்பதையும், அவர் கானானியரையும், எத்திரையும், எவியரையும், பெரிசியரையும்,கிர்காஸி யரையும், எமோரியரையும், எபூசியரையும் உங்களுக்கு முன்பாக துரத்திவிடுவார் என்பதையும், நீங்கள் அறிந்து கொள்வதற்கு அடையாளமாக இதோ, சர்வபூமிக்கும் ஆண்டவரா யிருக்கிறவருடைய உடன்படிக்கை பெட்டி உங்களுக்கு முன்னே யோர்தானிலே போகிறது” என்றான்.

இந்த ஏழு ஜாதிகளிடமிருந்து நீங்களும், நானும் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் என்ன? ஏன் தேவன் அவர்களை துரத்திவிட வேண்டும். மேலும் நீ அவர்களை முறியடித்து, அவர்களைச் சங்காரம் பண்ணக்கடவாய். அவர்களோடே உடன்படிக்கை பண்ணணவும், அவர்களுக்கு இரங்கவும்வேண்டாம்(உபா 7:1-6) என்று ஏன் சொன்னார் என்பதையும் இந்த செய்தியிலே நாம் காணலாம். ஆதித்திருச்சபை இந்த தபசு காலத்தில் ஏழு வாரங்களிலும், ஏழு சங்கீதங்களை தியானம் செய்து, பாவ அறிக்கை செய்வது வழக்கம். இந்த சங்கீதங்களை தீவினை செய்ததற்காக வருந்துதல்(The penitential psalms) என்று கூறுவர். இந்த ஏழு சங்கீதங்களை (6,32,38,51,102,130 மற்றும் 143) மார்டீன் லூத்தர் ‘பவுலின் சங்கீதங்கள்’ என்று கூறுவார். ஏனென்றால், இந்த சங்கீதங்களின் அடிப்படையிலேயே பவுல் ரோமர் புத்தகத்தை எழுதினார் என்றும் கூறுவர். மேல் சொன்ன இந்த ஏழு சங்கீதங்களும், ஏழு கொடிய பாவங்களிலிருந்து நம்மை விடுதலை யாக்கும் என்று ஆதித்திருச்சபையினர் நம்பினர். அப்படியென்றால், அந்த ஏழு பாவங்கள் என்ன என்பதை நீதி 6:16-19 வசனத்தில் நாம் காணலாம். “ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார். ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன, மே ட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடும் கால், அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் ஆகிய இவைகளே” இப்பொழுது நாம் இந்த ஏழு பாவங்களும் மேல சொன்ன ஏழு ஜாதியினரோடு, எப்படி பொருந்துகிறது என்பதை கீழே காணும் ஏழு ஜாதிகளின் சிறுகுறிப்புகளின் மூலம் கற்றுக்கொள்ளலாம்.

**1.மேட்டிமையான கண் :**

அகந்தை- சங் 32




எமோரியர்

எமோரியர் என்பதற்கு மலைமக்கள், பிரபலமானவர்கள் என்று அர்த்தம்.வேதத்தில் எமோரியரின் ஆவி சுயத்தை குறிக்கிறது மற்றும் பேர் பிரஸ்தாபத்தையும் குறிக்கிறது. எமோரியர் புகழை தேடுபவர்களாகவும், மனித புகழ்ச்சியை தேடுபவர்களாகவும் இருந்தனர். பூமிக்குரிய காரியங்களிலும் மக்களை தன் வயப்படுத்தும் காரியங்களிலும் இவர்கள் அதிகம் ஈடுபடுவர்.

**2. பொய்நாவு:**

சிற்றின்ப நடத்தை சங் 51




கானானியர்

கானானியர் என்பதற்கு நிலப்பகுதியில் வாழும் மக்கள் என்பது பொருள்.இவர் எப்பொழுதும், பூமிக்குரிய சிற்றின்ப ஆசையில் அதிகம் ஈடுபவர்.மேலும் இவர்கள் மக்களை பிரியப்படுத்தும் கூட்டமாக வாழ்ந்தனர்.கானானியர்கள் தவறான பாலியல் சிற்றின்பங்களுக்கு அதிகம் ஈடுபடுவர் என்பதை சோதாம் கோமாரா பட்டணத்தின் மூலம் (கானானியர் பட்டணங்கள் ஆதி 10:19) நாம் அறிந்துகொள்ளலாம்.

**3.குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் கை :**

பொறாமை-சங் 130




எபூசியர்

எபூசியர்கள் மற்றவர்களை தங்களை விட தரக்குறைவாக எண்ணுகிற மக்கள். மேலும் வார்த்தையினால் அவர்களை காயப்படுத்தும் மக்கள், மேலும் பிறர் சொல் லுவதை அப்படியே கேட்கும் மக்கள் கூட்டம். சீமோன் பேதுரு பட்டயத்தை உருவி பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வேட்டினான். இந்த வேலைக்காரனு க்கு மல்குஸ் என்று பெயர்.இந்த மல்குஸ் என்பவன் எபூசியன் என்று வரலாறு கூறுகிறது.

**4.துர்ராலோசனையைப் பிணைக்கும் இருதயம் :**

பேராசை- சங் 102




ஏவியர்

இவர்கள் நயவஞ்சகாரர்கள் என்றும் கூறுவர். மேலும் தரிசனமற்ற மக்கள் மற்றும் சந்தோத்தை நாடும் கூட்டம் (Hedonism)ஆதி 34ல் இந்த ஏவியர்கள் பேராசை பிடித்தவர்கள் என்பதை 23ம் வசனம் மூலம் தெளிவாக காணலாம்.

**5.தீங்கு செய்வதற்கு விரைந்தோடும் கால் :**

பெருந்தீனி- சங் 38




கிர்காசியர்

இவர்கள் ஒரு கொடூர கூட்டத்தார், இந்த ஆவி தங்களுடைய சரீரத்திற்கு தேவையான உணவுகளில் அதிக நாட்டம் கொண்டவர்கள். இதை இச்சிக்கிறவர்களின் கூட்டம் என்று வேதம் கூறுகிறது

**6.அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி :**

கோபம்- சங் 6




ஏத்தியர்

இவர்களை குறித்து ஆதி 10:15லிருந்து நாம் காணலாம். இவர்கள் அதிகம் போதைக்கு அடிமையான ஒரு ஜனக்கூட்டம். மேலும் அதிகம் கோபம் கொண்ட மக்கள் இவர்களை Sons of terror என்றும் கூறுவர்.

**7.சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் :**

சோம்பல்- சங் 143




பெரிசியர்

இந்த வகை கூட்டம் அதிக சோம்பேறித்தனம் உள்ள மக்கள். மேலும் இவர்கள் கிராமங்களை புகலிடமாக கொண்டவர்கள். தங்களை குறித்த தாழ்ந்த சிந்தனை(Lowself esteem) கொண்டவர்கள். ஆதி 13: 7ல் இதனை காணலாம்.

தம்பி, தங்கையே மேலே உள்ள பலத்த ஜாதியிடமிருந்து நீ கற்றுக்கொள்ள வேண்டியது, இந்த பாவ சிந்தனை அல்லது ஆவி உனக்குள் வராதபடி பார்த்துக்கொள்.இவைகளை உனக்கு முன்னின்று துரத்திவிட உன்னால் முடியாது தேவன் உனக்கு முன்பாக நின்று துரத்திவிடுவார். இந்த தபசு நாட்களை முடிக்கும் தருணத்தில் மேலே சொல்லப்பட்ட சங்கீதத்தை ஒருமுறை வாசித்து தியானம் செய்து, இந்த பாவங்களில் நீ ஈடுபட்டி ருப்பாயானால் அவைகளிலிருந்து மனந்திரும்பி புதிய வாழ்வை பெற அழைக்கிறோம். உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உனக்கு ஜெயம் கிடைக்கட்டும்.

*- Bro. Isacc Kamalesh*



வாக்குத்தத்ததை பெறுவதில்

# கர்த்தரே பங்கு

3rd week Message

Rev.Asirvatham

கர்த்தர் லேவியின் கோத்திரத்தை ஆராதனை செய்வதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் பிரித்தெடுத்தார். ஆகையால் லேவிக்கு அவன் சகோதரரோடே பங்கும் சுதந்திரமும் இல்லை. தேவனாகிய கர்த்தர். அவனுக்குச் சொல்லியபடி கர்த்தரே அவனுக்கு சுதந்திரம். உபா 10:8-9. அப்படியானால் லேவி வம்சத்தார் எங்கு குடியிருப்பார்கள்? லேவியரின் கால்நடைகள் பராமரிக்க இடம் எதுவுமுண்டா? எல்லா கோத்திரத்தாருக்கும் பொதுவான தேவபணி செய்யும் லேவி கோத்திரத்தார் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சுதந்தரம் பெற்றால் எல்லாருக்கும் பணிவிடை செய்வது எப்படி? இந்த லேவி கோத்திரத்தால் எல்லா கோத்திரத்தாருக்குள்ளும் தேவபணி செய்ய தேவ வசனத்தின்படி யோசுவா மூன்று பிரச்சனைகளுக்கு கரிசனையுடன் தீர்வு வழங்குகிறதை பார்க்கிறோம்

## சமூக வாழ்வில் பங்கு:

லேவி கோத்திரத்தார் குடியிருக்க பட்டணங்களை (யோசு 21:2,3,8) வசனத்தின்படி லேவியருக்குக் கொடுத்ததை பார்க்கிறோம்.லேவியின் கால்நடைகளுக்காக வெளிநிலங்களை லேவியருக்குக் கொடுத்ததையும் (யோசு 21:2,3,8),லேவி கோத்திரத்தார் காணியாட்சியின் நடுவேயிருக்கும் பட்டணங்களை லேவியருக்குக் கொடுத்தல் (யோசு 21:41 - 43: பட்டணங்களுக்கும் வெளிநிலமும் லேவியருக்கு கொடுக்கப்பட்டன. சுதந்தர பூமியைப் பங்கிடும் போது தேவ வசனத்தின்படி கொடுத்தார் (யோசுவா 20:1-24,33,14:5) சமூக வாழ்வில் பங்கில்லாத தேவ பணியாளர்களுக்கும் கரிசனை வைத்து பங்கில்லாத லேவியருக்கு வசனத்தின்படி பங்கீடு கொடுத்ததை பார்க்கிறோம் (யோசுவா 12:14,4:21, 1-3,41) கர்த்தர் சொல்லியபடி லேவி கோத்திரத்தாருக்கு கர்த்தரே சுதந்திரம்.

## சமூக வாழ்வில் பழிக்குள்ளானோர் பங்கு 20:1-2

தெரியாமல் செய்த, முன் விரோதம் எதுமின்றி கொலை செய்தவன் வாழ்வு பெற வாய்ப்புண்டா? பழிசெய்த சமூகத்திலேயே பாதுகாப்பாக வாழ சாத்தியம் உண்டா? ஒரு கோத்திர எல்லைக்குள் பழி செய்தவன் பிற கோத்திர எல்லைக்குள் பாதுகாப்பாக தஞ்ச மடைய வழியுண்டா? அல்லது கொலை செய்தவனை உடனுக்குடன் விசாரணையின்றி பழிக்குள்ளானோரை தண்டிக்கலாமா? இப்படிப்பட்ட கேள்விகளுக்கும் பதில் பெறும் வண்ணமாக யோசுவாவின் மூன்று அணுகுமுறை மூலம் வெளிப்படுகிறது. முன்விரோதம் எதுமின்றி கொலை செய்தவன் முறையீடு செய்யும் பழிக்குள்ளானோர் பாதுகாப்புக்கான அடைக்கலப்பட்டணத்தை (யோசு 20:4) கொடுத்ததை பார்க்கிறோம் மற்றும் கொலை செய்தவன் மறுவாழ்வு பெறும் பழிக்குள்ளானோர் மீது கரிசனையுடன் பாதுகாப்புக்கான அடைக்கலப்பட்டணங்களை(யோசு 20:5,6) மலைபிரதேசம், சமவெளி, வனாந்தரம் அடங்கிய ஆறு அடைக்கலப்பட்டணங்களை (யோசு 20:7,8)உண்டாக்கினான்.

## சமூக வாழ்வில் பரதேசிக்கு பங்கு (யோசு 20:9)

கிபியோனியரின் வஞ்சக வலையில் சிக்கி வாழ்வளிக்கும் உடன்படிக்கை பண்ணின இஸ்ரவேலின் தலைவர்கள் நிர்பந்த நிலையில் யோசுவாவை கிபியோனியரர் சபிக்கிறார்கள் (யோசுவா 9:22,23) சபிக்கபட்டவர்களை பணிவிடை செய்யும் அடிமைகளாக அங்கீகரிக்கிறார்.இந்த சுதந்தரமில்லா அடிமைகள்,பரதேசிகள் எங்கு வருவார்கள்? இந்த பரதேசிகளை இரண்டு பார்வையில் யோசுவா பார்க்கிறார்.பாதுகாக்கப்பட்ட பரதேசிகள் (யோசு 9:14,26 - வஞ்சித்த கிதியோனியர்) மற்றும் பணிவிடை செய்யும் பரதேசிகள் (யோசு 9:23,27) வஞ்சித்தோரையும் பாதுகாத்து பணியாட்களாக சந்ததி சந்ததியாக தங்களுக்குள்ளே வாழ கரிசனையுடன் அனுமதிக்கிறார்.

பொதுநலன்மற்றும்பின்சந்ததிக்குமாதிரியானதரங்களை,வரையறைகளை நிர்ணயித்து பிரச்சனைகளை அணுக முயற்சி செய்ய வேண்டும். பங்கில்லாத பணியாளர்,பழிக்குள்ளானோர், பரதேசிகளை கரிசனையுடன் ஆதரிக்க இறைஅருளுக்காக மன்றாடுவோம். மோசே, யோசுவா போல மனித வாழ்வின் பிரதான லட்சியமான பரலோக பாக்கியம் பெற்று மகிழ, பூலோக சவால்களை தேவபெலத்தால் மேற்கொள்ள தேவன் நம் அனைவருக்கும் அருள்புரிவாராக!

## அடைக்கலப்பட்டணங்கள்:

லாமேக் என்பவர் தம்மைக் கொல்பவருக்கு எழுபத்தேழு மடங்கு அதிக பழி சாற்றப்படும் என்றார் (ஆதி 42:4). நம்முடைய உயிர் எடுக்கப்பட்டால் அதற்கு சரியாக எழுப்பத்தேழு உயிர்கள் எடுக்கப்பட வேண்டும் என்பது இதன் பொருளாகும்.அதே நேரத்தில் பழிவாங்குவோரிடமிருந்து கொலைகாரரைப் பாதுகாக்கவும் சில வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. திட்டமிட்டுக் கொலைச் செய்யாமல், தற்செயலாகக் கொலைச் செய்ய நேரிட்டால், அவர் பலிபீடத்திற்கு ஓடிச்சென்று அதன் கொம்புகளைப் பிடித்துக் கொண்டால் தன் உயிரைக் காத்து கொள்ளலாம் (யாத் 21:13,14).

இஸ்ரவேலர் கானான் தேசத்தை வெற்றிகொண்ட பின்னர் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொள்வதற்கு பதிலாக அடைக்கலப்பட்டணங்கள் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.பலிபீடம் தேசம் முழுவதிற்கும் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே இருக்கும். ஆனால் அடைக்கலப்பட்டணங்கள் தேசத்தில் ஆறு இடங்களில் உருவாக்கப்பட்டதால் தவறுதலாக கொலை செய்தவர்கள் எளிதாக ஓடித்தப்பித்துக் கொள்ளலாம். இவ்வாறு அடைக்கலப்பட்டணங்கள் பலிபீடத்தின் கொம்புகளைப்பிடித்துக் கொள்வதை விட அதிகப் பாதுகாப்பைக் கொடுக்கக் கூடியதாக இருந்தன.

முதலாவது, குற்றவாளி அடைக்கலப்பட்டண வாசலை அணுக வேண்டும் (யோசு 20:3,4). அங்குள்ள மூப்பர்கள் முதற்கட்ட விசாரணை நடத்துவர். பட்டண வாசலருகே விசாரணை நடந்த அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. மூப்பர்கள் சம்மதித்தால், பட்டணத்தின் குடிமக்கள் முன்னிலையில் விசாரணை நடத்தப்படும் வரை (யோசு 20:5) அவர் அங்கே பாதுகாப்பாக தங்கிக் கொள்ளலாம். பின்னர் கொலை நடந்த சூழ்நிலையையும், காரணத்தையும் கருத்தோடு விசாரிப்பர். அது தற்செயலாக நடத்தது என்றால் (உபா 19:5,6) அவர் குற்றவாளி அல்லர் என்று தீர்க்கப்படுவர். ஆனால் பகையினிமித்தமாகவே கொலை நடைபெற்றது என்பது உறுதியானால் அடைக்கலப்பட்டணத்தின் மக்களே அவரைப் பழித்தீர்க்கக் காத்திருக்கும் குடும்பத்தாரிடம் ஒப்படைத்து விடுவர் (எண் 35:16-25, உபா 19:11-13). 'கொலைகாரனுக்கு இரக்கம்காட்டாதே. ஆனால் குற்றம் நிருபிக்கப்படும் வரை அவருக்குப் பாதுகாப்பு வழங்க தயங்காதே', என்பது தான் அடைக்கலப்பட்டணம் கூறும் செய்தியாகும்.

குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டாலும், அப்பொழுதுள்ள பிரதான ஆசாரியர் மரணமடையும் வரை அவர் அடைக்கலப்பட்டணத்திலேயே தங்கியிருக்க வேண்டும் (யோசு 20:5).பழிவாங்கக் காத்திருப்போரின் கோபம் தணிவதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. பிரதான ஆசாரியர் மரித்த பின்னர் யாரும் தம்மைப் பழிவாங்கி விடுவார்களோ என்ற பயமின்றி அவர் தம் குடும்பத்தாரிடம் சென்று வாழலாம்.

## சிந்தனைக்கு :

1. சமூக வாழ்வில் பங்கில்லாத தேவபணியாளர் மீது கரிசனை உண்டா? வசனத்தின்படி தேவ பணியாளரை ஆதரிக்க தீர்மானம் செய்வோமா?

2. சமூக வாழ்வில் பழிக்குள்ளானோர் மீது கரிசனை அருளி ஆதரிப்போமா?

3. சமூக வாழ்வில் பரதேசிகளை கரிசனையுடன் ஆதரிப்போமா?




ஒரு 7வயது சிறுவன் தன்னுடைய குடும்பத்தை காப்பாற்றுவதற்காக செருப்பு தைக்கும் தொழிலை செய்து வந்தான். அவன் 9 வயதில் இருக்கும் போது, அவனுடைய அம்மா காலமானார். அவனுக்கு 22 வயதாக இருந்த பொழுது தன்னுடைய கடையில் எழுத்தாளராக பணிபுரிந்த வேலையையும் இழந்தார். பிறகு 23ம் வயதில் கடனுக்கு உட்பட்டு ஒரு கடையில் பங்குதாரராக பணியாற்றினார். தமது 26வது வயதில் அவருடைய மனைவி அவரை அதிக கடனில் ஈடுபடுத்தி விட்டு இறந்து போனார். அவருடைய 35வது வயதில் காங்கிரஸில் சீட்டை பெறுவதற்காக போட்டியிட்டு இரண்டுமுறை தோல்வியடைந்தார். அவருடைய 37வது வயதில் தேர்தலில் வெற்றி பெற்றார். பின்னர் அவருடைய 39வது வயதில் மறுதேர்தலில் தோல்வியடைந்தார். அவருடைய 41 வது வயதில் தன்னுடைய நான்கு வயது சிறுவனும் இறந்து போனான். அவருடைய 42வது வயதில் நிலஅலுவலர் பணியில் சேர்க்கப்படாமல் நிராகரிக்கப்பட்டார். அவருடைய 45 வயது மேல் சட்டசபையில் இருந்து துரத்தப்பட்டார். அவருடைய 47வயதில் துணை தலைவருக்கான நியமத்திலிருந்து தோற்கடிக்கப்பட்டார். அவருடைய 51வது வயதில் அவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக தேர்ந்தடுக்கப்பட்டார். இப்பூமியில் இத்தனை தோல்விகளை தன்னுடைய வாழ்க்கையில் எந்த ஒரு மனிதனும் சந்தித்திருக்க மாட்டார்கள். இன்றும் அவருடைய பெயர் அமெரிக்க மக்களின் மத்தியில் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் அமெரிக்காவின் வரலாற்றில் அவருடைய பெயர் இடம்பெறும். அவர் வேறுயாருமில்லை ஆபிரகாம் லிங்கன் தான்.

சிறிது நேரம் நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்:

1. உங்களை தோற்கடிக்கப்பட்ட சூழ்நிலைகளை பற்றி நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?
2. உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தோற்கடிக்கப்பட்டதாக தோன்றும் பகுதிகள் எவை?
3. பைபிளில் தோல்வியை எதிர் கொண்டவர்கள் யார்?

மோசே, யோசேப்பு, இயேசுகிறிஸ்து, பவுல், சீலா, லாசரஸ் போன்றவர்கள் ஆகும். அவர்கள் தொடர்ந்து தோற்கடிக்கப்பட்டார்களா? அல்லது அவர்கள் வெற்றி பெற்றார்களா? என்பதை சிந்தித்து பார்ப்போம்.

**ஆண்டவர் ஒரு திட்டம் வைத்துள்ளார்: (GOD HAS A PLAN)**

நீங்கள் தோல்வியை எதிர்கொள்ளும்போது, ஆண்டவர் ஏதோ திட்டம் வைத்து உள்ளார் என்பதனை நம்புவது மிகவும் கடினமான ஒன்றாகும். எடுத்துக்காட்டாக இயேசுவின் சீஷர்கள் அவர் கைது செய்யப்படுவதை கண்டார்கள். அவருடைய உடலை கரடுமுரடாக காயப்படுத்தி சிலுவையில் போடப்பட்டதைப்பார்த்தார்கள் மற்றும் அவரை ஆணியில் அறைந்ததையும் பார்த்தார்கள். அவர் மரித்தது எனக்கு பின்னால் ஆண்டவர் ஏதோ ஒரு திட்டம் வைத்திருப்பதற்காக இதை செய்தார் என்பதை நினைத்திருக்க முடியுமா? எரேமியா 29:11-13ல் இஸ்ரவேலில் எழுபது வருடம் மக்கள் அடிமையாக இருந்தபோது ஆண்டவர் அவர்களை குறித்தும் ஒரு திட்டம் வைத்திருந்தார்.

**ஆண்டவர் ஒரு நோக்கம் வைத்துள்ளார்: (GOD HAS A PURPOSE)**

நாமும் ஆண்டவரின் பிள்ளையாக இருக்கும் போது, நமக்கு ஏற்படும் அனைத்தும் நன்மைக்காகவே என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக இயேசு சிலுவையில் மரித்தபோது, சாத்தான் வென்றதாகவும், ஆண்டவர் தோற்றதாகவும் நினைத்தான். ஆனால் ஆண்டவர் தோல்வியை வெற்றியாக மாற்றினார் மற்றும் உலகத்தின் பாவங்களுக்காக விலைகிரயம் செலுத்தியதின் விளைவாக, ஆண்டவருக்கும், மனிதர்களுக்கும் இடையே உள்ள உறவு சரி செய்யப்பட்டது. மரணத்தை தோற்கடித்து ஆண்டவர் வெற்றி பெற்றார். உங்கள் வாழ்க்கையை திரும்பிப் பாருங்கள். நீங்கள் பேரழிவு என்று நினைத்த இடத்திற்கு அழைத்து வந்துள்ளார் என்பது உங்களுக்கு தெரியவரும்.

**ஆண்டவர் வாக்குத்தத்தம் வைத்துள்ளார்: (GOD HAS A PROMISE)**

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு தான் மரித்தப்பின் உயிர்தெழுதலை பற்றி மூன்று முறை வாக்குத்தத்தம் தந்தார். வேதாகமத்தில் அனைத்துமே நமக்காகத்தான், காரியத்தை எதிர்கொண்டாலும் எவ்வளவு சாத்தியமற்றது என்று தோன்றினாலும், நீங்கள் அவரை பார்க்கவோ அல்லது அவரை உணரவோ முடியாவிட்டாலும், நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் நங்கூரமிடுங்கள். யோசு 1:5. உங்களுடைய காரியங்களில் தோல்வியை சந்தித்தது போல தோன்றலாம். சில நேரம் உங்களுடைய குடும்ப சூழ்நிலைகள் தோல்வியை சந்தித்தது போல தோன்றலாம். சில நேரங்களில் உண்மையாக கடினமாக உழைத்த பின்பும் தோல்வியை காணலாம். இவை அனைத்தும் ஏதோ ஒரு நோக்கத்தில்தான், இவை அனைத்தும் ஆண்டவரின் திட்டத்தின் ஒரு பகுதி யாகும். ஆனால் நீங்கள் எந்த ஒரு கடின உழைப்பும் இல்லாமல் தோல்வியை கண்டு இருந்தால், நீங்கள் எப்படி உழைக்க வேண்டும் என்பதை கற்றுக் கொள்ள வேண்டும். உங்கள் சூழ்நிலைகள் உங்களுக்கு எந்த வழியும் இல்லை என்று சொல்லும் போது, நீங்கள் இல்லை, என் வழியாக ஆண்டவருக்கு ஏதோ ஒரு திட்டம் உள்ளது என்று நம்பிக்கையோடு சொல்ல வேண்டும்.

உங்கள் இருதயம் இது முடியாது, இது சாத்தியமல்ல என்று சொல்லும் போது, நீங்கள் முடியும், ஆண்டவர் என்னை கைவிட மாட்டார் என்று நம்பிக்கையோடு சொல்ல வேண்டும். உங்களுக்கு வெற்றியை கொடுக்க யெகோவாநிசி உங்களுடன் இருக்கிறார். ஆண்டவர் நம்மை அவரிடம் நெருங்கி சேர்ப்பதற்காகவும் நம்முடைய சொந்த கால்களில் நிற்பதற்காகவும் நம்முடைய வாழ்க்கையை கடினமான பாதைகளில் நம்மை நடத்தி சென்று நமக்கு நலமானவைகளை கற்று கொடுக்கிறார்.



சாத்தானின் திட்டத்தில் அனைவரும் தோல்வியை மட்டுமே காண வேண்டும் என்பதற்காக, நம்முடைய வாழ்வில் வரும் சிறு, சிறு பின்னடைவுகளை மிக பெரிய தோல்வி போல் காண்பிக்கிறான். ஆனால் நீ உன் வாழ்வில் காண்பது தோல்வி கிடையாது. ஆனால் தோல்வி போல் காண்பிப்பதால், நீ உன் வாழ்வில் எந்த முயற்சி கூட செய்யகூடாது என்பதே அவனது திட்டம். ஆனால் நமக்காக எல்லாவற்றையும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் வெற்றிச்சிறந்தார். நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அது விசுவாசத்தோடு வெற்றியை பெற்றுக்கொளவது மட்டுமே. அவர் நம் வாழ்வில் ஒரு திட்டமும், நோக்கமும் வைத்திருக்கிறார். அதை பெற்றுக்கொள் பைபிள் முழுவதிலுமே வாக்குத்தத்தமாக கொடுத்திருக்கிறார். அதை கவனமாய் வாசித்து வெற்றியுள்ள வாழ்வை மேற்கொள்வோம்.

Mrs.Mercy Selwyn

ஐந்தாகமத்தின் கடைசிநூலாகிய உபாகமம் இஸ்ரவேலர் யோர்தான் நதிக்குக் கிழக்கே மோவாப்பில் குடியேறிய வரலாற்று நிகழ்வோடு முடிவடைகிறது. கர்த்தர் தங்களுக்கு வாக்களித்த கானான் நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு இஸ்ரவேலர் தங்களை ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர் உபா 11:8, 24:1-8 உபாகமத்தில் கடைசிப்பகுதி மோசேயின் மரணத்தை குறித்தும் அவருக்குப்பின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட யோசுவாவைக்குறித்தும் உரைக்கிறது.

பழைய ஏற்பாட்டில் வரும் யோசுவா முதல் எஸ்தர் வரையிலுள்ள நூல்கள் வரலாற்று நூல்களென அறியப்படுகின்றன. கானான் நாட்டில் வாழ்ந்த இஸ்ரவேலரின் வரலாற்று நிகழ்வுகளை உள்ளடக்கியதே இந்நூல்கள். தற்காலத்தில் நாம் காணும் வரலாற்று நூல்களைப் போலிராது. சற்று வித்தியாசமாகவே இவை உள்ளன. கர்த்தரோடு தமது மக்களுக்கு இருக்க வேண்டிய தொடர்பையும் கர்த்தர் தம் மக்களுக்குரைத்த நற்போதனைகளையும் இந்நூல்கள் கொண்டுள்ளன. மன எழுச்சியூட்டும் பல முக்கியச் சம்பவங்களும் கதாப்பாத்திரங்களும் சிறப்பிடம் பெறுகின்றன.




**முதலாவது:**

1. இஸ்ரவேலரின் வரலாற்றின் வரும் முதல் நிகழ்ச்சி யாதெனில் அவர்கள் எவ்வாறு கானான் நாட்டில் குடியேறினர் என்பதாகும்.
2. யோசுவா முதல் நியாயாதிபதிகள் வரையுள்ள பகுதி இஸ்ரவேலர் கானான் நாட்டினைச் சென்றடைந்ததை விவரிக்கின்றன. இவர்களின் குடியேற்றம் சில நேரங்களில் அமைதியையும் பலவேளைகளில் துன்பத்தையும் கொடுத்தது.
3. தனிப்பட்ட ஒரு சமுதாயமாக இஸ்ரவேலர் எவ்வாறு தங்களுக்கென்று வெவ்வெறு தலைவர்களைக் கொண்டு வாழ்ந்தார்கள் என்பதை நியாயாதிபதிகள் நூல் உரைக்கிறது.

**இரண்டாவது:**

1. இஸ்ரவேலர் பன்னிரு குலத்திற்கான உரிமைகளையும் அமைப்புகளையும் கைவிட்டு ஒரே அரசாட்சியின் கீழ் வந்தனர் என்பதேயாகும்.
2. 2 சாமுவேல் நூல்கள், சவுல், தாவீது அரசர்களின் அரசாட்சியைப்பற்றிக் குறிப்பிடுவதாகும்.
3. தாவீது அரசர் எருசலேம் நகரைக் தமது அரசாட்சிக்குத் தலைநகராக்கியதும் ஒரு சிறந்த நிகழ்ச்சியாகும்.

**மூன்றாவது:**

1. தாவீது அரசரின் காலத்திற்குப்பின் அவருடைய மகன் சாலமோன் அரசரானார். அவர் இஸ்ரவேலுக்காக முதல் தேவாலயத்தைக்கட்டியதோடு இஸ்ரவேல் நாடு செழிப்போடும், புகழோடுமிருக்க காரணமாயிருந்தார்.
2. சாலமோனின் மரணத்திற்கு பின் இஸ்ரவேலர் புரட்சி செய்தனர். அதன் விளைவாக அரசு இரண்டாக பிளவுப்பட்டது.
3. இவ்வாறு பிளவுப்படுத்தப்பட்ட அரசாட்சியைக் குறிப்பதாகும்.

**நான்காவது:**

1. கிமு 931 முதல் கிமு586 வரையிலும் வட தென்னாட்டு அரசர்கள் இஸ்ரவேல் யூதா மக்களை எவ்வாறு அரசாண்டனர் என்பதைக் குறித்த வரலாற்று உண்மைகள் 1,2 இராஜாக்கள், 1,2 நாளாகமம் நூல்களில் கூறப்பட்டுள்ளன.
2. இவ்விரண்டு பிளவுப்பட்ட அரசுகளும் பிற நாடுகளில் தோற்கடிக்கப்பட்டதும் இஸ்ரவேல் மக்கள் பிறநாடுகளுக்கு சிறைப்பிடித்துக் கொண்டு செல்லப்பட்டதும் ஆகும்.

**ஐந்தாவது:**

1. ஆமோஸ், ஓசியா போன்ற தீர்க்கர்களின் முன்னெச்சரிக்கையைப் பொருட்படுத்த வடநாட்டினரான இஸ்ரவேலர் கர்த்தரின் திருச்சட்டங்களுக்குக் கீழ்படியாது பிற நாட்டு தெய்வங்களை வழிபட்டு வந்தனர்.
2. கிமு 722/21-ல் அசீரியர்கள் இவர்களைத் தோல்வியுறச் செய்து பலரைச் சிறைப்பிடித்து சென்றனர். இஸ்ரவேலரின் கீழ்படியாமையே இச்சிறையிருப்பிற்கு வழிவகுத்தது.
3. ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் போன்ற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்காத தென்நாடான யூதாவின் மக்களும் கி.மு 588-ல் பாபிலோனியரிடத்தில் தோல்வியுற்று அந்நாட்டிற்குச் சிறைப்பிடித்துக் கொண்டு செல்லப்பட்டனர்.
4. கிமு 539-ல் பாரசீக அரசரான கோரேஸ் பாபிலோனை வீழ்ச்சியுற செய்து, இஸ்ரவேலரைத் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பிப் போகவும் அனுமதியளித்தார்.

இஸ்ரவேல் மக்கள் தங்களைக் கர்த்தருக்கு மீண்டும் அர்ப்பணம் செய்து, தங்கள் நாட்டிற்குத் திரும்பியதும், ஆலயத்தைக் கட்டியதும் எருசலேமின் மதிலைக் கட்டியதும் எஸ்றா, நெகேமியா நூல்களில் கூறப்பட்டுள்ளன.இஸ்ரவேல் மக்கள் வரலாற்றில் நான்கு தலைவர்கள் முக்கியமானவர்களாக இந்நூல்களில் அறியப்படுகின்றனர்.மோசேக்குப்பின் மக்களை நடத்திச் சென்ற யோசுவா அவர்களில் முதன்மை யானவர், இவர் இஸ்ரவேலர் கானான் நாட்டில் குடியேற மகிவும் உதவியவர் அதன்பின் சாமுவேல் ஓர் தீர்க்கராகவும், இஸ்ரவேலில் கடைசி நீதித்தலைவராகவும் இருந்தார்.கர்த்தரின் வழிநடத்துதலில் பற்று உறுதியற்ற இஸ்ரவேலரின் வேண்டுகோளுக்கு இணங்கி ஓர் அரசரைத் தெரிவுசெய்தும் கொடுத்தார்.மூன்றாவது நபர் யாவருக்கும் அன்புக்குரியவரான தாவீது அரசர் ஆவார். இவர் கர்த்தருக்கு உண்மையுள்ளவராக இருந்தோடு கர்த்தரின் நல்லாசியும் பெற்றிருந்தார். நான்காவது முக்கிய தலைவர் எஸ்ரா.இஸ்ரவேலர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வரவும், கர்த்தரை வழிப்படவும் திருச்சட்டங்களைக் கடைபிடிக்கவும் வழிவகுத்து மறுமலர்ச்சி ஏற்படுத்தினார்.

அன்பான சகோதர சகோதரிகளே, மேலே வாசித்த அனைத்து நபர்களும் ஒரு சாதாரண நபர்களே, அவர்கள் வாழும் பொழுது அவர்களுடைய வாழ்க்கை ஒரு சரித்திரமாக மாறும் என்று கனவுகூட கண்டிருக்கமாட்டார்கள்.ஆனால் இன்றைக்கு இப்படிப்பட்ட பைபிளிலே அவர்களுடைய வாழ்க்கை வரலாறாக மாறியிருக்கிறது. இன்றைய சம்பவம் நாளைய வரலாறு, ஒருவேளை நீயும், நானும் வாழ்கிற இந்த உலகத்திலே ஆண்டவர் வைத்திருக்கிற இடங்களிலே வரலாறு படைக்க ஆண்டவர் அழைக்கிறார்.சாதாரண மனிதர்களை கொண்டு அசாதாரணமான காரியங்களை செய்தார் என்று பைபிளில் வாசிக்கிறோம்.முக்கியமான நான்கு தலைவர்களை குறித்து மேலே வாசித்தோம். மோசே வேண்டாம் என்று சொல்லி ஒடுகிறவன், பேசத்தெரியாது என்று சொல்லுகிறவன், எனக்கு பதில் வேறுயாரையாவது அனுப்பும் என்று சொல்லி கோழைத் தனமாக இருந்தவர்களை தலைவர்களாக பயன்படுத்தி சரித்திரங்களை படைக்க பயன்படுத்தியிருக்கிறார்.நீயும் ஒருவேளை அப்படிப்பட்ட எண்ணத்தோடு நானல்ல, வேறுயாராவது செய்யட்டும் என்று விட்டுவிடாமல் உனது பங்கை,கர்த்தருக்காக செய்து முடிக்க ,நீ இருக்கிற இடங்களிலே இன்று வாழ்கிற இந்த வாழ்க்கையிலே வரலாறு படைக்க வா! வரலாறு படைக்கிறவர்கள் நாமல்ல, கிறிஸ்துவே நம்மை கொண்டு படைக்க போகிறார். வல்லவரின் கரத்தில் உன்னை படைக்க வா! வா வரலாறு படைக்க வா! விண்ணகம் செல்லும் வரை இவ்வுலகை வென்று வரலாறுபடைப்போம் வா!

-Bro.Selwyn



# ராகாபுடன் நேர்காணல்

செயல்படும் விசுவாசத்தினால் வரும் நீதிக்கு எடுத்துக்காட்டாக மாறி, உண்மையாக தன்னை ஊக்கத்துடன் தேடுகிறவர்களை கர்த்தர் உயர்த்தாமல் இருப்பதில்லை என்பதற்கு மாபெரும் எடுத்துக்காட்டு இவராவர். அன்பு நண்பர்களே இம் மாதம் நாம் சந்திக்கவுள்ள நபர் ராகாப்.

**கேரீத் பேட்டியாளர் :** வணக்கம் அம்மா! உங்களை சந்தித்தது மகிழ்ச்சி.

**ராகாப்** வணக்கம்!

**கேரீத் பேட்டியாளர்:** உங்கள பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

**ராகாப்:** என்னை பற்றி சொல்வா?... ம் என்னுடைய இளமை காலம் பாவ வாழ்க்கைதான்.நான் விரும்பியோ விரும்பா மலோ ஒரு விலை மாதுவாக ஆனேன். எங்கள் ஊர் எரிகோ. அந்த நாட்கள்ள சில ஜாதியினர் விபச்சாரத்தையே தொழிலா செய்பவர்களாக ஒதுக்கப்பட்டிருந்தோம். என்னுடைய வீடு எரிகோவின் மதில்மேல கட்டப்பட்டு இருந்தது.

**கேரீத் பேட்டியாளர்:** உங்களுக்கு அது பாவம்னு தெரியாதா? அதுல இருந்து வெளிய வர நினைக்கலையா?

**ராகாப்:** மற்ற பெண்கள் அருவருப்பா பார்க்கும் போது தான் நாம இப்படி ஒரு அழுக்கான வாழ்க்கை வாழ்ரோமேன்று தோனும். நிறைய முறை மத்தவங்க போல கணவர், பிள்ளைகள்னு வாழ ஆசை பட்டிருந்தேன். ஆனா என் சமுதாயம் அதை என்ன செய்ய விடல.

**கேரீத் பேட்டியாள** சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தி யாவில் கூட இப்படி ஒரு சமூகத்தை சேர்ந்த பெண்கள் இது போன்ற விபச்சார பாவத்துல தள்ளப்பட்டாங்க.ஏமி கார்மைக்கேல் போன்ற சில நல்லவர்களின் முயற்சியால் பிற்காலத்துல அது தடைசெய்யப்பட்டது.ஆனால் இன்றளவும் சில மாநிலங்களில் நடைமுறையில்தான் இருக்கு.(கர்நாடகம்-எல லம்மா) சரி நீங்க இதுல இருந்து எப்படி மீண்டு வந்தீங்க கொஞ்சம் சொல்லுங்களேன்.

**ராகாப்:** மோசே இஸ்ரவேலரை எகிப்திலிருந்து மீட்டு வந்தார். வழியில் அந்த மக்களுக்காக அவர்கள் வணங்கும் கடவுள் நிறைய அதிசயங்களை செய்தார்னு என் சிறுவயது முதல் நான் கேள்விப்பட்டிருந்தேன். அப்போதுதான் மோசேயின் மறைவுக்குப்பின் யோசுவா மக்களை தலைமையேற்று நடத்தினார். அவர்கள் பாலை வ னத்தில் அலைந்துக்கொண்டிருந்த காலம். எரிகோ என்னும் நகரம் மிகவும் காவல் பலத்துடன் இருக்கிறது. அதை இஸ்ரவேல் மக்கள் கைபற்ற வேண்டு மென்பது கடவுளின் திட்டமாய் இருந்தது. அந்த நகரத்தை வேவு பார்க்க யோசுவா அனுப்பிய உளவாளிகள் என்னோட வீட்டில தங்கினார்கள்.

**கேரீத் பேட்டியாளர்** ஆனா, நீங்க ஏன் அந்த உளவாளிகள காப்பாற்றினீங்க?

**ராகாப்:** எனக்கு தெரியும் இஸ்ரவேலின் தேவன் எவ்வளவு பெரியவர்னு, நிச்சயமா எரிகோவை மண்ணோட மண்ணாாக்குவார்னு அதான். அதுமட்டுமல்ல அவர்களை நான் காப்பாற்றினா அவர்கள் என்னை காப்பாற்றுவதாக சொன்னாங்க. எனக்கும் இந்த பாவமான வாழ்க்கையில இருந்து விடுபட ஆசையாயிருந்தது.

**கேரீத் பேட்டியாளர்** உங்களோட இந்த விசுவாசத்தையும், நம்பிக்கையும் கேட்கவே வியப்பா இருக்கு! அதனால தான் புதிய ஏற்பாடு உங்களை மறக்காமல் குறித்து வைத்தி ருக்கிறது! (எபிரேயர் 11:31).

**ராகாப்** அதைவிட மிகப்பெரிய பாக்கியமும், வியப்பூட்டும் அங்கீகாரமும் எனக்கு கிடைத்திருக்கிறது. பல நூற்றாண்டுகள் கடந்த பின் என் வம்சா வழியில் ஒரு மாபெரும் மனிதர் தோன்றினார். அவர் தான் இயேசு கிறிஸ்து!

**கேரீத் பேட்டியாளர்** பாவிகளை மீட்க வந்தேன் என பறைசாற்றிய இயேசு, தனது வம்சாவழியை பாவிகளோடு அடையாளப்படுத்திக் கொண்டே வந்தார் என்பது வியப்பூட்டுகிறது!"நான் இன்னார் பரம்பரையில வந்தவன்" என கர்வத்தின் கயிற்றைப் பிடித்து பரம்பரை தொங்குபவர்களுக்கு இயேசுவின் இந்த வம்சப் பரம்பரை தாழ்மை என்றால் என்ன என்பதைப் போதிக்கிறது.

அன்பானவர்களே! இன்னும் திருச்சபைகளுக்குள்ளும், இயக்கங்களுக்குள்ளும் இருக்கும் இப்படிப்பட்ட ஜாதி, சமூக ஏற்றதாழ்வுகளை வைத்து மனிதர்களை நாம் ஒதுக்கும் போது, கிறிஸ்துவையும் நாம் அப்படியே ஒதுக்குகிறோம் என புரிந்து கொள்வோம். நாம் எந்தக் குடும்பப் பின்னணியில் வந்தோம் என்பதை வைத்து நமது பரலோக வாழ்க்கை அளவிடப்படுவதில்லை. நாம் எந்த அளவு தேவ நம்பிக்கையிலே விசுவாசத்தில் இருக்கிறோம் என்பதை வைத்தே அளவிடப்படும் என்பதை நினைவில் கொள்வோம்.தாழ்மையின் வஸ்திரம் தரித்துக் கொள்வோம்! சரித்திரம் நம்மையும் நினைவு கூரும்!

- Mrs.Angel

# ஆகான்

யோசுவா 7

ஆகான் என்றால் கலங்கப்பண்ணுகிறவன் என்று அர்த்தம். யோசுவா புத்தகம் 7ம் அதிகாரத்தில் நாம் ஆகானைப் பற்றி அறிகிறோம். இந்த கதையை நாம் பார்த்தால் மதில் போன்ற சுவற்றையுடைய எரிகோ ம கா நகரத்தை ஜெயித்த இஸ்ரவேல் மக்களால், சிறிய பட்டணமான ஆயியை ஜெயிக்க முடியவில்லை, 36 வீரர்கள் கொல்லப்பட்டு, அவர்கள் படை தோற்கடிக்கப்பட்டது. இது எப்படியாகும்? எரிகோ மாநகரத்தை வென்ற படை, எம்முயற்சியும் செய்யாத ஆயி பட்டணத்திடம் எப்படி தோல் வியடைந்தது. இந்த தோல்விக்கு பின் உள்ள காரணம் என்ன? ஆம் இந்த கேள்வி யோசுவாவிற்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் எழுந்தது. யோசுவாவும், மூப்பர்களும், தங்கள் அங்கிகளைக் கிழித்து, ஏன் தேவனே இது எங்களுக்கு நேரிட்டது என்று கதறினார்கள். இதைக்கேட்டால் எதிரிகளும் இனிமேல் நம்மை தோற்கடிக்க வந்திடுவார்கள் தேவன் அவர்களுக்கு, இஸ்ரவேல் மக்கள் அவருக்கு விரோதமாய் பாவம் செய்தாலும், அவர்கள் எடுக்கக்கூடாத பொருள்களை திருடியதால் பொருள்களை அவர்களிடத்தி லிருந்து நீங்கி அவர்கள் சுத்திகரிக்கப்பட்டாலொழிய, தாம் அவர்களுக்கு உதவ முடியாது என பதிலளித்தார்.

தேவன் இதை கட்டளையிட்டதால், யோசுவா இக்கட்டளையை நிறைவேற்றினார். ஆகான் இப்பாவத்தில் அகப்பட்டான். தான் திருடிய பொருள்களை தன் கூடாரத்தின் கீழ் ஒழித்து வைத்ததாக அறிக்கையிட்டான். பின் யோசுவா ஏன் இதை செய்து, எங்களைக் கலங்கப்பண்ணினாய்? இன்று தேவன் கலங்கப்பண்ணுவார் என்றான். பின் இஸ்ரவேலர் அவனையும், அவன் வீட்டாரையும் அவனின் பொருட்களையும்,, அவன் திருடிய (பாவம் செய்த) பொருட்கள் அனைத்தையும் கல்லெறிந்து கொளுத்தினார்கள்.

> " தன் பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையாட்டான். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் "

நாம் ஆகானின் வாழ்க்கையைப் பார்த்தால் நம் வாழ்க்கையைப் போல், அவனின் வாழ்வில் 3 காரியத்தைக் கற்றுக்கொள்ளவேயில்லை.

**1. பாவம் தன்னை தொடரும் என அறியவில்லை.**

பாவம் நம்மை இன்னும் பாவம் செய்யவே வழிநடத்தும். இதுவே ஆகானின் வாழ்க்கையிலும் நடந்தது. நாம் யோசுவா 7 ல் ஆகான் பாவத்தை 5 விதமாகச் செய்தான் என்று பார்க்கிறோம். 1. இச்சித்தான் 2. எடுத்துக் கொண்டான் 3) களவு செய்தான் 4) வஞ்சித்தான் 5) ஒளித்துவைத்தான் ஆகான் பாவம் தன்னை தொடரும் என அறியவில்லை. ஆதலால் தேவனுக்கு விரோதமாய் பாவஞ்செய்தான்.

**2. தேவனின் பார்வைக்கு ஏதும் மறைவாயிருக்கவில்லை என அறியவில்லை:**

எபிரேயர் 4:13 சொல்லுகிறது, அவருடைய மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஆம் என் நண்பர்களே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்து நாம் எதையும் மறைக்க முடியாது. சங்கீத புஸ்தகத்தில் 139:2ல் தாவீது பாடுவது, என் நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிறீர். என் நண்பர்களே, நம் கர்த்தர் அகிலத்தி லும் இருக்கும் கர்த்தர், அவரின் கண்களுக்கு மறைவாய் ஒன்றுமில் லை. ஆகான் ஒருவரும் தன்னை பார்க்கவில்லை என நினைத்து அப்பொருட்களை ஒளித்து வைத்தான். ஆனால் தேவனுக்கு ம றைவானது ஒன்றுமில்லை என்பதை அவன் அறியவில்லை.

**3. பாவம் தன்னை பற்றிக்கொள்ளும் என அறியவில்லை:**

நாம் நம் பாவத்தை விட்டு ஓட முடியாது. ரோமர் 6:23ல் பாவத்தின் சம்பளம் மரணம் என்று பார்க்கிறோம். ஆகான் கர்த்தருக்குக் கீழ்படியாமல், கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தான். அவன் பாவம் அவனை தொடர்ந்து பிடித்தது, அவனையும் அவன் வீட்டாரையும் அவனின் சொத்துக்கள் அனைத்தையும் மரணம் விழுங்கியது. அவனுக்கும் அவன் சந்ததிக்கும் பாவம் வெட்கத்தைக் கொடுத்தது. 1 நாளா 2:7ல் ஆகான் என்றால் கலங்கத்தை கொண்டுவந்தவன் என்றிருக்கிறது. ஆகான், தன் பாவம் அவனைபற்றிக்கொள்ளும் என அறியவில்லை.

எனக்கன்பானவர்களே! பல வேளைகளில் நம் வாழ்விலும், நாமும் ஆகானைப்போல் இருக்கிறோம். நாம் நம் பாவம் நம்மைத் தொடர்ந்து வராது என அறியாமல் தொடர்ந்து அதை செய்து கொண்டிருக்கிறோம். நம் பாவத்தை மறைக்க முடியாது என அறியாமல் தேவனிடத்திலிருந்து அதை மறைக்கிறோம். அது நம்மை பிடிக்கும் என அறியாமல் இருக்கிறோம். ஆகான் அதை பார்த்தப்பின் அங்கிருந்து போகாததால், பாவம் அவனைத் தொடர்ந்தது. நாம் பாவம் நிறைந்த உலகில் வாழ்கிறோம். நாமும் கூட அனுதினமும் பாவ செயல்களினாலும், பாவ சிந்தனைகளினாலும் தடுமாறுகிறோம். ஆனால் நாமே அதை எதிர்க்க வேண்டுமா அல்லது அதன்படி போக வேண்டுமா என தீர்மானிக்க வேண்டும். ஆகான் அதி ன் வழிய போய் மரணத்தை அடைந்தான். நாம் எப்படிப்போக போகிறோம்? ஆகானுக்கு தன் பாவத்தை அறிக்கையிட்டு அதி லிருந்து மனந்திரும்ப நேரம் இருந்தது. ஆனால் அவன் தேவனிடத்திலிருந்து அதை மறைத்தான். நீதி 28:13ல் தன் பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்' என்று பார்க்கிறோம். நமக்கும் நம் பாவம் நம்மை பிடிக்காமல் இருக்க, அதை அறிக்கையிட்டு மனந்திரும்ப வேண்டும். ஆகான் அந்த நேரத்தை அலட்சியம் செய்து தண்டனையை அடைந்தான். நீங்கள் எதை தெரிந்தெடுக்க போகிறீர்கள்? பாவத்தையா? மனந்திரும்புதலையா? சிந்தித்து செயல்படுங்கள்.

ACHAN



யோசுவா 6ம் அதிகாரத்தில் இஸ்ரவேலர் பெரியதொரு வெற்றியை அடைந்தார்கள். எரிகோபட்டணத்தை பிடித்தார்கள் ஆனால் அடுத்தபட்டணத்தில் யுத்தத்திற்கு போன போது படுதோல்வியடைந்தார்கள் அதுதான் ஆயிபட்டணம். இந்த பட்டணத்தில் இவர்கள் தோல்வியடைந்த விபரத்தை 7ம் அதிகாரத்திலும் வெற்றி பெற்ற விதத்தை 8ம் அதிகாரத்திலும் விபரமாக காண்கிறோம். இந்த ஆயி பட்டணத்தில் வந்த வெற்றி தோல்விக்கு காரணங்களை கீழே காண்போம்.

## ஆயி பட்டணம் என்றால் என்ன?




ஜெப ஜீவியமும் செழிப்பான வாழ்வும் சுதந்தரிக்கப் போகிற நாம் சந்திக்க வேண்டிய அடுத்தப்பட்டணம் தான் ஆயி. இந்த ஆயிக்கு உரிய ஆவிக்குரிய அர்த்தங்களை பார்ப்போம்.

### 1. அழிவுக்குவியல்:

ஆயி என்பதற்கு அழிவுக்குவியல் என்று அர்த்தம் அந்த இடத்திற்கு இஸ்ரவேலர் யுத்தத்திற்கு போனபோது, 36 பேர் எதிரிகளால் வெட்டப்பட்டார்கள் என்று காண்கிறோம். முப்பத்தாறு பேர் கொல்லப்பட்ட இடம் செபாரீம் என்பதாகும். இதற்கும் அழிவுக்குவியல் என்றுதான் அர்த்தம். இந்த அழிவுக்குவியலை ஆசீர்வாதக் குவியலாக மாற்ற வேண்டிய பொறுப்பு யோசுவாவிற்கு உண்டு. இதற்காக தான் இந்த பட்டணத்தைப்பிடிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆனால் அந்த இடம் இஸ்ரவேலர்களை அழிக்கப்பார்த்தது. இது நமக்கு ஒரு எச்சரிப்பின் பாடம். கிறிஸ்தவ ஜீவியம் நமக்கு ஆசீர்வாதமானது ஆனால் இதையே சாபத்திற்கேதுவாக திருப்பிக்கொள்ளுகிறவர்களும் உண்டு. எனவே ஆயியை பிடிக்கும் போது அதை ஆசீர்வாதமாக்குவது எப்படி என்று கவனமாயிருக்க வேண்டும்.

### 2. வஞ்சிக்கப்படுகிற இடம்:

ஆயி பட்டணத்தை வஞ்சிக்கிற பட்டணம் என்று அழைப்பர்.அந்த இடத்தில் தான் யோசுவா என்ற பெரிய தளபதியும், இஸ்ரவேலரும் வஞ்சிப்பட்டார்கள். இந்த ஆயியை வேவு பார்க்க சில வேவு காரரை அனுப்பினார். அவர்கள் வேவு பார்த்துவிட்டு வந்து இப்படியாக சொன்னார்கள்.இந்த பட்டணத்தை இஸ்ரவேலருக்கு சுதந்திர தேசத்தின் ஒருபகுதியாக தேவன் தர சித்தமுள்ளவரானார். ஆயி சிறிய பட்டணம். எல்லாரும் போகவேண்டியதில்லை. கொஞ்சம் பேர் போனால் போதும் என்ற வேவு காரரின் கூற்றை நம்பி வெறும் 3,000 பேரை மட்டுமே படைதளபதி யோசுவா அனுப்புகிறார்.என்ன நடக்கிறது? எரிகோ கோட்டையை பிடித்து வெற்றி கண்ட பின்னர், ஆயி பட்டணத்தையும் எளிதாக மேற்கொள்ளலாம் என்று எண்ணி தோல்வி கண்டனர். எனவே இஸ்ரவேலருடைய இருதயம் தண்ணீராய் கரைந்து போயிற்று. பின்னர் தேவ வழிநடத்துதலின்படி தனது போர் அணுகுமுறையை மாற்றி பதிவிடை வைத்து வெற்றிபெற்றனர். முதன் முறையை போல் மேற்கொள்ளலாம் என்று எண்ணிய ஆயி பட்டணத்து கானானியர்கள் தோற்றுப்போனார்கள். பின்னர் சாபமாக இருந்த ஆயி பட்டணம் ஆசீர்வாதமாக மாறியது. கானானியருக்கு பதிலாக இஸ்ரவேலர் குடியேறினர்.

ஆயி ஏமாற்றக்கூடிய இடம், வஞ்சிக்கிற இடம். அன்று ஆயிப்பட்டணம் ஜனங்களை வஞ்சித்தது போல இன்று மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையிலேயும் நம்மை வஞ்சிக்கக்கூடிய சில ஆயி பட்டணங்கள் குறுக்கிடக் கூடும். அதனால் ஆயி ஒரு வஞ்சிக்கிற பட்டணம்.இந்த பட்டணத்தை அன்று யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரரும் சந்தித்தது போல இன்று நாமும் சந்திக்க வேண்டியது வரும். இந்த நாளிலும் கர்த்தர் நம்மோடு பேசி எச்சரிக்கிறார். உங்களையும் சாத்தான் வஞ்சிக்க நினைப்பான். உபதேசத்திலோ அல்லது வாழ்கை விஷயத்திலோ எப்படியோ வஞ்சிக்க கூடும். ஆகவே விழித்திருங்கள்.

### ஆயி பட்டணத்தில் பலிபீடம்:

ஆயி பட்டணத்தைப் பிடித்த பின்பு யோசுவா அங்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினார். பலிபீடம் எதற்காக? பலி செலுத்தி கர்த்தரை ஆராதிப்பதற்காகவே. இவ்விதமாக ஆயி பட்டணம் கர்த்தரை ஆராதிக்கிற பட்டணமாக மாறிற்று. இன்று நம் தேசத்தில் உள்ள பட்டணங்களும் கிராமங்களும், இந்த ஆயி பட்டணத்திற்கு வந்த அற்புத மாற்றம் போல் மாற்றம் அடைய கிராமங்கள் தோறும், சபைகளும், ஜெபவீடுகளும் எழும்ப யோசுவா போல் முன்னேறுவோமாக! ஜெய ஜீவியமும் செழிப்பான வாழ்வும் நமக்குண்டு.

### ஆசீர்வாதம்:

- சாபமான ஒரு பட்டணம் இஸ்ரவேலின் தேவனால் வெற்றியாக ஆசீர்வாதமாக மாறியது.
- பலிபீடம் இல்லாத இடத்தில் பலிபீடம் கட்டப்பட்டு தேவனை ஆராதிக்கும் இடமாக மாறியது.
- ஏபால் மலையின் மூலமாக ஒரு கட்டுப்பாட்டுடன் நடக்கும் இடமாக மாறினது.

தேவன் நம்மோடு இருந்தால், நாம் வசிக்கும் பட்டணம் இப்படியாக மாறலாமே. நாம் சுதந்தரிக்கப் போகும் பட்டணம் எப்படிப்பட்டது என்று தெரியுமா? சிறுப்பிள்ளையாயிருந்த பொழுது, அது தங்கப்பட்டணம், இயேசு பட்டணம், உன்னை நேசித்தார். உனக்காக அமைத்திட்டார் என்று பாடினோமே அந்த பட்டணத்தை சுதந்தரிக்க நாம் அவரது இரத்தத்தால் கழுவப்பட்ட நிச்சயத்தோடு ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டிருந்தால் இடம் நிச்சயம்.



- Mrs.Mehala Prabaker

### வாக்குத்தத்தை பெறுவதில்

# நமது பங்கு

**4th week Message**

இஸ்ரவேலின் 12 கோத்திரங்களுக்கும் கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த சுதந்திரம் அதை அவர்கள் பெற்றுக்கொண்டவிதம் தொடர்ந்து அதை அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை மூலம் நாம் அநேக ஆவிக்குரிய சத்தியத்தை பெற்றுக்கொள்ளலாம். இந்த யோசுவா புத்தகம் சுமார் 25 ஆண்டுகள் சரித்திரம் மட்டுமே. இதை பழைய ஏற்பாட்டின் எபேசியர் புத்தகம் என்றும் கூறுவர். இந்த புத்தகத்தின் ஒட்டுமொத்த தேவசெய்தி தனிமனிதனை பெயர்சொல்லி அழைத்து அவர்களை குடும்பமாக, கோத்திரமாக மாற்றி, தனது திட்டத்தின் படியே அவனை கானானுக்குள் பிரவேசிக்க செய்தது என்பது இன்று நம்முடைய வாழ்க்கையின் ஆவிக்குரிய பயணத்தின் இன்றியமையாத பாடமாகும். இதை தனிமனித, குடும்ப, சமுதாய பங்களிப்பாக கீழே காணலாம்.

**தனிமனிதனின் பங்களிப்பு:**

சிமியோன் கோத்திரத்திற்கு யோசுவா சீட்டுப்போட்டு நிலத்தை சுதந்திரமாக கொடுத்தான். சிமியோனுக்கு இரண்டாவதாக சீட்டு விழுந்தது. அந்த நிலப்பகுதி யூதாவின் சுதந்திரத்தின் நடுவில் அமைந்தது. அவர்களுக்கு என்று தனிப்பாதை இல்லாதபடி, நிலம் முழுவதும் யூதாவின் எல்லைக்குள் இருந்தது. ஏன் இப்படி ஒரு நிலத்தை கர்த்தர் இவர்களுக்கு கொடுக்க வேண்டும். பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர் என்று யாத் 34:6-7ல் வாசிக்கிறோம்.

ஆதி 34-ல் யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாளுக்கு நடந்ததை நாம் அறிவோம். சிமியோனின் துணிகரமான செயல் சொல் லப்பட்டிருக்கிறது. கர்த்தரின் திட்டத்தின்படி, செயல்படாமல் தன்னுடைய உணர்ச்சிகளின்படி செயல்பட்டான்.கர்த்தரின் சித்தப்படி செயல்படாமல், தன் உணர்வுகளுக்கு ஒப்புக்கொடுத்து சிமியோனை பின்நாட்களில் முற்றிலும் செயல்பட முடியாதபடி கர்த்தர் யூதாவின் நிலப்பரப்புக்குள் அடைத்துப் போட்டார்.

**குடும்ப பங்களிப்பு:**

தாண் கோத்திரம் யோசுவாவால் சீட்டு போடப்பட்டு சுதந்திரத்தை பெற்றவர்கள். அவ்வாறு 7 கோத்திரங்களுக்கு சீட்டு போட்டதில், கடைசி சீட்டு தாணுக்கு விழுந்தது (யோசு 19:40). இவர்களின் சுதந்தரம் யோர்தானுக்கு மேற்கில் யூதாவின் நிலப்பரப்புக்கும், எப்பிராயீம் நிலப்பரப்புக்கும் இடையிலான நிலப்பகுதி. தாணுக்கு மேற்கு எல்லையில் மத்தியத்தரைக்கடல் எல் லையாக அமைந்தது. இந்த நிலப்பகுதிதான் யோசுவா அவர்களுக்கு சீட்டுப்போட்டு பிரித்துக் கொடுத்தப்பகுதி. யூதாவின் நிலப்பகுதி யில் மேற்கு எல்லையில் மத்தியதரைக்கடல் ஓரங்களில் பெலிஸ்தியர் இருந்தார்கள். பெலிஸ்தியர்கள் தொடர்ந்து நியாயாதிபதி களின் காலத்திலும், இராஜாக்களின் காலத்திலும், குடியமர்த்தப்பட்ட இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு எதிராக செயல்பட்டு வந்தனர். இவர்கள் தேசத்திற்குள் நுழையாதபடி, தடுக்கும்பணி தாணுக்கு கொடுக்கப்பட்டது. தாண் என்பதின் பொருள் என்னவெனில் நிரூபிக்க அல்லது தீர்ப்பளிக்க (to vindicate/To Judge) எதிரிகளான பெலிஸ்தியர்களின் தொடர்படையெடுப்பினால் சோர்ந்து போன தாண் கோத்திரத்தார் கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட நிலத்தை விட்டுவிட்டு யோர்தானின் வட எல்லையில் புலம் பெயர்ந்தார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்த தரிசனத்தையும், அழைப்பையும், நினைக்காமல் தங்களுக்கு வந்த கஷ்டமான சூழ்நிலையினால் தரிசனத்தை மறந்தார்கள். தரிசனத்தை மறந்த தாண் கோத்திரத்தாரை கர்த்தரும் மறந்தார். வெளிப்படுத்தின விஷேசத்தில் அவரின் இரண்டாம் வருகையில் சேர்க்கப்பட இருக்கும் கோத்திரங்களில் (வெளி 7:5-8) தாணின் பெயர் இடம் பெறவில்லை. கர்த்தர் கொடுத்த தரிசனத்தையும் அழைப்பையும் நாம் இருக்கின்ற இடத்திலே செய்ய அதிக கவனம் உள்ளவர்களாய் இருப்போம்.

**சமுதாயப்பங்களிப்பு:**

யோர்தானையும், எரிகோக்கோட்டையையும் கடந்து கானானுக்குள் வந்த இஸ்ரவேலரில் முதல் சுதந்திரத்தை பெற்றவர்கள் யூதாபுத்திரர். யூதாவைத் தொடர்ந்து எப்பிராயிமும், மனாசே கோத்திரமும் அந்த பகுதியில் இருந்த கானானியரை தோற்கடித்து அந்த இடங்களில் குடியேறினார்கள். மீதமுள்ள 7 கோத்திரங்கள் சிமியோன், செபுலோன், இசக்கார், தாண், நப்தலி, ஆசேர், பென்யமீன். இந்த ஏழு கோத்திரங்களும் தங்கள் சுதந்திரத்தை எடுத்து கொள்ளாமல் அசதியாய் இருந்தார்கள் (யோசு 18:3). யோசுவா அவர்களைக் கடிந்து கொண்டு, கோத்திரத்திற்கு மூன்று பேரை தெரிந்து கொண்டு, தேசத்தை குறிப்பெடுக்கும்படி அனுப்பினான். அவர்கள் கொண்டுவந்த நிலக்குறிப்புகளை 7 பங்குகளாக எழுதி, கர்த்தருடைய சந்நிதியில் சீலோவிலே யோசுவா சீட்டுப் போட்டான் (யோசு 18:10). முதல் சீட்டு பென்யமீன் கோத்திரத்திற்கும், அதனை தொடர்ந்து சிமியோன், செபுலோன், இசக்கார், ஆசேர், நப்தலி, தாண் ஆகிய கோத்திரங்களுக்குச் சீட்டு விழுந்தது.

ஒரு சபையாக, இயக்கமாக நாம் சிந்திக்க வேண்டும். கானானுக்குள் வந்த பிறகும் தங்கள் சுதந்திரத்தை எடுத்துக் கொள்ளாமல், அசதியாய் இருந்தார்கள். ஆனால் தேவசித்தமோ அவர்கள் செயல்பட வேண்டும் என்றிருந்தது. நாமும் அசதியாய் இராமல் செயல்பட அழைக்கப்படுகிறோம். கடைசியாக சகோதரனே, சகோதரியே, தனிமனிதர்களாக நம்முடைய உணர்வுகளின்படி செயல்படாமல், சத்தியத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்போம். குடும்பங்களாக, நாம் வசிக்கும் இடங்களில் கர்த்தரின் தரிசனத்தை நிறைவேற்றுவோம். சமுதாயமாக, அசதியாக இருக்காமல் அதிக விழிப்புடன் கர்த்தரின் சித்தம் அறிந்து செயல்படுவோம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக ஆமென்!

**சிந்தனைக்கு:**

1.சமுதாயமாகவும், குடும்பங்களாகவும், தனிமனிதனாகவும்,நாம் கர்த்தருடைய சித்தத்தை புரிந்து நடக்கிறோமா?

2.மனித வாழ்வும்,அதின் இயலாமை தன்மையும்,அதில் கர்த்தரின் கிருபை எவ்வளவு அவசியம் என்பதையும் உணர்கிறோமா ?

3.கர்த்தருடைய ராஜ்யத்தில் நமது பங்கும் அவருடைய வழிநடத்துதலின் மகத்துவத்தையும், உணர்ந்து கொள்ளவோமா?



Bro.Jerome



# கண்டுபிடிப்பு

கிறிஸ்தவர்கள் பங்கு

**கண்டுபிடிப்பு: மின்கலப்பெட்டி** | விஞ்ஞானியின் பெயர்: வோல்ட்டா | **காலம்: 1800 இடம்: இத்தாலி**

கண்டுபிடித்த விதம்: செம்பு மற்றும் துத்தநாக தகடுகளை தனித்தனியாக துணியில் சுற்றி உப்பு தண்ணீரில் வைத்து இரண்டு முனைகளையும் ஒரு மின் கம்பியினால் இணைத்தார். உடனே 0.76 அளவிலான மின்சக்தி உண்டானது. இதை அதிகரிக்க ஒவ்வொரு தகடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தால் அதற்கேற்றபடி அதிக மின்சாரம் கிடைக்கும் என்று வோல்ட்டா கண்டுபிடித்தார்.

முக்கியநோக்கம்: 1780ஆம் ஆண்டு லூகி கல்வானி என்பவர் பித்தளை கம்பியில் மாட்டித் தொங்கிக் கொண்டிருந்த ஒரு தவளையின் காலை இரும்புக்கம்பியால் தொட்டார். தவளையின் கால் துடித்தது. உடனே கல்வானி இந்தத்தொடுதலினால் உண்டான சக்தி தவளையின் காலிலிருந்து வந்தது என்று நம்பினார். இதற்கு விலங்குகளின் மின்சாரம் என்று அழைத்தார். ஆனால் அவரது நண்பரும் விஞ்ஞானியுமான அலிசான்ட்ரோ வோல்ட்டா இதை மறுத்தார். மேலும் இரண்டு வித்தியாசமான உலோகங்களை இணைத்து மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்ற எண்ணம் அவருக்குள் எழுந்தது.

**BATTERY**






**கண்டுபிடிப்பு: மின்சக்தி** | **காலம்: 1752 ஜீன் இடம்: பிரிட்டன்**

விஞ்ஞானியின் பெயர்: பெஞ்சமின் ப்ராங்க்லின்

கண்டுபிடித்த விதம்: ப்ராங்க்லின் அவர்கள் தன் சொத்துக்களையெல்லாம் விற்று பட்டத்தின் மூலம் புகழ் ஆராய்சி செய்ய நினைத்தார். வானத்தில் ஏற்படும் மின்னல் மூலம் மின்சாரம் உண்டாகிறது என்பதை காண்பிப்பதற்காக, இடி மின்னலுடன் புயல் உண்டாகும்பொழுது பட்டத்தை பறக்க விட்டு அதன் நூலின் இறுதியில் ஒரு இரும்பு சாவியை கட்டிவைத்தார். அவர் நினைவுகளின்படியே மின்னல் ஏற்பட்டபொழுது அவர் பிடித்திருந்த இரும்பு சாவியின் மூலம் மின்சாரம் தாக்கியது.

முக்கியநோக்கம்: விஞ்ஞானிகள் செய்முறைப்படி நிலையான மின்சக்தியை எப்படி தயாரிப்பது என்பதை அறிந்திருந்தார்கள். இதற்கும் ஒரு அடி மேலாக பெஞ்சமின் ப்ராங்லின் என்பவர் பொருட்களின் மூலம் மின்சக்தியை உருவாக்க நினைத்தார். தன்னுறுதியுடைய தகடு. மறுநிலைத்தகடு ஆகிய பொருட்களை இணைப்பதின் மூலம் மின்சாரம் தயாரிக்க முடியும் என்பதை ஆராய்ந்து அறிந்தார். மேலும் மின்னல் ஒரு விதமான மின்சக்தியை அளிக்கிறது என்பதையும் நம்பினார்.

**BULB**

**கண்டுபிடிப்பு: மின்விளக்கு**

விஞ்ஞானியின் பெயர்: தாமஸ் ஆல்வா எடிசன்



**காலம்: 1879 நவம்பர் 4ம் தேதி**
**இடம்: அமெரிக்கா**

கண்டுபிடித்த விதம்: கரிமம் இழை, பிளாட்டினம் என்ற உலோக இழை மேலும் இதர உலோக வகைகளைக் கொண்டு அநேக செய்முறைகளைச் செய்து பார்த்துவிட்டு, கரிமம் இழைதான் நன்றாக செயல்படும் என்ற நோக்கத்திற்கு வந்தார். அக்டோபர் 22ம் தேதி முதல் செய்முறையை வெற்றிகரமாக செய்தார்.

முக்கியநோக்கம்: எடிசன் அவர்கள் அநேக கஷ்டங்களை கடந்து மனைக்குள்ளே (வீட்டிற்குள்ளே) பயன்படுத்தக்கூடிய மின்விளக்கைக் கண்டுபிடித்தார். மேலும் அவர் செம்புக் கம்பிகளின் தடிமனை பொறுத்து மின்விளக்குகளை தயாரித்தார். இதனால் குறைந்த அளவே மின்சாரம் தேவைப்பட்டது. மேலும் இது உயர்ந்த எதிர்ப்பு சக்திகளை உடையதாகவும் இருந்தது.






தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு
உலக தோற்ற முதல் அறிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்க
பயன்படுத்தியுள்ளார்.அவர்களுக்காக ஆண்டவரை துதிக்கவும்
என்னையும் இப்படிப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளுக்கு பயன்படுத்தும் என
ஆசையாய் அவரிடம் ஜெபித்து அவருக்கு பிரியமானவர்களாக வாழ்வோம்.

-Ms.Rini



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நடத்தும்

# தமிழ் மாநில முகாம் 2020

மே 2020

21 வியாழன் காலை 10 மணி முதல் – 24 ஞாயிறு மதியம் 1 மணி வரை

இடம்
**காருண்யா வளாகம்,**
கோவை



கருப்பொருள்
**சாவதானமாயிருங்கள்**
(BE VERY CAREFUL)
யோசுவா 22:5

செய்தியாளர்கள்
Rev. C. A. பெஞ்சமின்
சகோ. C. ரெஜினால்ட்
Rev. S. சுதர்சன் தாமஸ்
சகோ. Y. நவநீதர்
மற்றும் பணித்தள மிஷனெரிகள்

திருவிருந்து சிறப்பு செய்தி
சகோ. Dr. பால் தினகரன்
(இயேசு அழைக்கிறார்)

- பெரியவர், வாலிபர் இளம் வாலிபர் மற்றும் சிறுவர்க்கென தனித்தனி கூடுகைகள் உண்டு
- மே24ம் தேதி காலை திருவிருந்து ஆராதனைக்குப்பின் ஸ்கேன் (SCAN) அங்கத்தினருக்கான சிறப்பு கூடுகை நடைபெறும்

பதிவுக்கட்டணம்
பெரியவர் ரூ.300
சிறுவர் ரூ.150

தரிசனமிகு பாடல்கள்
அனலூட்டும் செய்திகள்
பணித்தள ஊழியர்களின் பகிர்வுகள்
இனிய சந்தியா வேளைகள்

ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும், மிஷனெரி தரிசனத்தில் வளரவும் ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக அணிதிரண்டு வாருங்கள்

## முகாம் வளாகம் வந்தடைய:

கோவை காந்திபுரம் பேருந்து நிலையத்திலிருந்து **சாடிவயல்**, **சிறுவாணி**, **கோவை குற்றாலம்** ஆகிய இடங்களுக்கு செல்லும் **14E**, **59C**, **59** வழித்தட பேருந்துகள் மூலம் காருண்யா வந்தடையலாம். இந்த பேருந்துகள் கோவை இரயில் நிலையத்தின் வழியாகவும் வந்து செல்லும்.

- ☆ முகாம் வளாகத்திற்குள் ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் தங்குவதற்கு தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- ☆ வேதாகமம், நோட்டு, பேனா, தட்டு, டம்ளர், போர்வை மற்றும் டார்ச்லைட் கொண்டு வாருங்கள்.
- ☆ மே 22ம் தேதி (வெள்ளிக்கிழமை) உபவாச ஜெபம் முடிந்தபின் மாலை 5.00 மணிக்கு உணவு வழங்கப்படும்.
- ☆ முகாம் முன் பதிவிற்கான மின்னஞ்சல் முகவரி: www.fmpb.co.in
- ☆ உங்கள் வருகை குறித்த தகவலைப் பயண ஒழுங்கிற்கான பொறுப்பாளர்களிடம் தெரிவித்தால் உங்களை சந்தித்து அழைத்து வருவார்கள்.

பயண ஒழுங்கிற்கு தொடர்பு கொள்ள....

சகோ. வெலிங்டன் - 9787733357 | சகோ. பால்ராஜ் - 8300803641

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
வாலிபர் & இளம் வாலிபர் பிரிவு
நடத்தும்

தமிழ்நாடு மாநில அளவில் நடைபெறும் இளைஞர்களுக்கான வேதாகம தேர்வு – 2020

# BAMB 2020

(Bible And Missionary Biography contest)

- வேதபகுதி: பழைய ஏற்பாட்டில் - எண்ணாகமம், புதிய ஏற்பாட்டில் - 1 & 2 பேதுரு
- மனப்பாட பகுதி: சங்கீதம் 46
- ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாத அறைகூவலில் வெளியிடப்பட்டுள்ள காலச்சுவடு பகுதிகளிலிருந்து கேள்விகள் கேட்கப்படும்.
- ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாத கேரீத் மாத இதழிலிருந்தும் கேள்விகள் கேட்கப்படும்.
- தேர்வு மாநில முகாமில் வைத்து மே 22ம் தேதி சந்தியா வேளைக்கு பின் மாலை 8.30 மணிக்கு நடைபெறும்.
- தேர்வில் முதன்மை பெறும் முதல் மூன்று நபருக்கு Study பைபிள் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்படும்.
- தேர்வில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழும் ஊக்கப் பரிசு வழங்கப்படும்.

மேலும் தொடர்புக்கு

FMPB YOUTH & TEENS WING | 9841973060, 9445001563

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை - 600053.
தொலைபேசி : 044-26570404, செல் : 9443039555, 9445048443